மாக்ஸிம் கார்க்கி

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

மாக்ஸிம் கார்க்கி

(வரலாறு)

அ. சிங்காரவேலு

எழுதியது.

***

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை, திருச்சிறுப்பள்ளி.

No. 39 Life of MAXIM GORKI

First Edition-January 1947.

Copy right.

Price Rs. 2—8—0

***

STAR Publications

Palakarai, Trichinopoly (H. O.)

Printed at the IMPERIAL PRESS, Negapatam for Star Publications, Trichinopoly-P. I. C. Ty. 9 [A] - QH-1000-copies

முகவுரை.

5656

மாக்ஸிம் கார்க்கியின் பெயரை இன்று உலக மக்கள் நன்கு அறிவர். அவர் எழுதிய நூல்கள் உலகமெங்கும் 120 மொழிகளில் 3-கோடியே 60 லட்சம் பிரதிகள் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. அவருடைய ஒப்புயர்வற்ற "அன்னை" இன்று தமிழிலும் வெளிவந்து விட்டாள். இது, கார்க்கியின் நூல்கள் மீது தமிழ் எழுத்தாளர் உலகுக்கு ஏற்பட்டுள்ள சிரத்தைக்கு அறிகுறி.

மாக்ஸிம் கார்க்கியின் வாழ்க்கை வரலாற்றை தமிழ் மக்களுக்கு விளங்கும்படி செய்வதற்கு பல நாட்களாக தோழர் அ. சிங்காரவேலு முயற்சி செய்து வந்ததை நான் நன்கறிவேன். இவர் ஒரு இளம் எழுத்தாளர். எளிய நடையில் கார்க்கியைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்து வதில் இப்புத்தகத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்.

கார்க்கியின் வாழ்க்கையை நாம் படிக்கும்போது, சில முக்யமான விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கார்க்கியின் நூல்களை விரும்பி படிப்பதற்கும் ஒவ் வொரு நாட்டினரும் தத்தமக்கு சொந்தமாக அவற்றை ஆக்கி கொள்வதற்கு போட்டி போடுவதற்கும், காரணங்கள்பலவுண்டு. அவற்றுள் முக்கியமானது, அவர் வாழ்ந்த வாழ்க்கையும், எழுதிய நூல்களும், மக்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும், மக்கள் கண்ட அனுபவங்களுக்கும் முற்றும் பொருத்தமாக இருந்தது. அவரே கூறுகிறார்: "பொறுக்கமுடியாத கொடுமைகளுக்கு ஆளாகி மக்கள் அவதியுற்று பரிதவித்த சோகக்காட்சிகளைப் பால் மணம் மாறாப் பருவத்திலிருந்தே நான் கண்டேன். பலர் பெருந்துயருக்கு ஆளானதையும், சிலர் செல்வத்தில் புரண்டதையும் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன்" ஒரு நாள், இரு நாளல்ல, நாடெல்லாம் அலைந்து திரிந்து மூலை மூடுக்கு களெல்லாம் பார்த்தார், இதனால் அவர் பெற்ற அனுபவம், அவருடைய உடலோடு இரண்டறக் கலந்து விட்டது. அது தான் அவருடைய நூல்.

பளிங்கு மண்டபத்திலே பாங்காக உட்கார்ந்து. கற்பனைகள் பல கட்டி, பேனாவை நீட்டி, அலங்காரச் சொற்றொடர்களை அடுக்கி, பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளும் எழுத்தாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்ல கார்க்கி. மக்கள் படும் கஷ்டங்களைத் தூரத்திலிருந்து பார்த்து, "ஐயோ கஷ்டப்படுகிறார்களே" என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் எழுத்தாளர்கள் ரகத்தைச் சேர்ந்தவருமல்ல. இவ்விரு சாராரும் மக்களினின்றும், மக்களுடைய வாழ்க்கை நிலைமைகளினின்றும் தம்மைப் பிரித்துக்கொண்டு "கலைக்காக கலையை சிருஷ்டிப்பவர்"களாக இருக்கின்றனர். "கலை கலைஞர்களுக்கே" என்ற தத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட இவ்வெழுத்தாளர்களின் நூல்கள் பாமர மக்களுக்குப் புரியாதவையாகவும், இதனால் சமுகத்தை மாற்றக் கூடிய சக்தியற்றவையாகவும் இருக்கின்றன. இதற்கு மாறாக "நான் எப்படி எழுத்தாளன் ஆனேன்?" என்ற கட்டுரையில் கார்க்கி, தனக்கு வழிகாட்டிய தத்துவத்தைப் பற்றி கீழ்க் கண்டவாறு கூறுகிறார்:—

"மனிதனுடைய விஷய ஞானத்துக்கு அப்பால் தனித்து நிற்கும் 'எண்ணம்' எதுவும் கிடையாதென்பது என் கருத்து. உலகில் சகல எண்ணங்களையும், வஸ்துக்களையும் ஆக்குவதும், அமைப்பதும் மனிதனே. அற்புதங்களைச் செய்பவனும் அவனே. இயற்கை சக்திகள் அனைத்தையும் அடக்கி ஆளுகிற எஜமானனும் அவனே. உலகிலுள்ள அழகிய பொருள்கள் யாவும் மனிதனாலும், மனிதனுடைய திறமையாலும். மனிதனுடைய உழைப்பினாலும் உண்டாக்கப் பட்டவையே. விஞ்ஞானத்தின் சரித்திரமும், கலைகளின் சரித்திரமும், நுட்ப வேலை முறைகளின் சரித்திரமும் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுவது போல, உழைப்புத் திறனை உபயோகப் படுத்தும்

முறைகளிலிருந்தே சகல விதமான எண்ணங்களும் உதித்தன. கண்கூடாகத் தெரியும் நிதர்சனத் தோற்றங்களுக்குப், பிறகே எண்ணங்கள் உதிக்கின்றன. நான் மனிதனை வணங்குகிறேன். ஏனெனில் மனிதனுடைய பகுத்தறிவாலும், சிந்தனையாலும் சிருஷ்டிக்கப்பட்டவற்றைத் தவிர வேறு எதையும் இவ்வுலகில் நான் பார்க்கவில்லை, உணரவுமில்லை.''

அவதியுற்ற மனிதனையும் அவனுடைய சமூகத்தையும் முதன்மையாகக் கருதிய கார்க்கி, அவனையும் அவனுடைய சமூகத்தையும் இவ்வுலகில் மாற்றியமைத்து, மனித வர்க்கத்தின் உயரிய லட்சியங்கள் ஈடேறும்படிச் செய்வதற்கு வழியுண்டா என்று சிந்தித்தபோது, மற்ற எழுத்தாளர்கள் முன் தோன்றுவது போலவே கீழ்க்கண்ட கேள்வி தன்முன் தோன்றியிருப்பதைப் பார்த்தார். எதை மாற்றுவது? எப்படி மாற்றுவது? வாழ்க்கை முழுமையுமா, அல்லது வாழ்க்கையில் காணும் குறிப்பிட்ட சில தனித்தனியான அம்சங்களை மட்டுமா?

தொங்கும் சதைபோல் சமூகத்தின் உடலில் பல சீர்கேடுகள் தொங்கிக் கொண்டிருக்கும் போது, அவற்றைப் பற்றி இன்று எந்த எழுத்தாளனும் எழுதாமலிருக்க முடியாது. மனிதனைப் பற்றி கதை எழுதினாலும், கவிதை புனைந்தாலும், ஓவியம் தீட்டினாலும், வாழ்க்கையில் காணப்படும் ஏதாவது ஒரு அம்சத்தை எழுத்தாளர்கள் வெளியிட வேண்டியிருக்கிறது. பரிகாசம் செய்து கண்டிக்கவோ, அல்லது ஆதரித்து புகழவோ வேண்டிருக்கிறது. சீர்கேடுகளை ஒழிப்பதற்கு கதை வாயிலாகவோ, கவிதை வாயிலாகவோ, ஓவிய ரூபமாகவோ மக்களுக்கு வழி காட்ட வேண்டிருக்கிறது. மேலும், இந்த சமூக சீர்கேடுகள் வெவ்வேறு ஜனப் பகுதியை வெவ்வேறு விதமாக பாதிக்கின்றன; ஒரு பகுதிக்கு முக்யமாகப் படுவது மற்றொரு பகுதிக்கு அவ்வளவு முக்யமாகப் படவில்லை. உதாரணமாக, தீண்டாமை ஒழிப்பு

ஒரு பகுதிக்கு முக்யமென்றால், வரதட்சணை ஒழிப்பு இன்னொரு பகுதிக்கு முக்யம். கோஷா ஒழிப்பு ஒருபகுதிக்கு முக்யமென்றால், விதவா விவாகம் இன்னொரு பகுதிக்கு முக்யம்.

ஆகவே கார்க்கியின் முன் தோன்றிய கேள்வி மிகவும் முக்யமானதாகும். வாழ்க்கையில் காணும் சில சீர்கேடுகளை மட்டும் திருத்துவதற்கு எத்தனிக்கும் எழுத்தாளர்கள் தனித் தனியான கோஷ்டிகளாக நிற்கின்றனர். சில சீர்கேடுகளைத் திருத்துவதற்காக மட்டும் எழுதுகிற எழுத்தாளர்கள் ஓரளவுக்கு முற்போக்கான காரியத்தையே செய்த போதிலும் அவர்களுடைய நூல்கள் சமூகத்திலுள்ள சகல பகுதிகளையும் அணைத்து நிற்கவில்லை. ஆகவே அந்த நூல்கள் சமூகத்திலுள்ள பல்வேறு பகுதியினருடைய வாழ்க்கையையும் மாற்றக் கூடிய தலை சிறந்த சக்தியாக விளங்க முடியாமற் போகிறது. அத்தகைய சக்தியாக விளங்கவேண்டுமானால் வாழ்க்கை முழுவதையும் மாற்றியமைப்பதற்காக திரண்டுவரும் பொதுஜன சக்தியின் வெள்ளப் பெருக்கில் எழுத்தாளர்கள் இரண்டறக் கலக்கவேண்டும். அத்தகைய எழுத்தாளர் கார்க்கி.

ஏனெனில், ருஷ்ய மக்கள் தங்களுடைய வாழ்க்கை முழுவதையும் மாற்றுவதற்காக நடத்திய புரட்சிப் போராட்ட இயக்கத்தில் அவர் ஆரம்பம் முதல் பங்கு கொண்டார். தன்னுடைய எழுத்துக்களால் அவ்வியக்ககத்தை ஊக்கப் படுத்தினார்.

ஆகவே கார்க்கி ஒரு சீர் திருத்தக்காரர் அல்ல. அவர் ஒரு புரட்சிக்காரர்.

மேலும், நம்முடைய மூதாதையர்கள் தங்களுடைய உழைப்பாலும், திறமையாலும், பகுத்தறிவாலும் தத்தம் காலத்திற்கு ஏற்றவாறு அமைத்து நமக்குத் தேடி வைத்த புராதனகலைகளையும், கவிதைகளையும், ஓவியங்களையும் இன்றைக்கு ஒவ்வாதவை என்று கூறி உதைத்துத் தள்ளும் "புரட்சி" எழுத்தாளர் ரகத்தைச் சேர்ந்தவர் அல்ல கார்க்கி. இதற்கு மாறாக, மனிதன் புராதன காலம் தொட்டு தன்

னுடைய உழைப்பால் உண்டுபண்ணி வாழையடி வாழையாக புதிய தலைமுறைகளுக்குக் கொடுத்து வந்த கலைச் செல்வத்தை அவர் கரைத்துக் குடித்தார். பெருமைப்படுத்தினர். பொது மக்கள் அனைவருக்கும் பொதுவான சொத்தாக அவற்றைப் பிரகாசிக்கச் செய்தார். இவ்விதம் அவற்றை மேலும் வளர்த்தார். அவர் கூறுகிறார்:—

"கடந்து போன காலத்தைப் பற்றி எழுத்தாளன் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் தெரிந்து கொள்வதினாலேயே அவனுக்கு தன்னுடைய காலத்தைப் பற்றியும், அக்காலத்தில் செய்ய வேண்டிய புரட்சிகரமான கடமைகளைப் பற்றியும் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்...

"தொன்று தொட்டு நாட்டில் வழங்கிவரும் பழமொழிகளிலிருந்து நான் அநேக விஷயங்களைப் புரிந்து கொண்டேன்..........."

இவ்விதம், பழமொழிகளையும் பழைய இலக்கியங்களையும் தன்னுடையதாக்கிக் கொண்டு தேசத்தின் இலக்கிய சரித்திரத்தில் ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியை கார்க்கி உண்டு பண்ணினர். லூயி ஆரகன் என்ற பிரசித்தி பெற்ற பிரெஞ்சு எழுத்தாளன் கூறுவது போல "புராதன ரஷ்ய இலக்கிய உலகையே—பழைய பாட்டுகளையும் கவிதைகளையும்— அவற்றைப் பாடி மகிழ்ந்த மக்களையும் — சரித்திரத்தின் கம்பீரமான முன்னேற்றத்தில் கார்க்கி தன்னுடன் சேர்த்து வெற்றி நடைபோட்டு அழைத்துச் சென்றார்"

ஆகவே, பழைய கலைச் செல்வத்தைத் தாக்கி அழிப்பதில் கார்க்கி புகழுடையவில்லை. அச்செல்வத்தை நன்கு நுகர்ந்து, அதில் கண்ட உயரிய அம்சங்களைத் தன்னுடையதாக்கிக் கொண்டு தன்னுடைய காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைக்குப் பொருத்தமாக இருக்கும் வண்ணம் புகுத்தி, மேலும், மேலும் முன்னேறுவதற்கு ஏற்றவாறு அமைத்து அவர் பிரகாசமடைந்தார்.

"எதை மாற்றுவது? எப்படி மாற்றுவது?" என்ற கேள்விக்கு பதில் கூறியதின் மூலம் உலகமெங்கும் பெரும் புகழ் அடைந்த கார்க்கியின் வாழ்க்கை, அக்கேள்விகளுக்கு எவ்விதம் பதில் கூறுவதென்று மற்ற எழுத்தாளருக்கு ஒரு வழியைக் காட்டுகிறது. இதைப் பற்றி பிரஞ்சு எழுத்தாளர் லூயி ஆரகன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:—

"........கார்க்கி காலமானார். அவருக்காக எண் திசையிலும் சோகக் குரல் எழுந்தது. நான் அவரைக் கண்டேன். அவர் நறுமலர்களின் நடுவே, சோகக் கண்ணீர் சிந்திய பச்சைச் செடிகளின் நடுவே தூங்கிக்கொண்டிருந் தார். அவர் மிகப்பெரிய பெருமைமிக்க மனிதர். தன்னுடன் எவ்வளவோ ரகசியங்களை அவர் எடுத்துச் சென்றுவிட்டார். அந்த ரகசியங்களைக் கண்டு பிடிப்பது நிரம்பக் கடினம். அவரோடு அந்த ரகசியங்களைப் பற்றிய அறிகுறிகளெல்லாம் மறைந்து விட்டன. அவை நற்குணங் களைப் பற்றிய ரகசியங்கள். மக்களைப் பற்றி மேலும், மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆவலை வெளியிடும் முடிவற்ற ரகசியங்கள். பொறுமையைப் பற்றிய ரகசியங்கள். கள்ளங்கபடற்ற தூய இதயங்கள் லட்சோப லட்சோபக் கணக்கில் மனமறியாமல் துடித்து வெளியிடும் அரிய ஓசை களைச் செவி கொடுத்துக் கேட்பது பற்றிய ரகசியங்கள். மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொண்டு, தான் கற்றுக் கொண்டதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும் மனித ராகவே அவர் எப்போதும் வாழ்ந்தார்.

"இது பத்து வருடங்களுக்கு முன்பு. இன்னும் அவருடைய நிழல் நம் தலைக்குமேல் விழுந்து கொண்டிருக் கிறது. இன்னும்—சரித்திரத்தில் பத்து வருடங்கள் கழிந்த பிறகும் கூட—இவ்வுலகில் மிகவும் பயங்கரமான பத்து வருடங்கள் உருண்டோடிய பிறகும்கூட— அது நமக்கு மேல் நின்றுகொண்டிருக்கிறது. அந்த நிழல் இதுவரை பதில் கூறப்படாத கேள்வியின் நிழலேயாகும். சாவுகள், தியாகங் கள், பயங்கரக் கொடுமைகள், துக்கங்கள், குற்றங்கள், எல்லாம் — பயங்கரமும் மிருகக் குணமும் கண்டு பிடிக்கக் கூடிய கொடுமைகள் யாவும் இழைக்கப்பட்டன. எனினும், அது இன்னும் ஒரு பதில் கூறப்படாத கேள்வியே......

“கலை உலகின் கர்த்தாக்களே! கொல்லப்பட்டவனுக்கு பதிலாக கொலை செய்தவனுக்கு வாழ்க்கையில் சுகம் அளிக்கப்படும்போது, நீங்கள் யார் பக்கத்தில்? படுகொலையிலிருந்து பெரும் நஷ்டமடைந்து தள்ளாடி எழுந்து நிற்கும் வீரம் மிகுந்த தேசங்கள், அவற்றின் போலி “நேச நாடுகள்” தங்களுடைய விரோதிகளாக பாவிக்கும்போது நீங்கள் எந்தப் பக்கத்தில்?.........

“.........கணக்குப் போட்டுக் கணித்துப் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை. நிறைவையும், சூன்யத்தையும் நிறுத்துப் பார்க்கத் தராசு இல்லை. மனிதனுக்கும், மனிதப் பற்று எதுவுமற்றதுக்குமிடையே ஒத்திட்டுப் பார்க்க எடுத்துக் காட்டு எதுவுமில்லை. நீங்கள் எந்தப் பக்கத்தில்?

“நீங்கள் பதில் கூறுமுன் உயிர் நீத்துவிட்ட அவர் இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்டபோது, எதிர்காலத்தில் என்ன வரப்போகிறது என்று அவரால் பார்க்க முடிந்தது. என்றென்றைக்கும் எவரும் கஷ்டப்படாத வகையில் கஷ்டப்படவிருந்த தன்னுடைய மக்களுக்கு நடுவே அவர் இருந்தார். அழிப்பதற்காக தீவைத்துக் கொளுத்தப் பட்ட மரங்கள் நிறைந்த காட்டைப்போல், கொல்லப் படுவதற்காகக் குறித்து வைக்கப்பட்ட ஒரு கோடியே எழுபது லட்சம் மக்களுக்கு நடுவே அவர் இருந்தார். அப்போது அவர் “எந்த பக்கத்தில் நீங்கள்?” என்று உங்களைக் கேட்டார். சமாதான வளர்ச்சியில் ஓங்கிப் பெருகியிருந்த இயந்திரத் தொழில்களுக்கு நடுவே, உக்ரேனிய கோதுமை வயல்களால் சூழப்பட்டு, நீர்வீழ்ச்சி மின்சார உற்பத்தித் திட்டங்கள் மகத்தான வேகத்துடன் நிறைவேறிய போது, இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகள் எதிர்காலத்துடன் காதையடைக்கும் வண்ணம் உருக்கப் பேசிக்கொண்டிருந்தபோது அவர் கேட்டார். முன்பு கண்ட கனவுகள் யதார்த்த உண்மைகளாக ஆகிக்கொண்டிருந்தன. இவ்விதம் சமாதான சூழ்நிலையிலேயே அவருக்கு வரப்போகிறது என்ன என்பது தெரியும். அப்போது அவர் கேட்டார். “யார் பக்கத்தில் நீங்கள்?”

"நான் ஒரு பிரஞ்சுக்காரன். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள சிறியதோர் ஜன்னலிலிருந்து பேசுகிறேன். இந்த ஜன்னல் பெருமையற்றது. மக்களின் உழைப்பாலும், உறுதியாலும், வீரத்தாலும், ஊக்கத்தாலும் பெருமையடைந்தது. நான் பிரஞ்சுக்காரன். அதனாலேயே பாரிஸ் மாநகரத்தில் ஆரம்பமாகும் சமாதானத்தைப் பாதுகாப்பதில் எனக்கு ஒரு முக்ய கடமையிருக்கிறது. இந்த இடத்திலிருந்து நான் சத்தம் போடுகிறேன். உயிர் நீத்த ஒரு கோடியே எழுபது லட்சம் மனிதர்களில் ஒருவன், இன்றைக்கு எதை வாயைத் திறந்து சத்தமிட்டுக் கூறமுடியாமலிருக்கிறானோ அதையே நான் கதறிக் கூறுகிறேன். "கலை அறிஞர்களே," "எழுத்தாளர்களே," இதுதான் நேரம். சொல்லுங்கள் உங்கள் பக்கத்தை. சமாதானம் நிலவ வேண்டுமென்பதற்காக சொல்லுங்கள். மனிதர்களை நிர்ப்பந்தித்து சமாதானத்தை நிலை நாட்டும்படி உங்களால் செய்யமுடியும், நீங்கள் கண்டிப்பாக செய்துதான் ஆகவேண்டும். இன்றைக்கே, நாளைக்கல்ல. வாருங்கள். சொல்லுங்கள். நீங்கள் எந்தப்பக்கத்தில்?"

தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் அன்பர்களும், இப்புத்தகத்தைப் படிக்கும் பல்லாயிரக் கணக்கானவர்களும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். எந்தப் பக்கத்தில் அவர்கள் நிற்கின்றனர். நிற்கப்போகின்றனர். உலக வாழ்க்கையை எப்படி மாற்றப்போகின்றனர் என்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும். அதுவே மாச்ஸிம் கார்க்கி வரலாறு போடும் கேள்வி.

சென்னை,
31—12—46. } ஸி. எஸ். சுப்ரமண்யம்.

ஆசிரியன் முன்னுரை.

சளையாத உலக இலக்கியத்துடன் தோள்தட்டி உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் நம் தமிழகம் இப்பொழுது புத்தம் புதிய கருத்துக்களை கேள்க்கின்றது; புதுமை நிறைந்த பேரரறிஞர்களின் வரலாறுகளை கேள்க்கின்றது.

நம் சரித்திரத்தில், இலக்கியத்தில், பொருளாதாரத்தில், அரசியலில், நம் அன்றாட வாழ்க்கையிலே புரட்சியை தாண்டச்செய்யும் இம் 'மகா மனிதன்' வாலாற்றினை தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றோம். இது தனித்தன்று.

அன்றைய ரஷ்ய மக்களின் பரிதாபகரமான வாழ்க்கையோடு கட்டிப் பிணைத்து வருவது; ஜாரின் கொடுங் கோன்மைக்கு பலியிடப்பட்ட துன்பம் நிறைந்த வாழ்க்கையினை பிரதிபலித்துக் காட்டுவது;

மனித ஜாதியின் சரித்திரத்தோடு ஓட்டிவருவது, அல்லல்பட்டு துன்புற்றுத் தவித்தலையும் மனித வர்க்கத்திற்கு அபயமளிப்பது; புத்தம் புதிய கருத்துக்களையும், சித்தாந்தங்களையும், நம்மை சிந்திக்கச்செய்வது.

கார்க்கி ஓர் லட்சிய புருஷன், புரட்சி வீரன், கலையின் பிதா. மனித வர்க்கத்திற்கு வழிகாட்டிய இலக்கிய மேதை; பேரறிஞன்; சுருங்கக்கூறின் ஓர், நல்வாழ்க்கைத் திறவுகோல்; ஞானதீபம்.

அவன் இறந்தான். இல்லை. உலாவிக்கொண்டிருக்கும் அவன் நூல்களிலும், வாழ்கையிலும் ஒளிந்து நிற்கும் அவன் ஜீவ ரகசியத்தை, அவன் நல் போதத்தை, வத்தை நம் தமிழகத்தில் ஸ்திரப்படுத்துவோம்.

தாங்தே சொன்னது போன்று அவன் வாழ்க்கை மல்லிகை மொக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மெல்லிய அன்னத்தூவியின் மீது நடந்து செல்லவில்லை. கற்களும்,

மூற்களும், பாறைகளும் நிறைந்த கர்ண கடூரமான வாழ்க்கையில் உழன்று, புத்தம் புதிய வழியைக்கண்டான். அதுவே அவன் ஜீவிய சரிதம் - இச்சிறு நூல் விவரிப்பது.

கார்க்கியின் இவ்வரலாறு பற்றிய சகல விஷயங்களையும் வாசகர்களின் நியாயத் தீர்ப்புக்கு விட்டு விடுகிறேன். இவனை அறிமுகம் செய்து வைத்திருக்கும் அறிஞர் வி. எஸ். எஸ். அவர்களின் ஒவ்வோர் வரிகளும் நிறைய அர்த்தம் கொண்டது. சாலச்சிறந்த ஒவ்வோர் வாக்கியங்களாலும் நம் மனச்சாட்சியை கிளர்த்தி விடுகின்றார். நாம் எந்தப்பக்கம்! வாசகர்கள் அதனை மீண்டும் படித்து, தங்கள் சிந்தனை சக்திக்கு இடங்கொடுக்க வேண்டுமென்பதுதான்- இதனை எழுதுபவனின் கோரிக்கையும்.

இதனை எழுத துணைபுரிந்த பல நூல்களையும், குறிப்புகளையும் காட்டிலும், அவற்றை எனக்கு அன்புடன் அளித்து உதவிய தோழர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்களையும், ஸ்ரீயுத வி. ஆர். எம். செட்டியார் அவர்களையும், ஜி. வைத்திலிங்கம் அவர்களையும் இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டவன். இவர்களுக்கு நான் நன்றி சொல்வதற்கன்று. இன்னும் உதவிய நண்பர்கள், எழுத்தாளர்கள் சிலருக்கும் சரி. தன்னலம் கருதாத இவர்கள் – இவ்வரலாற்றை எழுதியவன் சரிவர தன் கடமையை செய்து முடித்தான் என அவர்கள் மேலான அபிப்பிராயத்தில் படுமாயின் – அதைத்தான் அவர்களும் விரும்பி நிற்பர்.

இந் நூல் நம் மக்களின் இன்றைய நிலையினின்றும் சிந்தித்துப்பார்க்கும் ஓர் தூண்டுதலை, எழுச்சியினை அளிக்கக் கூடுமாயின் உண்மையில் இதனை எழுதியவன் மகிழ்பவன்.

தமிழ் புத்தக உலகிலே அவன் நூல்களை வெளியிட முன் வந்த ஸ்டார் பிரசுராலயத்தினர் உண்மையில் வெற்றி பெற்றவர்கள். முதன் முறையாக தமிழகத்திற்களிக்கும் பெருமை !

பொரவச்சேரி, சிக்கில்,
10—1—47.

அ. சிங்காரவேலு.

பொருளடக்கம்.

எண்		பக்கம்
	முகவுரை	v
	முன்னுரை	xiii
1	பெற்றோர்கள்	1
2	பாட்டன் வீட்டில்	4
3	இளமைப்பருவம்	9
4	காஸானில்	23
5	ரொட்டிக்கிடங்கில்	29
6	தற்கொலை முயற்சி	36
7	புனர் வாழ்க்கை	41
8	நாடோடிப் பிழைப்பு	50
9	வதைக்குந் தண்டனை	60
10	முதல் கதை	68
11	வாழ்வின் (உதயம்)	77
12	தாய் நாட்டின் புகழ்மாலை	81
13	மீண்டும் சிறைவாசம்	87
14	தேசப்பிரஷ்டம்	93
15	அர்ஸமாஸ் வாசம்	99
16	நாடகங்கள்	104
17	புரட்சித்தீ	113
18	லெனின் சந்திப்பும் வெளிநாட்டு சுற்றுப்பிரயாணமும்	120
19	அஸ்தமன வாழ்க்கை	126
20	அதிமானுஷ்யன்	130
	அனுபந்தம் 1	140
	அனுபந்தம் 2	161
	கார்க்கி வாழ்க்கை குறிப்பு	174
	தொழிலாளர்கட்கு ஓர் கடிதம்	181
	கார்க்கி எழுதிய நூல்கள்	183

பிரகாசமும், சக்தியுங் கொண்ட அந்த நக்ஷத்திரம் நம்மைக் கண்டு அடிக்கடி கண் சிமிட்டுகின்றது. அது, அதன் பேசா சமிக்ஞை. நீங்கள் இதனை படித்து உணர்ந்த பின்னர் அது உங்களிடம் பேச ஆரம்பிக்கும். அதில் இனிமை உண்டு.....................

"மாக்ஸிம் கார்க்கி"

— வரலாறு. —

1 பெற்றோர்கள்

ரஷ்யப் பழமொழியொன்று கூறுகிறபடி "துக்கத்தால் சூழப்பட்ட நாம் துக்கத்தையே சுவாசிக்கின்றோம்" என்பதுதான் கார்க்கியின் குடும்பத்தார்களுக்கு நித்திய ஜெபமாக இருந்திருக்க வேண்டும். கார்க்கிக்கு தன் பெற்றோர்களைப் பற்றி எதுவும் அதிகம் தெரியாது. அவன் பாட்டி அகுலினா இவாநோவ்னா சொல்லியிருக்கின்றாள். அவன் தகப்பனார் மாக்ஸிம் செவ்வேட்டி விச்சைப் பற்றியும், அவன் பாட்டன் செவிதி பெஷ்கோவைப் பற்றியும், அவன் குடும்பத்தைப் பற்றியும், மற்றுமுள்ளவர்களைப் பற்றியும் எல்லாம்.

"அவன் தந்தை யோக்யமான ஓர் ரஷ்ய மனிதன். அவனைப்பற்றி எதுவும் பின்னுக்கு வைக்காதபடி வாழ்விலிருந்து அவன் அற்றுப் போய்விட்டான். அவனது உருவப் படங்கூட இல்லை.

"அவன் பாட்டன் செவிதி பெஷ்கோவ் ஓர் பயங்கர மனிதன். சிப்பாய். ராணுவத்தில் அநேக வருடங்கள் வேலை பார்த்தான், மேல் உத்தியோகஸ்தனாக வந்தான். ஆனால் அவனது கொடிய வாழ்விலே, அவன் கீழ் உத்தியோகஸ்தர்களின் சூழ்ச்சியின் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டதுடன், சைபீரியாவுக்கும் நாடு கடத்தப்பட்டான்.

அவன் இறந்த பிறகு கார்க்கியின் தந்தை சைபீரியாவிலிருந்து காலால் நடந்தே கடைசியாக வால்கா மண்ணிற்கு, நிழனி நோவகோரட் என்ற அந்த ஊருக்கு வந்தான். பிழைப்பு நிமித்தம் தச்சு பட்டறை ஒன்றில் போய்ச் சேர்ந்து பெட்டிகள், மாச்சாமான்கள் முதலியன செய்யக் கற்றுக் கொண்டான்.

அதிலே சாயவேலையும் உண்டு. அதன் சொந்தக்காரனை கஸ்ஷிரினின் மகள் மாதர்மணி அந்த வார்யாவைத் தான் பின்னிட்டு விவாகம் செய்துகொண்டான்.

விவாகம் ஆனதிலிருந்து அந்த கஸ்ஷிரின்களுடனேயே அவர்கள் வீட்டில் மாக்ஸிம் செவ்வேட்டி விச்சும் காலம் கழித்தான் நிழனி நோவாகோரட்டிலுள்ள இருண்ட ஓர் ஆபாசமான தெருவு. வீடு ஓர் குடிசை வீடு. அங்கே தான் 1868 மார்ச்சுமாதம் 17ல் மாக்ஸிம் கார்க்கி பிறந்தான். அவனுக்கு அலெக்ஸி என்ற நாமத்தைச் சூட்டினார்கள் பெற்றோர்கள். ஆனால் ஊரார் அலோஷா வென்று அவனை அழைக்கத் தொடங்கினார்கள்.

அந்த தெருவில் சதா சண்டையும் சதா சத்தமும் தான்; ஓயாமல் கத்திக்கொண்டே இருப்பார்கள். கஸ்ஷிரின்களுக்குள் அடிக்கடி கலகம் வந்து விடும். வீட்டில் பெண்களைப் போட்டு அடிப்பார்கள். இத்தகைய கோர நிர்த்தியத்தில்தான் மாக்ஸிம் செவ்வோட்டிவிச் இருக்க வேண்டியதாயிற்று.

அவனை அந்த வீட்டிலே விகற்பமாகத்தான் பாவித்து வந்தார்கள். ஓர் நாள் குளிர்காலம் அது. கஸ்ஷிரின் சகோதரர்கள் அவனை பனியில், ஓர் குழியில் தூக்கி எறிந்து

விட்டார்கள். ரொம்ப சிரமப்பட்டு கரையேறி வாழ்விற்குத் திரும்பினான். இந்த மானக்கேட்டை யாரிடமும் அவன் சொல்ல வில்லை. அப்பொழுதே அவ்வீட்டை விட்டு எங் காகிலும் போய்விட வேண்டுமென்று தோன்றி விட்ட தவனுக்கு.

வால்காவிலிருந்து ஐஸ்ட்ரகானுக்கு குடிவந்தான். துரதிர்ஷ்டம் அங்கும் அவனை விரட்டிப் பிடித்துக் கொண் டது. கார்க்கிக்கு அப்பொழுது வயது நான்கிருக்கும். சிறு வனுக்கு காலரா கண்டது. சில நாளில் குணமானான். ஆனால் அவன் தந்தை அந்த நோயால் அப்பொழுதே இவ் உலகை நீத்தான். எனவே கார்க்கியின் பால்யப் படலம் மீண்டும் அந்தக் கொலைகாரர்களான கஸ்ஸிரீன்களின் வீட்டிற்கே நிழனி நோவ் கோரட்டிற்கே போகும்படியாய் விட்டது.

கார்க்கி அவன் பாட்டன் வாவிலீ ஷாஸ்லீயை கொஞ்சமும் பிடிக்காதிருந்தான். மேலும் அக்குடும்பத்தில் யார் மேலும் அவனுக்கு பற்றுதலே இல்லாதிருந்தது.

2 பாட்டன் வீட்டில்.

அந்த ஊரார் கூப்பிட்ட மாதிரி நாமும் மாக்ஸிம் கார்க்கியை அலோஷா வென்றழைப்போம்.

அலோஷா 5 வயது முதல் 9 வயது வரையில் அவன் தாய்வழி பாட்டனாருன வாஸிலி வாஸ்லி விச்சின் வீட்டில் வளர்ந்து வந்தான். அந்த தெருவில் உள்ள ஜனங்கள் ஒருவரையும் அவனுக்கு பிடிக்காதிருந்தது. எல்லோரும் அறிவிலிகள். விஷயம் ரொம்பச் சின்னதாக இருக்கும். அவர்கள் மண்டையை உடைத்துக் கொள்வார்கள். பால் முறிந்து போய் விட்ட தென்றால் அதற்காக அந்த வீட்டில் ஓர் ரகளை. குழம்பு சுண்டிப்போய் விட்டதென்றால் ஓர் பெரிய அடிதடி. நிழனி நோவ் கோரட்டைப் பற்றி அந்த ஜனங்களை சொல்வார்கள். "கல்லுவீடும், இரும்பு மனிதர்களும்" என்று.

இந்த நிலையில் அந்த ஊரார் அலோஷாவுக்கு பிடிக்காது போனதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்கள் எல்லோரையும் விட பாட்டன் வாஸிலியின் பேரில்தான் அதிக வெறுப்புக் கொண்டான். மிகக்கொடிய கொடிய குணம் படைத்த கிழவன். உடம்பெல்லாம் சாயம் ஏறிப்போய் ரத்தம் தோய்ந்ததைப்போல் காணப்படும் அவன் உடல். அவன் பேச்சும், சிவந்த தாடியும், அலோஷாவுக்கு பிடிப்பதில்லை. அவன் மிகச் சிறுவன் உடலில் வலிமை இல்லாதவன். சற்றும் இரக்கமில்லாதபடி அவனை அடிக்கடி அடித்து விடுவான்

கிழவன். அதோடு அவனை சதா துன்புறுத்திக் கொண்டே இருப்பான்.

ஒரு சமயம் அலோஷா அந்த வீட்டின் கொல்லைப் புறத்தில் கொஞ்சம் பண்படுத்தி நல்ல பூஞ்செடிகளை வைத்து பயிராக்கியிருந்தான். செடிகள் மளமள வென்று குலுங்கித் தழைத்தன. தண்ணீர் ஊற்ற அங்கே போய் பார்த்தான். செடிகள் வேரோடு பிடுங்கி எறியப் பட்டிருந்தன. புஷ்பங்கள் கீழே மிதியுண்டு கிடந்தன. கஸ்வீரின்களின் பன்றியோ என்னமோ அப்படிப்போய் நிர்தூளி செய்து விட்டது.

இச்சம்பவம் அவனுக்கு ரொம்ப வருத்தத்தை அளித்தது. அவன் பாட்டன் செய்த கொடுமைகள் அவனை என்றும் மறவாத அவஸ்தைக்குள்ளாக்கியது. பொதுவாக கூறுமிடத்து கார்க்கி தன் அறியாப் பால்பத்திலேயே, துன்பத்திலே, அந்த துயரத்தின் பின்னணியத்திலே நின்று பெருமூச்சுடன் வாழ் நாட்களை கழித்துக் கொண்டிருந்தான். வாழ்வின் இன்பப் பகுதிகள் அவனை நிஷ்டூரத்துடன் வெருட்டி விட்டுச் சென்று கொண்டிருந்தது. பிற்காலத்தில் அவன் தன் பால்யச் சம்பவங்களைத் தொகுத்து "என் குழந்தைப்பருவம்" என ஓர் நூலாக எழுதியிருக்கின்றான். அதில்அவன் பாட்டனைப்பற்றி கூறும்பொழுது ரஸமான பலசம்பவங்களைக்குறிப்பிடுகிறான்

"என் பாட்டனார் என் பிரக்ஞையற்றுப்போகும்வரையில் என்னை அடித்துப் போட்டு விட்டார். சில நாட்கள் வரையில் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையிலேயே கிடந்தேன். அச் சம்பவங்கள் என்னை வதைத்துக் கொண்டிருக்கும். முகத்தைக் குப்புறப் பொத்திக் கொள்வேன், அந்த

அறை ரொம்பவும் சிறியது. ஓர் சின்ன ஜன்னல்தான் அதில் உண்டு. துணியை விரித்துப் போட்டு அதில் படுத்துக் கிடப்பேன். அத்தகைய கொடிய நாட்களைதான் என் வாழ் வின் பெரும் பகுதியில் காண முடிந்தது.

என் பாட்டனார் வந்து என் அருகில், படுக்கையில் உட்கார்ந்துக் கொள்வார். தன் குளிர்ந்த கைகளை என் தலையில் வைத்தபடி கேட்பார்.

"சின்ன பிரபு! எப்படி இருக்கிறது? வா. முரட்டுத் தனம் செய்யாதே. சொல்லு, என்ன சொல்லப்போறே" என்றெல்லாம்.

அப்பொழுது அவரை ஓங்கி உதைத்து தள்ளி விட்டால் தேவலாம்போல் தோன்றும். ஆனால் அப்படிச் செய்ய மனம் வருவதில்லை.

அவர் எனக்கு கதைகள் சொல்ல ஆரம்பிப்பார். அவர் தன் வாலிப தசையில் அடைந்த மாபெரும் கஷ்டங் களைப் பற்றி எல்லாம் சொல்லுவார். அவர் காலாலேயே எவ்வளவோ தூரமெல்லாம் நடந்து சென்றிருப்பதை எல்லாம் சொல்லுவார். சுடும் வெய்யிலிலும், உழைப்பிலும் அவர் அடைந்த அவஸ்தைகளைப் பற்றி எல்லாம் சொல்லுவார்.

அதுபின் என் உள்ளக் கிளர்ச்சிகளை எழுப்பி விட்டு விடும். என் மனதை ஒருவாறாக சமாதானம் செய்து கொள்வேன்."

அவன் பாட்டன்தான் அலோஷாவின் முக்கிய விரோ தியாக இருந்தான். அவன் அவ்வளவு கொடியவனாயிருந்த

தற்கு முற்றிலும் அவனையே குறை சொல்வதற்கும் இல்லை. அந்தச் சுற்றுச் சார்புகள் அவனை அத்தகைய வன்னெஞ்சனாக்கி விட்டது. எப்படியாயினும் அவர்களிடமிருந்து தொலைந்துவிட்டால் போதும் என போய்விட்டதவனுக்கு. இருண்ட அவ் வாழ்வின் அடித்தளத்திலே கிடக்கும் அவனால் கரையேற முடியாதவனாயிருந்தான்.

அந்த வாலிப பருவத்தில் அவனுக்கு உற்றதுணை அவன் பாட்டி அகுலினா இவானோவ்னாதான். கார்க்கி ஓர் பிரபல எழுத்தாளனாக வந்த பிறகு அவளை பல்லாயிரக் கணக்கான வாசகர்களிடம் அறிமுகம் செய்து வைத்தான்.

அவள் அன்பு மாசற்றது. சிறுவன் அலோஷாவை அன்புடன் பேணி வளர்த்தாள். பொறுமையற்ற உலக ஞானம் படைத்தவள். சிறந்த அலாதி குணம்.

அவள் பொடி போட்டுக்கொள்வாள். வெள்ளியால் வேலைப்பாடமைந்த அந்த பொடி டப்பியிலிருந்து ஓர் சிமிட்டா பொடி எடுத்துப் போட்டுக் கொள்ளும்பொழுது பார்த்தால் அவளது இயற்கை சுபாவம் நன்றாகத் தெரியும்.

அவள் ஜனங்களைக் குறித்து வருந்துவாள். தச்சு வேலை தெரியும். கதை சொல்வதில் மிகுந்த சாமர்த்தியம் உடையவள். அலோஷாவை அவள் கதையின் மூலமே நடத்திச் சென்றாள்.

அவனுக்கு கஸ்ஸிரின்களைப் பற்றியும், அவர்களது பூர்வீக வாலாறுகள் பற்றியும் சொல்வாள். மருந்துக்கு உபயோகப்படுகிற மூலிகைகள், அவற்றின் குணம் அதெல்லாம்

சொல்லுவாள். உஸ்டா மாதாவைப் பற்றியும், திருடனின் தாயைப் பற்றிய பயங்கரக் கதைகளெல்லாம் சொல்லுவாள். அந்தப் பாட்டியின் கதைகளே கார்க்கிக்கு அவன் வாழ்வின் ஓர் பொக்கிஷமாயிற்று. அது எழுதாத அவனது முதல் நூல்; அவனை பிரபல ஆசிரியனாக்கி வைத்தது.

அலோஷா ஏராளமான கதைகளை அச் சிறுவயதி லேயே கேட்டிருக்கின்றான். கடவுளைப் பற்றியும், பாதிரி களைப் பற்றியும் தாதி யெவ்ஜீனா சொல்லியிருக்கின்றாள். 'கடவுள் பூமியில் வசித்தபொழுது கிராமத்துக்கு கிராமம் செல்வார். அப்பொழுது ஜனங்களிடம் அவர்கள் விஷயத் தில் போய் குறுக்கிடுவார்' என்றெல்லாம்.

இன்னும் அவள் சொன்ன கதைகள் பெரும்பாலும் அவனது அறிவுக்கு பொருந்தாவிடினும் கதைகளின் சம்பவங் களைப் பற்றி அவன் நம்பவேண்டியிருந்தது. 'வியாபாரி களில் கேடுகெட்ட ஒருவன் 50 கொப்பெய் காசுக்காக தன் மனைவியையும், குழந்தையையும் விற்று ஓர் ஆயிரம் வடிவாக்கி விட்டான் என்பதும் நிலச்சுவான்தாரர்கள் இழைத்த அநீதி களையும், கொடுமைகளைப் பற்றிய கதைகளையும்' அவனால் மறக்க முடியவில்லை.

3 இளமைப் பருவம்.

அலோஷாவுக்கு வயது ஒன்பதிருக்கலாம். எப்படியேனும் அவன் பாட்டன் வீட்டை விட்டு வெளியேற தீர்மானித்துவிட்டான். அப் பாட்டனரின் நிலைமையும் வர வர மோசமாகிக் கொண்டு வந்தது. சாயத்தொழில் லாபிக்கவில்லை; அதோடு கஷ்டங்கள் மிகுந்து விட்டன. அவனை போஷிக்கப் போதியதாக இல்லை. அலோஷா இதையும் உணர்வான். ஆனல் அவன் எங்கு செல்வதென்பது மட்டும் அவனுக்கே புரியாதிருந்தது.

அந்த தெருவோடே அடிக்கடி ஜனங்கள் கைதிகளின் உடையில் போவார்கள். அலோஷா ஜன்னல் வழியாகப் பார்ப்பான். கைதிகளை சங்கிலி போட்டு பாராவுடன் நடத்திச் செல்வார்கள். அது அவன் மனதில் பலவித கொடிய எண்ணங்களை உண்டாக்கிவிடும். அவன் வீட்டின் இடது புறத்தில் சிறைச்சாலை இருந்தது. வலது புறத்தில் சிறைக் காவலாளர்களின் வீடுகளிருந்தன.

ஒருநாள் தெருவோடு கைதிக் கூட்டம் ஒன்று சென்றது. அவர்களில் ஒருவன் மீது அலோஷாவின் பார்வை பதிந்தது. அவன் நெற்றியில் காயம்பட்டு அதிலிருந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவனது காது ஒன்று சின்னபின்னமாக அறுந்து காணப்பட்டது. ஜார் ஆட்சியின் கொடுமைகளால் தகர்க்கப்பட்டவனு யிருக்கலாம்! அலோஷா

அவனைப் பார்த்த மாத்திரத்தில் ஓடி அவனை பின்தொடர்ந்து பக்கமாகச் சென்றான். சடக்கென அந்த கைதியும் சந்தோஷத்துடன் உரக்கச் சொன்னான்:

"வா தம்பி. வந்து எங்களுடன் ஓர் சுற்று சுற்றிப் பார்!" என.

அலோஷா அங்ஙனமே அவனைப் பின் தொடரலானான். அது அவனுக்கு எவ்வித வித்தியாசத்தையும் கற்பிக்கவில்லை. அது ஒன்றுதான் அவனுக்குத் தெரியும்: எங்கோ செல்கின்றான். அது ஒரு வேளை என்றும் திரும்பக்கூடாத இடமாயிருக்கலாம். ஆனால் நல்ல வேளையாக 'வார்டன்' அவனை திரும்ப விரட்டி விட்டு விட்டான்.

வீட்டிற்கு திரும்பி வந்தான் அலோஷா. வீடு அந்த கஷ்டிரின்கள் வீடுதான்; ஆனாலும் மாற்றப்பட்டிருந்தது. அவன் பாட்டன் உஸ்பென்ஸ்கி தெருவிலிருந்த ஜாகையை பொலேவயாவுக்கு, ஓர் பெரிய வீட்டிற்கு மாற்றிவிட்டான்.

அது அங்கே அவனுக்கு இன்னும் துன்பத்தை ஈந்தது. மனம் புழுங்கி, சில சமயங்களில் விஷமங்கள் செய்து விடுவான் கூரையில் ஏறி புகை போக்கியை அடைத்து விடுவான், சூப்பில் உப்பை அள்ளி கொட்டி விடுவான். இன்னும் இப்படிப்பட்ட சில்லறை விஷமங்கள் எல்லாம்.

ஆனால் அவன் ஏன் அப்படிச் செய்ய வேண்டுமென்பது அவனுக்கே தெரியாது.

அவன் தந்தை இறந்த பிறகு அவன் தாய் வேறொருவனை மணம் செய்து கொண்டாள். அதன்பின் கார்க்கி அந்த இரண்டாம் தகப்பன் வீட்டில் காலங் கழிக்கலானான்.

ஒரு சமயம் வீட்டில் அவன் தாய்க்கும் தந்தைக்கும் சண்டை உண்டாகியது. அங்கே அலோஷாவும் நின்றுக் கொண்டிருந்தான். சண்டை ரொம்ப வலுத்துப்போய் அவன் தகப்பன், தாயை ஓங்கி மார்பில் உதைத்து விட்டான். அவள் அலறி அடித்துக்கொண்டு கீழே விழுந்தாள். இதைக் கண்ட பொழுது அலோஷாவுக்கு ரொம்ப ஆத்திரம் உண்டாகியது. உடனே ஓடிப்போய் ஓர் கத்தியை உருவிக்கொண்டு வந்து அவன் தந்தையின் விலாவில் ஓங்கி குத்திவிட்டான்.

காலமும் கொஞ்சம் கடந்தது. அலோஷாவுக்கு வயது 10. அவன் தாயும் இறந்து போய் விட்டாள். அவன் தகப்பன் இருந்த பணத்தை எல்லாம் குடியிலும், சூதிலும் செலவிட்டு விட்டான்; அதோடு வேலையையும் விட்டு விட்டு திண்டாடலானான். அவன் பாட்டன் 'பாப்பராக' இருந்தார். அவனைக் காப்பாற்ற யாருமில்லை. அவன் வயிற்றுக்கு அவனே தேட வேண்டியதாயிற்று காலம்.

பிராயம் பத்திலேயே, அதற்குள் அவன் பால் மணம் மாறவில்லை. சாவு அவனை வஞ்சித்து அவன் பெற்றோர்களை பறித்துக்கொண்டது. கொடும் விதி அவனை அநாதையாக்கி தெருத் தெருவாய் திரிய விட்டு விட்டது.

வேலைக்கு ஒவ்வோர் இடமாக தேடி அலையலானான். செருப்புக்கடை யொன்றில் அவனுக்கு வேலை கிடைத்தது. அக் கடையில் இன்னும் பல சிறுவர்களும் வேலை பார்த்தார்கள். அக்கடை முதலாளி போர்க்குனு என்பவன். உருவத்தில்தான் மனிதன். ஆனால் அவன் ஹிருதயம் இரக்கமற்ற கொடிய ஹிருதயம். வேலை பார்க்கும் சிறுவர்களை அடிப்பதிலும், உதைப்பதிலும் சற்றும் பின் வாங்க மாட்டான். தொட்ட

தெற்கெல்லாம் அடிப்பான். அந்த அடி உபாதைகளை தாங்க மாட்டாதவனாய், அங்கிருந்து வெளியேற நினைத்து விட்டான் அலோஷா.

ஒரு நாள் பனிபெய்து கொண்டிருந்தது. அலோஷா ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டு நின்றான். குதிரைகள் அப்பனியில் மெதுவாய் போய்க் கொண்டிருந்தன. பக்கத்து மணிக்கூண்டிலிருந்து மணிச்சத்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. இந்தச் சமயம் அவன் முதலாளி வந்து விட்டான்; அவனை கண்டபடி தூஷித்தான்; வேலைபார்க்கச் சொல்லி வைதான், அடித்தான். ஒருநாள் அலோஷா, ஏதோ சூப்புக்காச்சிக் கொண்டிருக்கும் பொழுது கை தவறி பானையை போட்டுவிட்டான். கை அந்தக் கொதிக்கும் சூப் பால் ரணமாகிவிட்டது. ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் பட்டான். ஆனால் சிகிச்சை பெற்றவுடன் திரும்ப அவன் அந்த செருப்புக் கடைக்குப் போக வில்லை. பிளான் வரைகிற ஒருவனிடம் போய் வேலைக்கமர்ந்தான்.

இந்த 'பிளான்காரன்' அலோஷாவுக்கு ஒரு வழியில் சொந்தக்காரன்தான். என்றாலும் வேலை இங்கேயும் அவனுக்கு புளித்துப் போய்விட்டது. செருப்புக் கடையை விட இங்கே அதிக கஷ்டத்தை உணர்ந்தான். இந்த புது யஜமான் அவனுக்கு பிளான் வரைகிறவேலையில் ஒன்றும் சொல்லிக் கொடுக்க வில்லை. வேலைகற்றுக் கொள்ளப் போன அவனுக்கு அவன் எஜமான் வீட்டு வேலைகளை பார்ப்பதற்குத்தான் பொழுது பத்தாதிருந்தது. விறகு வெட்டி வீட்டுக்கு கொண்டு வந்து சேர்க்கவேண்டும், பானை, சட்டி முதலான சமையல் பாத்திரங்கள் கழுவவேண்டும்; வீடு, வாசல் பெருக்கி சுத்தம் செய்யவேண்டும்; கடைக்குப் போய் சாமான்கள் வாங்கி வர

வேண்டும்; இன்னும் ஏவுகிற வேலை யெல்லாம் செய்தாக வேண்டும்.

இவ்வளவு வேலைகளை செய்ய வேண்டியிருந்த போதிலும் கார்க்கி செருப்புக் கடையை விட இதில் அதிக கஷ்டத்தை உணரவில்லை. ஆனால் இந்த சர்ஜீயேவின் பெண் சாதியும், மாமியாரும்தான் அவனை ரொம்ப ஹிம்ஸித்தார்கள். தொட்டதெற்கெல்லாம் அடித்து வாயில் வந்தபடி திட்டு வார்களாம். இந்த வதைகளை அனுபவிக்க முடியாதவனாய் இதை விட்டும் கிளம்பி விட்டான்.

மீண்டும் வயிற்றுப் பாட்டிற்கு திண்டாட்ட மேற்பட்டது. நீண்ட நாட்கள் வரை நிழனி–நோவகோரட் தெருக்களிலே சுற்றி அலைந்து கொண்டிருந்தான். வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக அலைந்து திரிந்து 'டோப்ரி' என்ற நீராவிப் பட கொன்றில் வேலைக்கமர்ந்தான்.

'டோப்ரி' கைதிகளை ஏற்றிச்செல்லும் கப்பல். அதில் உள்ள குற்றவாளிகளைக் காட்டிலும் அதிகம் சுதந்திர மற்றவனாயிருந்தான் கார்க்கி. காலை 6 மணி யிலிருந்து இரவு 12 மணி, 1 மணி வரையிலும் வேலை. அங்குள்ள சட்டிப்பானைகளை சுத்தி செய்ய வேண்டும்; அவர்கள் சாப்பிட்ட தட்டுகளையும், கரண்டிகளையும் கழுவவேண்டும்.

இவ்வளவு நிர்ப்பந்தம் இருந்தும் கூட கார்க்கிக்கு போர்க்குணவின் செருப்புக் கடையையும், சர்ஜேவின் ஆபீஸையும் விட இதில் கொஞ்சம் பிடித்திருந்தது. கப்பல், அந்த அகன்ற நதியில் செல்லும்பொழுது இயற்கையின் யௌனவத்திலே மனமிழந்தவனாய் அப்படியே அந்த மேல் தட்டில்

நின்று பார்த்துக் கொண்டிருப்பான். இருண்ட காடுகளும், பாழ்வெளிகளும், மரங்களும், செடிகொடிகளும், நகரமும், கிராமமும் மாறி மாறி காட்சியளித்துக் கொண்டிருக்கும். அந்த இயற்கையின் லீலா விநோதங்களைக் கண்டு பரவசங் கொள்வான் கார்க்கி.

இந்த வேலையும் கொஞ்ச நாளில் தொலைந்து போயிற்று. அடர்ந்த காடுகளையும், மரங்களையும் பார்த்துப் பழகிய அவனுக்கு அங்கேயே போய் வசிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாகியது. தவிரவும், அவனுக்கு வாழ்க்கைக்கு வேறு மார்க்கமும் தோன்ற வில்லை. பறவைகள் பிடிக்கும் வலை ஒன்று வாங்கினன். கண்ணிகள், வளையங்கள், கூடுகளையும் வாங்கிகொண்டான். காடுகளில் போய் பக்ஷி, பறவைகளைப் பிடித்துக்கொண்டு வருவான். அவன் கிழ பாட்டி அவற்றை போய் விற்றுக்கொண்டு வருவாள். அந்தக் காசைக்கொண்டு ஜீவனம் ஒரு வாறய் நடந்து வந்தது.

அவன் பாட்டியும், அவனுந்தான் இப்பொழுது குடும்பம். அதற்கும் இடம் கொடுக்க வில்லை காலம். கோடை மாறியது. பக்ஷி, பறவைகளெல்லாம் ஊர்ப்புறம் ஓடிப் போயின. இந்தப் பிழைப்பிலும் மண்விழுந்து விட்டது. இனி வாழ்க்கைக்கு வேறு வழி கோல வேண்டியதாயிற்று அவன்.

சுதந்திர மற்ற மனித விலங்காய் அலைந்து திரிந்தான் அவன் பாட்டியை தனியே, அனதையாய் ஆதரவின்றி விட்டு விட்டு மனம் போன வழியெல்லாம் போய்விடுவான். நாட் கணக்கில் வீட்டுக்கும் வாரமலே இருந்துவிடுவான். அந்த வயோதிக ஸ்திரி பட்டினியாய் பொழுதைக் கழிப்பான்.

அவன் பாட்டனார், பழய மாதாகோவில் புத்தகங்களிலிருந்து படிக்க கொஞ்சம் கொஞ்சம் சொல்லிக் கொடுத்து இருக்கின்றார். அவன் தாயார் லௌகிக விஷயங்களைப்பற்றி கொஞ்சம் போதித் திருக்கின்றாள். ஆனால் இவைகள் அவனுககுப் போதிக்கப்பட்டதைப் பற்றி அவனே சொல்கின்றான்: "இதை படிப்பதற்குள் எனக்கு கிடைத்த அடியும், வசவும் நான் செருப்புக் கடைக் காரனிடமும், பிளான் வரைகிற வனிடமும் அடைந்ததைவிட எவ்வகையிலும் குறைந்ததல்ல" என்பதாக.

அவன் கொஞ்சகாலம்தான் பள்ளியில்சேர்ந்து பயின்றிருக்கின்றான். அப்பொழுது அந்தப்பள்ளி மாணவர்கள் அவனை 'எச்சில் பொருக்கி' என்றும் 'உதாரிப்பயல்' என்றும் தூஷித்து அவனை ஹிம்ஸிப்பார்கள். உபாத்தியாயரைப்பற்றி ஒன்றுமேசொல்ல வேண்டியதில்லை. உலகப் பேராசிரியனாக, உயர்ந்த மகா உன்னத நிலையை அடையப்போகும் இந்த கார்க்கியை, அவர்கள் அனுமானித்தது அப்படித்தான் போலும்.

கார்க்கி, ஆனால் புத்தக உலகிற்குத் திரும்பினான். அவனுக்கு கிடைத்தமுதல் புத்தகம் § ஹான்ஸ்-ஆண்டர்ஸனது கதை புத்தகமாகும். ஹான்ஸ் ஆண்டர்ஸன் ஓர் அற்புத கதாசிரியன். கார்க்கி அதில் 'இராப்பறவை' என்ற முதல் கதையைப் படித்தான். "சீனாவில் எல்லோரும் சீனர்கள், சக்ரவர்த்தியும் கூட சீனர்தான்" என்றாரம்பிக்கும் அந்த முதற் கதையே அவன் மனதை மிகவும் கவர்ந்தது. ஆனால் ஆண்டர்ஸன் கதைகள் பெரும்பாலும் அசிர்வ்ஷடத்தை அடிப்படையாய் கொண்டவை.

---

§ Hans Andersen.

கார்க்கி அப்பொழுது அதோடேயே நின்றுவிட வில்லை. அவன் கைய்க்குக்கிடைக்கும் புத்தகங்களெல்லாம் ஒன்று விடாமல் படிக்கத்தொடங்கினன்.

புத்தக உலகிற்கு அவனுக்கு வழிகாட்டி உதவியமுதல் உத்தமன் சுமூரி என்ற டோப்ரி கப்பல் சமையல்காரன். கார்க்கி அவனைத்தான் தனது முதற்குருவாக பாவிக்கின்றான். அவன் டோப்ரி கப்பலில் வேலை பார்த்த பொழுது ஓமி ரோவின் "நீதி மொழிகள்", "லார்ட் செடெங்கலேயின் கடிதங்கள்" போன்ற நல்ல நூல்களெல்லாம் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கின்றான். அதுவே கார்க்கியை புத்தக உலகிற்கு தள்ளி விட்டதெனலாம்.

பள்ளி மாணவர்களிடமிருந்தும், கடைக்காரர்களிடமிருந்தும் பழய புத்தகங்களெல்லாம் வாங்குவான். ரஷிய மொழிக்கு கொண்டு வரப்பட்ட பிறநாட்டு கதைகளையும், நூல்களையும் வாங்கிப்படிப்பான். ஆனல் அவனுக்கு அது வரையில் பால்லேக், ஃப்ளுபெர்ட் போன்ற பிரஞ்சுப் பேரா சிரியர்களின் நூல்கள் படிக்க கிடைக்காதிருந்தன.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை தினம். அவனுக்கு ஃப்ளுபெர்டின் கதை ஒன்று கிடைத்தது. அதனை எடுத்துக் கொண்டுபோய் ஜனசஞ்சாரமற்ற ஓர் கொட்டகையில் உட் கார்ந்து படிக்கத் தொடங்கினன். அக்கதை ஓர் சமையல்காரி யைப் பற்றியது. 'எப்படி ஓர் சமையல்காரி கபடமற்று

Omirov's Precepts.
Lord Sedengally's Letters.
Balzac
Flubert.

வாழ்ந்தாள்' என்பது பற்றி. அந்த எளிய வார்த்தைகளும், கதையின் சரள நடையும், கம்பீர்யக் கருத்துக்களும் அவன் மனதை அப்படியே இளக்கிவிட்டது. அதிலேயே மனமிழந்த வனாய் ஏதோ ஓர் அற்புதத்தை அவனுக்குள் அளித்ததைப் போலுணர்ந்தான்.

மேலும், மேலும் புத்தகங்களினிடையே அவன் மனம் தாவிச்சென்றது. புஷ்கின், கோகோல், டார்ஜினேவ், லெர் மாண்டோவ், முதலிய கவிஞர்களையும், பேராசிரியர்களையும் படித்துச் சுவைத்தான். இவைகள் கார்க்கியை அந்த இளம் பிராயத்திலேயே ஓர் உயர்ந்த இலக்கியப் பாட்டையிலே நடத்திச்சென்றன.

செயிண்ட். பீட்டர்ஸ்பர்க் விகடப் பத்திரிக்கை யொன்றில் ஒருநாள் ஒரு கதையைக் கண்டான். 'அன்டோஷா செக்கோனேட்' என்ற எழுத்தாளனின் பெயரைத்தாங்கி வெளியிடப் பட்டிருந்தது கதை. கார்க்கி அதனை பலமுறை படித்திருக்க வேண்டும். அக்கதை பெரிதும் அவனை ஆகர் ஷித்து விட்டது. அந்த ஆசிரியன் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று துடித்தான். அதேபோல் அவனும் எழுத வேண்டு மென்றும் மனப்பால் குடித்தான்.

அந்த ஆசிரியனைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆசை அவனிடம் நாளுக்கு நாள் உரம் பெற்றது. ஒரு சமயம் ஒரு பள்ளி மாணவனைச் சந்தித்துக் கேட்டான். அந்த ஆசிரியன் யார் என்பதாக. அந்த மானவன் அதற்கு ஒரேயடியாய் பதில் சொல்லிவிட்டான். 'அதெல்லாம் கேட்பதைவிட அம்மாதிரி விகடப் பத்திரிக்கைகளைப்படித்து வீண்காலம் போக்காமல்

நல்ல நூல்களைப்படிப்பது நல்லது' என்பதாக. அந்த சுடும் பதில் கார்க்கியை தூக்கிவாரிப் போட்டு விட்டது.

அது முதலே அவன் உணரத் தொடங்கி விட்டான். அவன் வாழ்க்கை புத்தகங்கள் நிறைந்த ஓர் சிறைக் கூடமா யிருந்தது. அவன் எதற்கும், எவ்வித தொழிலுக்கும், லாயக் கற்றவனாயிருந்தான். மதில்களுக்கு அப்பால், பாடும் பறவை களின் இன்னிசைகளைத்தான் அவனால் கேட்டு மகிழமுடிந்தது.

ஒரு சமயம், பத்திரிக்கை ஒன்றை புரட்டிக் கொண் டிருந்தான். அதில் 'பேரேடே' என்ற பிரசித்தி பெற்ற விஞ் ஞானியின் உருவப்படமும், அவன் வாழ்க்கை வரலாறும் இருந் தது. அதை ஆவலோடு படிக்கத் தொடங்கினான். அதனை முடித்த பொழுது அவன் மனதில் ஓர் புதிய எழுச்சி ஏற் பட்டது.

"பேரேடே ஓர் கூலிக்காரனாக இருந்தான் இளம் வயதில்-பின்னால் உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானியாகி விட்டான்".

கார்க்கி பிரமித்துப் போனான். எப்படி ஓர் கூலிக்காரனாக இருந்தவன் பிரபல விஞ்ஞானியாக முடியும் என ஆச்சரியப்பட்டான். அது விஷயம் உண்மையாயிராதோ வென சந்தேகப்பட்டான். இப்படி அவனைப்போல் இன்னும் பால்யத்தில், இளமையில், ஏழைகளாயும், கூலிகளாயும் இருந்த வர்களில் பின்னிட்டு யாரேனும் பிரசித்தி பெற்றவர்களாய் ஆகியிருக்கின்றார்களா என்பதுபற்றி தனக்குள் ஆராய்ந்து பார்த்தான்.

Faraday (Michael Faraday)

அவனுக்கு இந்த விஷயமாக பத்திரிக்கைகளில் ஒன்றும் கிடைக்க வில்லை. யாரோ ஒருவன் அவனுக்குச் சொன்னான். $ ஸ்டீபென்சன் - ரயில் என்ஜீனைக் கண்டு பிடித்த மேதை, அவனுங் கூட ஓர் ஏ ழைத் தொழிலாளி என்பதாக.

இன்னும் ஏழைகளாயும், தொழிலாளிகளாயுமிருந்து முன்னுக்கு வந்த பலமேதைகளின் வரலாறுகளைக் கேள்விப் பட்டான்.

அவனுக்கு மனிதன் பயனுள்ள வகையில் வாழ வேண்டுமென்ற ஆவல். மனிதன் மனிதத்தன்மையுடன் வாழவேண்டுமென்று ஆசைப்பட்டான். அவன் பார்க்கும் இடங்களெல்லாம் மனிதர்கள் நய வஞ்சகர்களாயும், சுயநல நாட்டங் கொண்டவர்களாயும் பொருளையும், பதவியையும் கருதி வாழ்பவர்களின் கூட்டங்களே அதிகம் தென்பட்டது.

கார்க்கி புகழிலும், பெருமையிலும் நாட்டங்கொள்ள வில்லை. ஆடம்பரமற்ற எளிய பரிசுத்த வாழ்வை விரும்பினான். மனிதர்களுள் ஜீவகாருண்யமும், அன்பும், பரோபகார சிந்தை யும் உடைய நல் மனிதர்களிடம் உறவுபூண விழைந்து கொண்டிருந்தான்.

ஆனல் அத்தகைய அவனது கற்பனை வாழ்க்கையைப் போல் எங்கும் காண முடியாதிருந்தான். அவனுக்கு யாரோ சொன்னார்கள். ‘அத்தகைய உண்மை வாழ்வை அவன் நாடக அரங்கத்தில் தான் காண இயலும்’ என்பதாக.

$ Stephenson-the inventor of the loconotive engine.

ஏதோ 'ஒரு சான்ஸ்' அவன் நாடகத்திற்கு போகும் சந்தர்ப்பம் கிட்டியது. 'ஷெச்செட்ரின்' கோஷ்டியாரின் "கோலோவ் லோவ் குடும்பம்" என்ற நாடகம் நடந்தது. ஆண்டரியேவ் – புர்லாக் என்ற பிரபல நடிகன் ஜூதாஸ் கோலோவ் லோவாக நடித்தான். மகா உன்னத நடிப்பு. மயிர் கூச்சலிடச்செய்யும் கோர கட்டத்திலே நடிக்கின்றான்.

கார்க்கிக்கு அந்நாடகம் புதிது. அந்த சோகக் காட்சிகளைக் கண்டு மனம் பதைக்கலானான். உணர்ச்சி பிரவாகத்தில் சிக்குண்டு போய் தவித்தான். அந்தக்கொடிய ஜூதாசைப் போய் உயிரைப்பிடுங்கிவிடச் சொல்வதைப்போலுணர்ந்தான். அவன் கண்களில் நீர் மல்கியது. கண்ணீர் விட்டழுதான். அக்கோர உணர்ச்சி வெள்ளத்திலிருந்து கரையேறிய பின் தான்-அது அவனுக்கு நாடகம் என்பது நினைவுக்கு வந்தது.

நாடகம் முடிந்து வெளியே வந்துங்கூட அதிலேயே லாகிரி கொண்டவனைப்போல் தெருக்களில் சுற்றித்திரியலானான். இரவு நடுநிசி, கார்க்கி தெருவொன்றில் போய்க் கொண்டிருந்தான். அதுசமயம் குடிகாரன் ஒருவன் குடி வெறியோடு அவன்மேல் போய் விழுந்து அவனை வலிய பிடித்துக்கொண்டான். இரவில் எங்கேடா போறாய் என்று மிரட்டி இரண்டு உதை கொடுத்தான். மிகுந்த சாமார்த்தியமாக உதையை வாங்கிக்கொண்டு ஓடலானான்.

அது சம்பவம் நாடகக் காட்சிகளை அவனுக்கு நினைவுறுத்தியது. அதுமுதல் அவனும் நாடகத்தில் சேர்ந்து நடிக்க வேண்டுமென்ற ஆசை கொண்டான். நாளடைவில் அதற்கான முயற்சிகளும் செய்துவந்தான். அதிர்ஷ்ட வசமாக அவனை ஒரு நாடகக் கம்பேனியார் சேர்த்துக் கொண்

டார்கள்' ஓர் நாடகனுக அல்ல: ஏதோ அந்தக் கம்பேனிக்கு ஓர் ஆள் வேண்டியிருந்தது. சமயங்களில் இவனுக்கு சில்லரை வேஷம் போட்டு விடுவார்கள்.

கார்க்கி எப்படியோ அந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு ஓர் நடிகனுக வந்தான்: அவன் நடித்த முதல் நாடகம் ஆடல் பாடல் நிறைந்த 'கிறிஸ்தோபர் கொலம்பஸ்' என்பதாகும்: அதில் கார்க்கி சிவப்பு இந்திய னுக வேடம் பூண்டான். அவன் நடிக்கவேண்டியது: ஓர் மர ஈட்டியை வைத்துக்கொண்டு ஸ்பானியர்களே அவர்கள் வயிற்றில் குத்தி தள்ளுவதைப் போல். ஆனல், கார்க்கி ஈட்டியை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் குத்த வேண்டிய சமயத்தில் மறந்து தட்டுத் தடுமாறிப்போய் அவனே கீழே விழுந்து விட்டான்:

எனவே அவன் நடிப்பதற்கும் லாயக்கில்லாது போய் விட்டது. அதோடு அவனுக்கு நடிக்கும் பயித்தியமும் குறைந்து கொண்டு வந்தது. நாடக 'டைரக்டர்' கம்பேனி யில் உள்ளவர்களே எல்லாம் மிகக் கேவலமான முறையில் அடிமைகளேப் போல் பாவித்து வந்தான். நடிகர்களே வாயில் வந்தபடி தூஷிப்பான்.

இந்த தூஷனைகளே பொறுக்க முடியாதவனுக கார்க்கி அந்நாடக சபையைவிட்டு வெளியேற வேண்டிய தாயிற்று. அவன் கார்க்கியை 'பழிகாரப்பயல்', 'கேடு கெட்ட பயல்' என்றெல்லாம் பேசுவானும். அத்தகைய வசவுகளே அவனது கனவை சிதிலங்களாக சிதைக்கலாயிற்று.

நாடகக் கம்பேனியைவிட்டு வெளியேறி விட்டான். இன்னும் நன்கு படித்துக்கொள்ள வேண்டுமென ஆசை

ஏற்பட்டது. இனி படித்துக் கொள்வதென தீர்மானம் செய்துகொண்டான்.

இப்படி அவன் எண்ணிக் கொண்டிருக்கையில் மூன் ஸ்டீபென்சனைப் பற்றிச் சொன்ன அந்த கீழ் பாடசாலை மாணவனை சந்தித்தான். படிப்பு விஷயமாக இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அம் மாணவன் கார்க்கிக்கு யோசனை கூறினான். காஸானுக்கு போகும்படிக்கும், அங்கே ஓர் சர்வகலாசாலை இருப்பதாயும், அங்கு சென்றால் உயர்தர கல்வி கற்கலாம் என்பதாயும்.

அந்த யோசனை கார்க்கிக்கு ரொம்பவும் பிடித்திருந்தது, காஸான் சர்வகலாசாலையைப் பற்றி மனதில் பலவாறாக கற்பனை செய்து பார்த்தான்,

நிழனி-நோவ கோரட்டை விட்டு காஸானுக்கு பிரயாண மானான், கல்வியில் உள்ள ஊக்கம் அவனது பிரிவாற்றாமையின் துயரை அளிக்கவில்லை. அவனது ஒரே அன்பான பாட்டி. அவளையும் விட்டுச் செல்லத் துணிந்து கிளம்பி விட்டான், அப்பொழுது வயது பதினைந்து நடந்தது,

4 காஸானில்.

சர்வகலாசாலை படிப்பென்பது அப்பொழுது ஏழை மக்களுக்கு எட்டாதனவாயிருந்தது. அதிலும் காஸான் 'இம்பீரியல் சர்வகலாசாலை'யைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அக்கலாசாலை படிப்பு 'பணக்கார பிரபுக்கள்' என்ற ஒரு சாராருக்கே ஏகபோக உரிமை உடையதாயிருந்தது. பணக்காரர் பிள்ளைகளே அதில் படிக்க அனுமதிக்கப்பட்டனர். சாதாரண மக்கள் அதன் வாசற்படியை மிதிப்பதற்குக் கூட அருகதை இல்லாதிருந்தார்கள். இங்ஙிலையில் வயிற்றுச் சோற்றிற்கே வழியில்லாத கார்க்கி அங்கே என்ன செய்ய முடியும்? கலாசாலையில் படிக்கப் போவதைப் பற்றி அவன் கட்டிக் கொண்டு போன அவனது மனக்கோட்டை அச்செய்திகளை கேட்ட மாத்திரத்தில் தகர்ந்து நிர்மூலமாயிற்று. அவன் படிப்பைப் பற்றிய எண்ணத்தை அறவே விட்டு விட்டான். அவன் கனவு கொஞ்சம் கொஞ்சமாய் தேய்ந்து அடியோடு அழிந்து போகலாயிற்று.

ஆனாலும் காஸானை விட்டு எங்கும் செல்ல மனமற்றவனாயிருந்தான். அலைந்து திரிந்து கடைசியாக உஸ்ட்யா ஆற்றங்கரையில் ஓர் தோணித்துறையில் போய் வேலைக்கமர்ந்தான். அங்கே மூட்டை தூக்கும் கூலிவேலை. கார்க்கிக்கு நாள் ஒன்றுக்கு 20 காசு சம்பளம் கொடுத்தார்கள். அங்கேயே இடிந்துபோன ஓர் வீட்டின் புறத்தில் ஜாகை வைத்துக் கொண்டு காலங் கழிக்கலானான்.

Imperial Kazan University.

சர்வகலாசாலையில் சேர்ந்து படிக்காவிடினும், ஆனல் அங்கே அவன் காஸானில் கற்றுக்கொண்ட விஷயங்கள் என்றும் அவன் மறக்கக் கூடியவைகள் அல்ல.

அவன் காஸான் போய் சேர்ந்த வெகு சீக்கிரத்திலேயே அவனுக்கு அங்கே ஏராள புது சிநேகிதர்கள் உண்டாகி விட்டார்கள். அவர்களில் போலீஸ்காரர்கள், அரசியல் வாதிகள், மாணுக்கர்கள், புரட்சிக்காரர்கள், போண்டிகள், காலிகள், வாய் வீணர்கள், மூடிச்சவுக்கிகள் இன்னும் எல்லாம். பிச்சைக்காரன்களுக்கு கார்க்கியினிடம் அமோகப் பிரியம்.

'பளிங்கு மாளிகை' என ஒன்று அங்கே இருக்கிறது. அதற்கு 'பளிங்கு மாளிகை' என்ற பெயர் ஏன் என்பது யாருக்கும் தெரியாது. அந்தப்பெயர் ஒருவேளை நையாண்டிப் பெயராக அதற்கு சூட்டப் பட்டிருக்கலாம். பாழடைந்து போன ஒரு பழைய கட்டடம். ஜன்னல்களில் சட்டம் ஒன்றுகூட இல்லை. பாழடைந்த சத்திரம் என்று சொல்லி விடலாம். காஸானுக்கு வரும் நடோடிகளெல்லாம் பெரும்பாலும் அங்குதான் முகாம் போடுவார்கள். எல்லா வகுப்பினரும் சந்தித்துப் பேசுவதற்கு அதைத்தான் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இந்த 'பளிங்கு மாளிகையின்' சர்வகலாசாலை படிப்புத்தான் கார்க்கிக்கு கிட்டியது. அப்பொழுது அவன் ஞாபகக் குறிப்பிலும் எழுதியிருக்கின்றுன்: "நிக்கோலேவ்ஸ்கி சதுக்கத்தில் பிரதி ஞாயிறிலும் உன்னை பகிரங்கமாக மிலாருல் உரிக்கப்படும். இந்த நிபந்தனைக் குட்பட்டு வேண்டுமானுல்போ; போய்படி" என்று என்னை யாராகிலும்

சொல்லக் கூடுமானால். நான் அதனை மிக விருப்பத்தோடு ஏற்றுச் செல்வேன் என்று. ஆனால் இப்பொழுது அந்த ஞாபகமேதான் இல்லாது போய்விட்டது. எட்டாப் பொரு ளுக்கு கொட்டாவி விடவில்லை.

அங்கு கார்க்கி பலரைச் சந்தித்துப் பழகினான். அவர்களில் ஒருவன் பழைய மாணவன். சர்வகலாசாலை யிலிருந்து விரட்டி யடிக்கப்பட்டவன். பழைய கந்தல்பொரு க்கி. 10 வருடத்திற்கு மேலாக பிச்சைக்காரனாய் திரிகின் றான். இளமையில் ஓர் கால்நடை ரணவைத்தியனாக (Veterinary Surgeon) இருந்தவன். இன்னொருவன் நாடோடி. மாகாண கவர்னரிடம் வேலையாளாய் இருந் தவன். இவ்விருவரும் மிக விபரீதமான கால வித்தியாசத் திலே தத்தளிக்கின்றார்கள். சகிக்க முடியாத வறுமைப் பிணியினால் இவர்கள் வாடி வதங்குகின்றார்கள். பசியின் கோரத்தன்மை இவர்களை பிச்சை எடுக்க வழி கூட்டி விட்டது.

இன்னும் இவன் சந்தித்தபேர்கள் குடிகாரர்கள். இவர்கள் திருடி, அந்தப்பொருளை விற்றுக் குடித்து கூத்தாடு வார்கள். இவர்களில் ஒருவன் வயது முதிர்ந்தவன் ரோயாளி. ஒரு சமயம் போலீஸ்காரன் இவனைப் பிடித்து பலமாய் அடித்துவிட்டான். இதெல்லாம் கார்க்கிக்கு அவன் படித்த புத்தகங்களிலுள்ள திடுகூறான சம்பவங்களைக் காட்டிலும் அதிகம் உணர்ச்சிகரமாயும் நிதர்சனமாயும் புலனானது.

ஒருநாள் நண்பன் ஒருவன் கார்க்கியை அப் பட்டண த்தின் மூலையிலுள்ள ஓர் கடைக்கு அழைத்துக்கொண்டு

போனான். அக்கடையின் சொந்தக்காரன் †ஆண்டிரி டெரின் கோவ் என்பவன். அவன் ஓர் புரட்சிக்காரன். சர்க்கரை, சவுக்காரம். மெழுகுவத்தி, தின் பண்டங்கள் முதலியன கடையில் வைத்து வியாபாரம் செய்தான். கடைக்கும் பின்னால் ஓர் அறை அந்த அறையின் சுவரொன்றில் § ஹேர்ட் ஸெனின்' படம் மாட்டப் பட்டிருந்தது. அதில் நிறைய சட்ட விரோத மாக்கப்பட்ட புத்தகங்கள் ஒளித்து வைக்கப் பட்டிருந்தன. அவற்றில் புரட்சிக்காரர்களுடையதும், விஞ் ஞானிகளுடையதும், பேரறிஞர்களுடையதுமான ஏராள நூல்களிருந்தன.

டெரென் கோவின் கடைக்குப்போகத் தலைப்பட் டது முதல், அவனுடன் பரிச்சயம் ஏற்பட்டதிலிருந்து, அவனது சந்திப்பின் காரணமாக, கார்க்கியும் ஓர் புரட்சிக் காரனாகி விட்டான். புரட்சியாளர் களுடனும், தலைமறை வாயிருக்கும் 'இரகசிய மாணவர்களின் 'சங்கத்துடனும் தொடர்பேற்படுத்திக்கொண்டான்.

அங்கு அடிக்கடி சென்று சரித்திரம், பொருளாதாரம், அரசியல் சம்மந்தப்பட்ட நூல்களையும், பத்திரிக்கைகளையும் படிப்பதிலும், அவர்களுடன் சம்பாஷிப்பதிலும், அதிகப் பற்றுதல் ஏற்பட்டதவனுக்கு.

அந்தக்காலத்தில் கார்ல் மார்க்ஸின் ¶ "மூலதனம்" கிடைக்கக்கூடாத ஓர் நூலாக இருந்தது. அதன் முதல் அத்தியாயத்தை கையால் எழுதி, அந்த கையெழுத்துப்

---

† Andrei Derenkov.
§ Hertzen.
¶ "Capital" By Karl Marx.

பிரதியே ஓர் சுற்று சுற்றி வரும். கார்க்கி மார்க்கவீய தத்துவங்களையும், ¶ ஆதம் ஸ்மித், § செர்னி ஸெவ்ஸ்கி போன்றவர்களின் சித்தாந்தங்களையும் மிக ஆவலுடனும் ஆர்வத்துடனும் படித்து வரலானான்.

ஒரு சமயம், காஸான் போலிஸார் கார்க்கியின் இருப்பிடத்தை பரிசோதனை போட்டார்கள். அங்கே ஓர் நோட்டு புஸ்தகம் மட்டும் இருந்தது. அதில் ஏராளமான குறிப்புகள் காணப்பட்டன. ஆனால் அது மார்க்ஸின் தத்துவங்களைப் பற்றியதாக இல்லை. நல்ல வேளையாக † மிர்டோ-லெவ்ரோவின் அறநூலிலிருந்தும், சரித்திரங்களிலிருந்தும், கார்க்கி அதில் குறிப்பெழுதி வைத்திருந்தான். அதனால் போலீசார் அதை கைப்பற்றிக் கொள்ளாமல் போட்டு விட்டு போய் விட்டார்கள். என்றாலும் கார்க்கியைப் பற்றிய தகவலை போலீஸார் மேலதிகாரிகளுக்கு அனுப்பாமல் இருந்து விடவில்லை. அதில் 'அவனைப்பற்றி சந்தேகமாயிருப்பதாயும்' அவன் விஞ்ஞான நூல்களெல்லாம் படிக்கின்றான் என்பதாயும்' போலீஸார் அவனைப் பற்றிய தகவலில் குறிப்பிட்டிருந்தனர்.

இரகசிய கூட்டங்களில் பழகும் பொழுது கார்க்கி "வாயாடி" என்ற புனைப் பெயரை தனக்கு உபயோகித்துக் கொள்வான். புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் நிறைய படிப்பான். அதைப்பற்றி விவாதிப்பான். கார்க்கி விவாதிப்பது மிகவும் லக்ஷணமாக இருக்கும். அவனது கோட்பாடுகள் அவன் படித்த நூல்களினின்றும் எடுக்கப்பட்டதாக இராது.

¶ Adam Smith.
§ Cherny Shevsky.
† Mirtov-Lavrov.

நிலமையை அனுசரித்து அவனது சொந்த அனுபவங்களி லிருந்து எடுத்துக்காட்டுவான். அது கேட்பவர்கள் மனதில் நன்கு பதியத்தக்கன வாயிருக்கும். அர்த்த மற்ற வீண் சம் பாஷணைகள் கார்க்கிக்கு கொஞ்சமும் பிடிக்காது. அவன் சொல்வதை மற்றவர்கள் அதிக கவனத்துடன் கேட்டு விஷ யங்களை நன்கு கிரகித்துக் கொள்வார்கள். அவர்கள் அவனை மதித்து அவன் சொல்லும் விஷயங்களில் சிரத்தை காட்டி வந்தார்கள்.

கார்க்கியும் அதற் கேற்றாற் போல் ஆழ்ந்த சிந்தனையும் தெளிந்த கல்வி ஞானமும் உடையவனாக இருந்தான்.

கார்க்கி பேசிக்கொண்டு வரும் பொழுது யாராகிலும் வீணாய் குறுக்கிட்டால் அவனுக்கு பிரமாத கோபம் வந்து விடும். ஒரு சமயம் இப்படித்தான்: கார்க்கி பேசிக் கொண்டி ருக்கும் பொழுது அவனுக்கு கோபம் வந்து விட்டது 'நீங்கள் முட்டுக் கட்டையா யிராதீர்கள் சகோதரரே' என்று விநய பாவத்துடன் தன் ஆத்திரத்தை வெளியே கொட்டி விட்டான் ஓர் நண்பரிடம்.

கஸானில் இருந்த பொழுது கார்க்கி அடைந்துள்ள கஷ்டங்கள் ஏராளம். அவன் அங்கே வாழ்க்கையில் மிகுந்த தரித்திரியத்தையும், துன்பத்தையும் அனுபவித்தான். அது உண்மை. ஆனால் அதே மாத்திரத்தில் அவன் சர்வகலா சாலையிலும் படித்தறிய முடியாத அநேக அறிய விஷயங்களை எல்லாம் அங்கே, அந் நாடோடி வாழ்விலே கற்றுக் கொண்டு விட்டான்.

5 ரொட்டிக்கிடங்கில்.

சாந் காலம் வந்தது. ஆற்றங்கரைக்கு கப்பல் வரு வது தடைபடலாயிற்று. துறைமுகம் எவ்வித வேலைக்கும் இடமேற் படுத்தாத படி வெறுமையாயிருந்தது.

செயற்படு காரியந்தான் கொடிதென்பார்கள். ஆனல் இயற்கையே கார்க்கிக்கு சத்ருவானது. பருவ மாறுதல் அவனது அந்தப் பிழைப்புக்கும் உலைவைத்து விட்டது.

வயிறு கழுவும் நிமித்தம் அவிடத்தை விட்டு கிளம்பி ஞன். உஸ்டயா ஜில்லா பூராவுக்கும் சுற்றி அலைந்தான். அவனுக்கு ஒரு தொழிலும் கிடைக்க வில்லை. பசி. இரவும் பசி, பகலும்பசி. அவனை பிய்த்துத் தின்று கொண்டிருந்தது ஒவ்வொரிடமாய் போய் யாசித்து உண்பான்; சில சமயம் அவன் கொடும்பசி கால்களைக்கட்டி விடும். நடக்க செயலற்று கண்ட விட மெல்லாம் படுத்துறங்கி விடுவான். பொழுது புலரும்; கண்களைத் துடைத்துக் கொள்வான். பனியும் குளி ரும் அவனை இறுக தழுவியிருக்கும். காலத்தை உயர்ந்து பார்ப்பான்; பருவத்தின் கோரதன்மையை எண்ணி விம்மு வான்; கதிர் கிரணங்கள் அவனைத் தாவ ஓடிவரும். சீறி எழுந்து தனக்குள் சமாதானம் சொல்லிக் கொள்வான். அகா தரவான அபலைகட்கு எற்ற பருவம் அதல்ல வென நினைந்து காலத்தை நோகுவான்; தனக்குள் ஒன்று முடிவு செய்து கொள்வான். என்ன வேலை கிடைத்தாலும் சரி. அதனைப் பார்த்து தன் பசியைப் போக்கிக் கொள்வதென

நாட்கள் இப்படிச்சில செ றன. கடைசியாய் ஓர் ரொட்டிக் கிடங்கிற்கு வந்து சேர்ந்தான். அதன் முதலாளி செமியானேவ் என்பவன். மாதம் மூன்று ரூபிள் (சுமார் ரூ. 4-8-0) சம்பளத்துக்கு கார்க்கியை அவனிடம் சிற்றாள் வேலைக்கு சேர்த்துக்கொண்டான்.

ரொட்டிக்கிடங்கு கீழ் தளத்தில் இருந்தது. அதில் ஜன்னல்கள் வைத்து இரும்புக் கிராதிகள் போடப் பட்டிருந் தன. அங்கு உள்ளிருந்தபடி வெளியே யாருக்கும் ஒன்றும் கொடுத்து விட முடியாதபடி.

கார்க்கி இதில் தினம் ஒன்றுக்கு 14 மணி நேரத்திற்கு குறையாமல் வேலை செய்தாக வேண்டும். அவனைத் தவிர மற்றும் 26 சிறுவர்கள் வேலை பார்த்தார்கள். முதலாளி அவர்களை எல்லாம் அடிப்பான், உதைப்பான், கண்டபடி பேசுவான். அதற்கு அவர்கள் ஒன்றும் பதில் சொல்லி விடக்கூடாது.

நரக வேதனைகள் என்று சொல்லப்படுபனவற்றை க்காட்டிலும் செமியனேவின் ரொட்டிக்கிடங்கில் அனுபவிக் கும் வேதனைகள்.

நீண்ட நேர கடின உழைப்பு கார்க்கிக்கு ஒத்துக் கொள்ள வில்லை. அவன் உடல் கொஞ்சம் கொஞ்சமாய் ஒடுங்கி மெலிந்து போயிற்று. அடிக்கடி ஆயாசத்தையும், பலஹீனத்தையும் உணரலானன்.

பிற்காலத்தில் கார்க்கி இக்கொடிய வாழ்க்கை நிலமையைப்பற்றி எழுதியிருக்கின்றான்;

"நாங்கள் 26 பேர்கள். 26 ஜீவனுள்ள இயந்திரங்களைப்போல் அந்த இருட்டறையில் அடைக்கப் பட்டிருந்தோம். ரொட்டி சுடுவதற்குரிய மாவை பிசைந்து பக்குவப் படுத்துவதே எங்கள் வேலை. காலை முதல் இரவு நடு நிசி வரையில் உழைக்க வேண்டும். வேலை செய்ய போதிய வெளிச்சம் அங்கே இராது. வேலையில்லா திண்டாட்டத்தில் மூழ்கிக் கிடந்த எங்கள் அருமைச் சகோதரர்களுக்கு நாங்கள் ஓர் ரொட்டித் துண்டை எறிந்து விட்டால் என்ன செய்வதென்ற கொடிய மனப் பான்மையினால் முதலாளி கதவுகளையும், ஜன்னல்களையும் நன்றாய் மூடிப்போட்டு விடுவார். அவர் எங்களை 'அடிமைக் கூலிகள்' என்றே அழைப்பது. கடைத் தெருவுகளில் விற்கப்படாது போகும் ரொட்டித் துண்டுகளைத் தான் எங்களுக்கு ஆகாரமாகக் கொடுப்பார். அங்கே நாங்கள் இருளடைந்து துன்பஞ் சூழ்ந்த ஓர் கொடிய வாழ்க்கையை நடத்தினோம். காலை மணி 4-க்கே எழுந்து ரொட்டியை தயாரிக்க வேண்டும். இரவு மணி 10க்கு மேலுங்கூட வேலை நீடித்திருக்கும் ......" என.

முதலாளி அவர்களை அடிப்பதோடும், திட்டுவதோடும் மட்டும் நின்று விடுவதில்லை. அடிக்கடி அபராதம் போடுவான்; தண்டனை கொடுப்பான்.

அக் கொடுமைகள் சகிக்க முடியாதபடி ஒரு நாள் அந்த தொழிலாளிகளுடன் அதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தான். இதை தலை மறைவாக நின்று கேட்டுக் கொண்டிருந்து விட்டான் முதலாளி. உடனே வந்தது மோசம். கார்க்கியை திட்டி, அடி கொடுத்து அபராதமாக அவனை மாவு பிசையும் வேலைக்கு தள்ளி விட்டான்.

வேறு கதியற்ற கார்க்கி அதில்தான் புழுப்போல் நெளிந்து கொண்டு வாழ்ந்தான். அப்படி யிருந்தும் படிப்பு வாசனை அவனை சும்மா விட்டு விட வில்லை. விறகு கட்டைகளுடன் திருட்டுத்தனமாக புத்தகங்களையும் கொண்டு வந்து விடுவான். உள்ளே அவனும் படிப்பான். அங்குள்ள அந்த மற்ற வேலையாட்களுக்கும் படிக்க உதவி விஷயங்களை எடுத்தோதுவான்.

ஒரு நாள், கார்க்கி டால்ஸ்டாயின் நூல் ஒன்றை படித்துக் கொண்டிருந்த சமயம். அவன் முதலாளி செமியனோவ் திடுமென உள்ளே பிரவேசித்து விட்டான். கார்க்கிக்கு வெட வெடத்து வியர்த்துபோய் விட்டது. அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டான். பயம் அவன் நெஞ்சத்தை கூறு போட்டுக் கொண்டிருந்தது. அதற் கேற்றாற் போல் செமியனோவ் அவன் கையிலிருந்த அந்த புஸ்தகத்தை பிடுங்கி நெருப்பில் எறியப் போனான். கார்க்கிக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கு அளவில்லை ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டு 'அப்புத்தகத்தை நெருப்பில் போடக் கூடாதென' கெஞ்சி வாதாடினான். கெஞ்சும் தோரணையையும், தளர்ந்த குரலையும் கண்டு மனமிளகி செமியனோவ் நெருப்பில் போடாது அவனிடம் திரும்பக் கொடுத்து விட்டான்.

அங்கு செமியனோவிடம் வேலை பார்த்தவரை, கார்க்கி அவன் தன் சுய உரிமைகளுக்காக மட்டும் தன் எஜமானனுடன் தர்க்கிப்பதில்லை. தன் சகதோழர்களின் நலத்திற்ககாவும் பாடுபட்டு வந்தான்.

ஒரு சமயம், இப்படி நாளுக்கு நாள் கஷ்டம் வலுப்பதைக் கண்டு அதை பொறுக்க முடியாதபடி ஓர் யோசனை

செய்தான். அவன் சகோதர தொழிலாளர்களை எல்லாம், ஒன்று கூட்டினான். வேலை செய்ய மறுத்து எல்லோருமாய் 'ஸ்டிரைக்' செய்தார்கள். அதனால் ஒன்றும் அவர்களுக்கு பலன் உண்டாகிவிடவில்லை. என்றாலும் அவர்களின் அந்தரங்கத்தில் ஒளிந்திருந்த கர்ண கடூர வேதனை மனப்பான்மையை அந்த 'ஸ்டிரைக்' கொஞ்சம் வெளிக்காட்ட யேதுவாயிருந்தது. அது அவர்களது சகோதர உணர்ச்சியையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும், வெளிக்காட்டும் ஓர் கருவியாக இருந்தது.

ஸ்டிரைக்கிலும் பலன் ஏற்படாது போகவே கார்க்கி அங்கிருந்து வேலை பார்ப்பதில் மிகவும் சலிப்படைந்தவனாயிருந்தான். அது நாளுக்கு நாள் அவனுக்கு துக்கத்தையும், கஷ்டத்தையுமே அளிப்பதாய் இருந்தது. ஓர் வேறு நல்ல சந்தர்ப்பத்தை எண்ணி பெருமூச்செறிந்து கொண்டிருந்தான்.

அதற்கேற்றாற் போல் அவனுக்கு தகவல் கிடைத்தது. ஆன்ட்ரி டெரினிகோவ் ஓர் ரொட்டிக் கிடங்கு ஸ்தாபித்திருப்பதாயும், அதில் கிடைக்கக்கூடிய வருமானத்தை எல்லாம் புரட்சி இயக்கத்திற்கு கொடுப்பதென திட்டமிட்டிருப்பதாயும், அதற்கு ஓர் ஆள் தேவை என்பதாயும்.

கார்க்கி இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதபடி சட்டென இங்கே ஆன்டிரிடெரினிகோவின் ரொட்டிக் கிடங்கிற்கு வந்து சேர்ந்து கொண்டான்.

இங்கே வேலை இலகுவில்லா விட்டாலும் கூட இரகசிய வேலைகளை புரட்சி இயக்க சம்மந்தமாக செய்வதில் அது அவனுக்கு கொஞ்சம் உற்சாகத்தை அளித்து வந்தது.

உதயத்திற்கும் வெகு நேரத்திற்கு முன்பே துயிலிலிருந்து எழுந்து விடுவான். மாவு பிசைவான்; ரொட்டி தயாரிப்பான். அவற்றைக்கொண்டு போய் கடைகளில் விற்று வருவான். அப்படிப்போகும் பொழுது, ரொட்டி கொண்டு போகும் கூடையிலேயே புரட்சி சம்மந்தப் பட்ட இரகசிய கடிதங்களை ஒளித்துக் கொண்டு போய் மாணவர்களிடையே விநியோகம் செய்துவருவான்.

அந்த வேலையைப்பற்றியவரையில், அது அவனுக்கு நன்றாகத் தெரியும். அரசாங்கம் புரட்சிக்காரர்களை வேட்டையாடுவதில் முனைந்திருந்தது. எத்தனையோ நூற்றுக்கணக்கான பேர்கள் முன்னமேயே சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்கள்.

கார்க்கிக்கு கிடங்கிலே நாள் பூராவுக்கும் வேலை. இரவிலுங்கூட நெடுநேரம் வரையில் வேலை. இரவின் பெரும் பகுதியை போக்கி விட்டு பின் தன் ஜாகைக்கு வருவான். ஓர் சின்ன எண்ணெய் விளக்கை ஏற்றி வைத்துக் கொள்வான். நெடு நேரம் படித்துக் கொண் டிருப்பான்.

சில சமயம் நாளைக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கூட தூங்க மாட்டான். அது அவனுக்கு தெரிந்த விஷயம். அவன் அநேகம் நூல்களில் அதற்கு முன்னமேயே படித்திருக்கின்றான். அதனை அடிக்கடி சிந்தித்துக் கொள்வான். அராபிப் பழமொழியை படித் திருக்கின்றான் 'தூங்குபவன் தூங்கு மூஞ்சி அவனை தட்டி எழுப்பு' என்று. ஆனால் அவனைத்தட்டி எழுப்ப யாரும் இல்லை.

அவன் தனக்குள்ளே சொல்லிக்கொள்வான். உலகத்தில் வாழ்ந்த எத்தனையோ மேதைகள் தினம் 4 மணி

நேரத்திற்கு மேல் துயின்றதில்லை. பாட்ரிக் பிராண்டி என்ற பிரபல நாவலாசிரியனுங் கூடத்தான். அவனும் 4 மணி நேரத்திற்கு மேல் துயின்றதில்லையாம்.

படிக்கும் பொழுதே சடக்கென்று புத்தகத்தை மூடி வைத்து விடுவான். அவன் படித்த அந்த கதா பாத்திரங்களின் வாழ்க்கையின் தாரதம்மியங்களைச் சிந்திப்பான். வாழ்க்கையைப்பற்றி அந்நூல்களின் கருத்துக்களை ஆராய்வான். வாழ்க்கை அவனுக்கு ஏதோ அவனால் அறிய முடியாத ஒன்றைப்போல் தோன்றும். அது ஏதோ தன்னுள் ஓர் இரகசியத்தை ஒளித்து வைத்திருப்பதைப் போல் உணர்வான்; வாழ்க்கையைப் பற்றிய தத்துவ விசாரணையை தனக்குள் நடத்தி பார்ப்பான். சமயங்களில் அவற்றினை குறிப்பெழுதிக் கொள்வான். அசதியும், ஆயாசமும் மேலிட்டு அப்படியே அவனை கீழே படுக்கையில் தள்ளி விட்டு விடும்.

6 தற்கொலை முயற்சி

வாழ்க்கை யாவருக்கும் அன்புள்ள மாதாவைப் போன்றிருப்பதில்லை. வெகு பேரை வஞ்சித்து விடுகிறது. வெகு பேரை நிஷ்டூரத்துடன் ஒதுக்கி விட்டுவிடுகிறது. வெகு பேரை அதன் காலடியிலே போட்டு மிதித்துத்தள்ளி விடுகிறது. அதன் காலடியிலே மிதியுண்டு கிடக்கின்றான். போராடி, போராடி துவண்டு மடிகின்றான்.

இந்த வாழ்கையின் அநீதத்தைப் பற்றிய தீர்க்க தரிசனத்தை கார்க்கி பல முறை எண்ணிப் பார்த்துள்ளான்.

'பட்டகாலிலேயே படும்' என்பார்களே, அதேபோல் தான் கார்க்கிக்கு மேன்மேலும் கஷ்டங்கள் தொடர்ந்து வந்தன. அவன் பாட்டியாரும் இறந்து போய்விட்டதாக நிழனி-நோவகோரட்டிலிருந்து ஓர் கடிதம் வந்தது. உலகில் அவனுக்கு அமைதியைத்தரும் ஒரே ஒரு அன்பான ஜந்து; சாவு அவளையும் விழுங்கி வஞ்சித்து விட்டது.

கார்க்கி இதனை தன் வாழ்விலே ஓர் பெரும் சோதனை காலமாய் நினைத்தான். கடந்த காலத்திய எண்ணங்கள் அவன் ஞாபகத்தில் பளீரிட்டன. அந்த இறந்துபோன வயோதிக ஸ்திரீயின் வாஞ்சையை எண்ணினான்; வாழ்விலே அல்லல் பட்டு துன்புற்று தவித்ததையும் அவன் ஈன ஜென்மத்தை எண்ணி பெரு மூச்சு விட்டான். வாழ்க்கை அவனை பிடர் பிடித்து தள்ளி விட்டதைப்போல்

கினைத்தான். ஒண்ட இவ்வுலகிலே அவனுக்கு ஓர் இடமும் இல்லை என்பதைப்போல் முடிவு கட்டிக் கொண்டான்.

வாழ்விலே இனி அவனுக்கு இடமில்லை. அவனுக்கு உற்றாரோ, உறவினரோ, நண்பரோ யாருமில்லை. அநாதையாய், நாடோடியாய், அலைந்து திரிந்து, இரந்து வாழவேண்டும். இது தவிர வேறு ஒன்றும் அவனுக்கு கதியில்லை.

இது இன்னும் அவனுல் அடக்கமுடியாத ஓர் கோர உணர்ச்சியை தட்டி எழுப்பி விட்டது. இரவில் தூங்க மாட்டாதபடி படுக்கையில் புரண்டு புரண்டு பார்ப்பான்; புழுங்கி புழுங்கி வெதும்புவான். அவன் பாட்டி இறந்த விசாரம் வேறு; வாழ்வில் அவன் அடையும் கஷ்ட நிஷ்டூரங்கள் வேறு. இவைகள் அவன் மனதை அணுவணு வாய் சிதைத்துக்கொல்லும். சஞ்சலத்தால் பெருமூச் செறிவான். அழுது கண்ணீர் வடிப்பான். அந்தோ! பரிதாப வீணன். பிடிலை வாசித்து தன் சஞ்சலத்தைக் குறைக்கப்பார்ப்பான். பிடில் மறுநாளை கொண்டு வந்து விடும்.

மேலும் அந்த வருடமே மிகக் கொடுமை வாய்ந்ததா யிருந்தது. அது 1887ல் கார்க்கிக்கு அப்பொழுது வயது 19.

அவனுக்கு எதிலும் அமைதியுண்டாகவில்லை. அன்று இரவைப் போக்கினன். மறுநாள் விடிந்தது. மார்க்கெட்டுக்குச் சென்றான். மூன்று ரூபிள் கொடுத்து ஒரு 'ரிவால்வர்' வாங்கினன்.

அன்று அவனது நண்பர்களில் ஒருவன், ஒரு மாணவன், தன்னை சுட்டுக்கொண்டு இறந்து போய்

விட்டான். மற்ருெரு மாணவன் 'வாழ்விலிருந்து சீக்கிரம் போகும் பாதைக்கு' அவனும் தற்கொலே செய்து கொண்டு போய்விட்டான். இன்னும் பலரும் தற்கொலே செய்து கொண்டதை கேள்விப்பட்டான் கார்க்கி.

அதே அவனுக்கும் முடிவாகத்தோன்றியது. அது தவிர வேருென்றும் இவ்வையகத்தில் தோன்றவில்லே. கோர பைசாசங்கள் நிறைந்த உலகம். பொய்யும், புரட்டும், சூதும், வஞ்சனேயும் நிறைந்த உலகம். உத்தமர்களே விரட்டியடிக்கின்றது.

கடைசியாக ஓர் முறை உலகை வெறித்துப் பார்த்தான். உயிர் சிலிர்க்கும் அவனது அஞ்ஞான திருஷ்டி. கண்களில் நீர் மல்கி வழிந்தது. ஆயிரந்துளிகளே கீழே உதிர்த்துப்பார்த்தான்.

கை அவன் பிடிப்பிலிருந்து நடுங்கவில்லே. மனதை திடம் செய்து கொண்டான். ரிவால்வரை நீட்டி தன்னேயே சுட்டுக்கொண்டு விட்டான். மாய உடல் மண்ணில் சாய்ந்தது.

1887 டிசம்பர் 14ம் தேதி காஸானிலிருந்து வெளியாகும் தினசரி பத்திரிக்கையில் கீழ்கண்ட செய்தி பிரசுரமாயிருந்தது:

"டிசம்பர் 12ம் தேதி மாலே 8 மணிக்கு, காஸான்கா நதிக்கரையில், போட்லுஸன்யா தெருவில், நிழனி நோவ் கோரட்டைச்சேர்ந்த கலேஞன், அலெக்ஸி மாக்ஸிமோவிச் பெஷ்கோவ் என்பவன் தற்கொலே செய்து கொள்ளும் நோக்கத்துடன் 'ரிவால்வால்' தன் இடது பாரிசத்தில் சுட்டுக்கொண்டு விட்டான்.

பெஷ்கோவை உடனேயே ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். பரிசோதனை செய்த டாக்டர் காயம் பலமாயிருப்பதாயும், பிழைப்பது அரிது என்று சொல்வதாக, கூறப்படுகிறது. அவன் சட்டைப் பையில் ஓர் நோட்டுப் புத்தகம் காணப்பட்டது. அதில் அவன் கொலைக்கு யாரும் ஜவாப்தாரியல்ல என குறிக்கப்பட்டிருக்கிறது.''

''அதில் அவன் தன்னைப்பற்றிய முடிவை விவரித்தெழுதியுள்ளான்:''

''என் சாவுக்குரிய காரணத்தை ஜெர்மன் கவிஞரான ‡ ஹெயினின் பேரில்தான் போட வேண்டியிருக்கிறது. ஹெயின் ஹிருதயத்தில் உள்ள பல் வலியைக் கண்டு பிடித்தவர். நான் இதோடு இந்த சந்தர்ப்பத்திற்காக பெற்ற என் பயணச் சீட்டை இணைத்து வைத்திருக்கின்றேன். தயவுசெய்து, என் பிரேத பரிசோதனையைச் செய்து, என்னிடம் சைத்தான் மீதிவைத்துள்ளவற்றை அடைந்து கொள்ளுங்கள்.''

''என் சீட்டிலிருந்து, இந்த குறிப்பிலிருந்து, நான்தான் A. பெஷ்கோவ் என்பது தெரியும். வேறொன்றும் காண்பதற்கில்லை.''

டாக்டர் பரிசோதனை செய்தபொழுது கார்க்கி பிரக்ஞையற்றிருந்தான். பின் டாக்டர் சொன்னது அவன் காதில் கேட்டது. 'மூன்று நாளில் இறந்து போய்விடுவான் என்பதாக.'

---

‡ Heinrich Heine.

அந்த இயலாத்தன்மையினாலேயே கார்க்கி அதற்கு பதிலும் சொன்னான். 'இல்லை, நான் சாகமாட்டேன்' என்பதாக. அதே பிரகாரம் அவன் அங்கே இறந்து போய் விடவில்லை. ஆஸ்பத்திரியில் நீண்ட நாட்கள் இருந்து சிகிச்சை பெற்றான். அதுவரை அவனது நண்பர்கள் அங்கே வந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

கார்க்கி இப்பொழுது தன் ஹிருதயத்தில் பல்வலியை போக்கிக் கொண்டான். வாழவேண்டுமென்ற எண்ணம் மீண்டும் உதித்தது.

7 புனர் வாழ்க்கை.

56 56.

சிகிச்சை பெற்று ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி அவன் நண்பர்களின் யோசனை பேரில் டெரன்கோவின் ரொட்டிக்கிடங்கிற்கு வந்தான்.

அங்கு ரோமாஸ் என்ற பெயருடைய ஒருவன் அடிக்கடி வந்து போவான். ரோமாவின் முழுப்பெயர் மிக்கேல் அண்டோனேவிச் ரோமாஸ் என்பதாகும். ரெயில்வே தொழிலாளியாக இருந்தவன்; புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டவன் என்பதற்காக 10 வருடங்கள் நாடு கடத்தப்பட்டிருந்தான். இவன் தகப்பனும் பணக்காரன் அல்ல. பூட்டு வேலை செய்யும் ஓர் ஏழை தொழிலாளி அவனும்.

ரோமாஸ் வால்கா பக்கத்திலுள்ள 'கிரேஸ் நோவி டோவா' என்ற கிராமத்தில் ஓர் சின்ன கடை வைத்து வியாபாரம் செய்துகொண்டு வந்தான். அக்கடையிலிருந்து புரட்சி இயக்க அலுவல்களை செய்வதற்கு அது அங்கே அனுகூலமாயிருந்தது.

ரோமாஸ் கார்க்கியின் பேரில் அளவு கடந்த அன்பு கொண்டான். கார்க்கிக்கும் ரோமாவிடம் அதிக வாஞ்சை ஏற்பட்டது. இருவரும் ஈடு இணையற்ற இரு நண்பர்களாயினர். ரோமாஸ் கார்க்கியை அவனுடன் தங்கி இருக்க வேண்டுமென்றழைத்தான். அதை ஏற்றுக்கொண்டு

கார்க்கி அவனுடனேயே ¶ கிரேஸ்நோவிடோவோவுக்கு சென்றுவிட்டான்.

அங்குதான் கார்க்கிக்கு முதன் முதலாக ஏழை விவசாயிகளின் வாழ்க்கையை அறிந்து அவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

கார்க்கி அநேக நூல்களில் படித்திருக்கின்றான். § 'மூஷிக்குகள்' எளிய மனோபாவம் படைத்தவர்கள்; கற்பனா வாதிகள்; அவர்களை படத்தில் வரையப்பட்டிருப்பதாக என்றெல்லாம். ஆனால் அங்கே அவன் பிரத்யக்ஷமாக கண்ட தெல்லாம் முற்றிலும் மாறாக இருந்தது. மூன்று குடும்பங்களில் சண்டை ஏற்பட்டது. அதன் காரணம் ஓர் மண் பானை உடைந்து போனது என்பதுதான். அந்தச் சண்டைகளை கார்க்கி நேரடியாகப் பார்த்தான். அதன் முடிவு ஒரு கிழவிக்கு ஒரு கை ஒடிந்து போனது; மற்றொரு ஸ்திரீக்கு மண்டை உடைந்து போயிற்று.

இம்மாதிரியான அல்ப விஷயங்களால் ஏற்படும் பிரமாத ரகளைகளை எல்லாம் கண் கூடாக அடிக்கடி கண்டான் கார்க்கி.

அக் கிராம ஜனங்களெல்லாம் ரோமாஸின் கடைக்கு விரோதிகளாயிருந்தார்கள். ஒரு நாள் சாயங்காலம். கிராமத்தான்கள் ஒரே கூட்டமாக ரோமாஸின் கடைக்கு வந்தார்கள். கூட்டம் அதிகமாயிற்று.

¶ Krasnovydovo.
§ Muzhiks.

அப்பொழுதுதான் கார்க்கி எங்கோ வெளியே போய் விட்டு கடைக்கு வந்து சேர்ந்தான்.

கிராமத்தான்களின் கோரத்தாண்டவம் ஆரம்பமாயிற்று. வெறிபிடித்த அயோக்கியக் கூட்டத்தினர் அக்ரம பாதகச் செயல்களில் இறங்கத் துணிந்தனர்.

ரோமாஸுடன் சிநேகமாயிருந்த இஸாத் என்ற ஓர் குடியானவன். மூளை சிதறி செத்துப்போய் வால்கா கரையில் கிடந்தான்.

சிலர் துப்பாக்கியால் ரோமாஸைச் சுடலாயினர். அதன் பின் வெடிமருந்தை அவன் வீட்டில் வைத்து கொளுத்தி விட்டார்கள். அவன் கடையையும் தீ வைத்து கொளுத்தி விட்டார்கள்.

ரோமாவின் கடையும் வீடும் தீப்பற்றி எரிந்தது. கார்க்கி தீயின் ஜுவாலையில் அகப்பட்டுக் கொண்டான். எங்கும் தீ பரவி அவனை சூழ்ந்து விட்டது. அங்கேகிடந்த ஓர் செம்மறியாட்டு தோலால் தைக்கப்பட்ட கோட்டை எடுத்து போர்த்திக் கொண்டு, ஜன்னல் வழியாக குதித் தோடிப்போய் உயிர் தப்பித்தான்.

இந்த நிழலும் கார்க்கிக்கு கிடைக்காமல் போய் விட்டது. எனவே வேறு ஒண்ட நிழலற்றவனாய் அதை விட்டு அவன் நண்பன் பாரினோவ் என்பவனுடன் புறப் பட்டான். இருவருமாய் பல இடங்களையும் சுற்றிக்கொண்டு கடைசியாக காஸ்பியன் கடலோரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இங்கே ஜீவனத்திற்கு வேறு வழியில்லாது போகவே, கார்க்கி காஸ்பியன் கடலில் மீன் பிடித்து சில

காலம் ஜீவித்து வந்தான். அதிலும் கொஞ்சநாளில் மனம் விட்டுப் போனது. எனவே மீண்டும் காஸானுக்குத் திரும்பி வந்தான்.

காஸான் நகரம் அவனுக்கு ஏதோ ஓர் வெறுப்பை யளித்தது. அங்குள்ள ஒவ்வொன்றும் அவனைப் புறக் கணிப்பதைப் போலுணர்ந்தான். அங்கிருந்த டெரென் கோவின் கடையும் மூடப்பட்டு போனது. அதில் வேலை பார்த்துக்கொண்டிருந்த அவனது பழைய நண்பர்களில் பலரும் இறந்து போய் விட்டதாக அறிந்தான்.

காஸான் பூராவும் வேலைதேடி யலைந்து விட்டு இறுதியில் டோபிரின்கா என்ற ஓர் சின்ன ரெயில்வே ஸ்டேஷனில் இராக்காவல் காரனாய் வேலைக்கு அமர்ந்தான்.

அவன் சிறுவனாயிருக்கும் பொழுது, அவன் நகரத்தில் இல்லாதபடி, நகரத்திற்கும் அப்பால் காட்டுப், பக்கமோ அல்லது ஸ்டேஷன் இல்லாத பக்கத்திலோ இருக்க வேண்டு மென்ற ஆசைக் கனவுகளை கண்டு கொண்டிருந்தான். அந்தக்கனவு இப்பொழுது அவனுக்கு பலிதமானது. என்றாலும் வாழ்விலே மன அமைதியற்ற ஓர் கொடிய உணர்ச் சியைத்தான அவனால் காணமுடிந்தது.

ஒவ்வொரு நாளும் மாலை 6 மணி முதல் காலை 6 வரையில் கையில் கம்பை வைத்துக்கொண்டு ஸ்டேஷன் கொட்டகைகளை எல்லாம் சதா ரோந்து சுற்றி பார்த்துக் கொண்டே யிருக்கவேண்டும். அங்கே கோஸாக்குகள் நிறைந்த இடம். திருடுவது கோஸாக்குகள் மட்டுமாக இராது. கார்க்கி அங்கே இருந்தபொழுது அந்த ஸ்டேஷன்

மாஸ்டருங்கூட சாமான்களை பங்கு போட்டுக்கொள்வதில் பின் வாங்காதிருப்பதைக்கண்டான். அவரை எல்லோரும் 'ஆப்ரிக்கன்' என்பதாக அழைப்பார்கள். அவர் தான் கெட்டதுமன்னியில் அவனையும் அல்வழியில் திருப்ப முயன்றான். ஆனால் அதிர்ஷ்ட வசமாக கார்க்கி அங்கே அதிக காலம் நிலைத்திருக்கவில்லை.

அந்த ஸ்டேஷன் மாஸ்டரின் சமையல்காரி ஓர் பொல்லாதவள். அவளுக்கும் கார்க்கிக்கும் கொஞ்சமும் பிடிப்பதில்லை. ரெயில்வேலை பார்த்த நேரம் போக பாக்கி நேரத்தில் கார்க்கியை வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லுவாள். மேஜையைத் துடைக்கச்சொல்லுவாள். வீடு, வாசல் சுத்தி செய்யச் சொல்வாள். அவள் வாயால் இடும் கட்டளைகளை எல்லாம், அவன் கையால் பறந்து செய்தாக வேண்டும்.

இது கார்க்கிக்கு அதிக வேதனையை அளித்தது. 'வாங்கிற சம்பளம் ரெயில்வேயில். அதற்கு வட்டிக்காக அந்த அய்யா வீட்டிலும் உழைத்தாக வேண்டும்' என்றான்.

இது பிடிக்காதபடி மேலதிகாரிகட்கு கார்க்கி புகார் செய்தான். அங்கே இதைப்பற்றி, அதிலும் ஓர் கேவல பதவியிலுள்ள இராக் காவல்காரனுக்காக யார் என்ன விசாரிக்கப் போகின்றார்கள்? கார்க்கி கொடுத்த 'கம்பளைண்டை' ப் பற்றி மேல் விசாரணை ஒன்றும் நடக்கவில்லை.

இது தெரிந்ததும் கார்க்கி மேலும் தன் 'ஸ்டேட்மெண்டை' ஓர் கவிரூபமாக எழுதி தள்ளி விட்டான்.

இதைப்பார்த்த ரெயில்வே அதிகாரிகள் அவனை அங்கிருந்து ¶ போரீஸ்சோ கிளெப்ஸுக்கு மாற்றி விட்டார்கள்.

இங்கே வந்தும் என்ன. இந்த போரீஸ்சோகிளெப் ஸின் வாழ்க்கையைப் பற்றி கார்க்கி தன் "காவல்காரன்" என்ற கதையில் சொல்கிறுன்.

"........காவல் புரிவேன். ஹெயினேயும், ஷேக்ஸ் பியரையும் படிப்பேன். ஆனுல் சில சமயங்களில், இரவில், அவற்றை எல்லாம் விட்டு தனியே வந்து உட்கார்ந்து கொள் வேன். அல்லது படுத்துக் கொள்வேன். என் மனம் வறண்டு வெறுமையாகும்......"என்றெல்லாம்.

இன்னும் அந் நகரில் குடி கொண்டிருந்த கர்நாடக சம்பிரதாயங்களும், அசட்டுக் கொள்கைகளும் கார்க்கிக்கு அதிக மனக் கசப்பை ஏற்படுத்தியது.

அந் நகர மேயர் மந்திர உச்சாடனம் செய்து பேய் களை விரட்டியடிக்கும்படி உத்திரவு போடுவான். உள்ளூர் பள்ளிகூட உபாத்தி தன்மனைவியை பிரதி சனிக்கிழமை தோறும் பொது ஸ்நான கட்டிடத்தில் விட்டு அடிப்பான். இன்னும் இது போன்ற விபரீத செயல்களெல்லாம் நடந்து கொண்டிருக்கும்.

கார்க்கி வேலை பார்த்த ரெயில்வேயில் இன்னும் எவ்வளவோ நல்ல மனிதர்களும் வேலை பார்த்து வந்தார்கள். அவர்களில் ராணுவத்திலிருந்து வந்தவர்களும், கல்லூரி களில் பயின்றவர்களும், இன்னும் நல்ல கல்விமான்களும்

¶ Borisoglebsk.

நிரம்பியிருந்தார்கள். ஆனாலும் அவர்களில் பலர் சந்தேகிக்கத் தக்கவர்களைப் போலவே காணப்பட்டனர். அரசியல் இயக்கத்தில் கலந்து கொண்ட காரணத்திற்காக சிறை சென்று வந்தவர்களும், நாடுகடுத்தப் பட்டவர்களும் கூட இருந்தார்கள்.

கார்க்கி அவர்களிடம் தான் அந்த போரீஸ்சோகிளெப்ஸ் 'பிலிஸ்டைன்ஸ்' களைப்பற்றி என்ன நினைக்கின்றான் என்பதை கதைகள் மாதிரிச் சொல்லுவான். அவர்கள் அதைக் கேட்டுக் கொண்டு அவனைப்பார்த்து சிரிப்பார்கள். அவன் சொல்வது அவர்களுக்கு ஏதோ தமாஷாகப் பட்டது.

இருந்தாலும் கார்க்கிக்கு இது ஓர் வகையில் மன மாற்றத்தை அளித்தது. காஸானில் அவன் இருந்த பொழுது அங்கு அந்த புரட்சிக்காரர்களின் வட்டாரங்களில் அவனை ஏதோ பிரித்து வைத்திருப்பதைப் போலுணர்ந்தான். அதனால் இவன் அங்கு யாருக்கும் மரியாதை செய்யவில்லை. இங்கே, பொரீஸ்சோகிளெப்ஸில் என்ன வென்றால் அத்தகைய அரசியல்வாதிகள் குறுகிய நோக்கம் உடையவர்களாயும், பாமரர் செய்கைகளை யுடையவர்களாயும் அவனுக்கு காணப் பட்டார்கள்.

இவர்களில் பாஸெனேவ் என்ற ஒருவன் மட்டும் கார்க்கியினிடத்தில் அளவு கடந்த அன்பைக் காண்பித்தான். கார்க்கியும் பாஸெனேவிடம் அத்யந்த விஸ்வாசத்துடனும், அன்புடனும், மரியாதையுடனும் பழகலானான்.

இப்பொழுது கார்க்கியை ரயில்வே அதிகாரிகள் போரிஸ்சோ கிளெப்ஸிலிருந்து குருட்டயா (Krutaya)

ஸ்டேஷனுக்கு இடை கங்காணிப் பாளன் வேலைக்கி மாற்றி விட்டார்கள்.

குருட்டயா மிகச் சிறிய ஸ்டேஷன். வண்டிகள் அடிக்கடி வருவதில்லை. கொசுக்களுக்கும், எலிகளுக்கும் பஞ்சமில்லாத இடம். போரிஸ்சோ கிளெப்ஸிலாகிலும் கார்க்கியிடம் ஹெயினும், ஷேக்ஸ்பியரும் மிஞ்சி யிருந்தது. இங்கே அதுவு மில்லை.

ஒரு நாள் கார்க்கிக்கு அவன் முன் இருந்த போரிஸ் சோகிளெப்ஸிலிருந்து ஓர் தகவல் கிடைத்தது. அதில் அவனது அருமை நண்பனை பாஸேனேவ் என்பவன் மாதா கோவில் வாசலில் தன்னை சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டான் எனவும், அவன் எழுதி வைத்துவிட்டுப் போன கடிதத்தில் அவனது புத்தகங்களை எல்லாம் குருட்டயாவிலிருக்கும் மாக்ஸிமிச்சுக்கு (கார்க்கிக்கு) அனுப்பி விடும் படிக்கும் ....கண்டிருந்தது.

இந்தச் செய்தி கார்க்கிக்கு மிகவும் மனத்துயரை அளித்தது. அந்த நண்பனின் பரிதாப முடிவை எண்ணி வருந்தினன். அவனது பிரிவாற்றாமையால் மனம் நொந்து கண்ணீர் வடித்தான். அவன் ஒருவனே கார்க்கியின் அன்பிற்கும், மரியாதைக்கும் உரியவனாயிருந்தான். அவனையும் சாவு அழைத்துக் கொண்டு விட்டது.

எனவே அங்கு இருக்க சற்றும் பிடிக்காதபடி குருட்டயாவை விட்டு புறப்பட்டு காலால் நடந்தே மீண்டும் நிழனி-நோவ கோரட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இப்பொழுது, கார்க்கிக்கு வயது இருபத்திரெண்டு. இது வரை எங்கெல்லாமோ சுற்றித் திரும்பிவந்த அவன் மனம் தன் ஜன்ம பூமியாகிய நிழனி-நோவ்கோரட்டைக் கண்ட பொழுது, அவன் அடைந்த இன்பத்திற்கு எல்லை இல்லை. அவன் பிறந்த ஊர் அவனை விரட்டியடித்திருந்த போதிலும் அவனது பக்தியும், விஸ்வாசமும் கொஞ்சமும் குறையவில்லை. மண்ணை எடுத்து முத்தமிட்டுக் கொண்டான்.

ஆனல் நாட்கள் கொஞ்சம் சென்றது. அவன் விஸ்வாசித்த அதே தாய் நாடு அவனை மீண்டும் அடித்து விரட்டத் தொடங்கியது. ஆதரவற்ற அவன் தன் மனம் போல் கிளம்பிச் செல்லலானன்.

இது தான் கார்க்கியின் முதலாவது சுற்றுப் பிரயாணம் எனலாம்.

காலால் நடந்து செல்வான். ஆங்காங்கே ஏதாகிலும் வேலை கிடைத்தால் அதைச் செய்து அக்கூலியை வாங்கி வயிற்றை நிரப்புவான். அதுவும் கிடைக்காவிடில் பிச்சை எடுத்து உண்பான்.

இப்படித்தான் நிழனி-நோவ் கோரட்டிலிருந்து கிளம்பிய அவன் டான் பிரதேசம், தாம்போவ், ரைஸான் ஆகிய பிரதேசங்களை எல்லாம் சுற்றிக் கொண்டு மாஸ்கோவிற்குச் சென்றான். அது செப்டம்பர் மாதத்தில்.

அந்த மார்கத்தில் தான் ‡ காமோவ்னிக்கி ஜில்லாவிலிருந்த டால்ஸ்டாயின் வாசற் ஸ்தலத்திற்குச் சென்றான்

அப்பொழுது டால்ஸ்டாய் வீட்டிலில்லை. அந்த பிரபல ஆசிரியரின் மனைவி § சோபியா ஆண்டிரியேவ்னா தான் வீட்டில் இருந்தார். அந்த அம்மை கார்க்கியைக் கண்டதும் அன்புடன் வரவேற்று, ஆசனமளித்து, உட்காரச் செய்து அவனுக்கு காப்பி முதலிய சிற்றுண்டி கொடுத்து உபசரித்தாராம். அவரது உபசாரத்தையும், பாராமரிப்பையும், அன்பையும் பற்றி கார்க்கி அளவளாவி புகழ்ந்திருக்கின்றான்.

அந்த நாடோடி வாழ்விலே, அவனது சுற்றுப் பிரயாணத்தைப் பற்றிய சம்பவங்களை ஒன்றையும் அவன் மறந்து

‡ Khamovniki District.
§ Sofia Andreyevna.

விடவில்லை. யாவற்றையும் ஞாபகத்தில் கெட்டி பண்ணி வைத்திருந்தான். பின்னர் அதைப்பற்றி சொல்லுகின்றான்:

"அது செப்டம்பர் கடைசியிலே, மழை பூமியில் நன்றாய் வர்ஷித்துக் கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று வீசி வயல்களிலுள்ள அரிதாள்களை எல்லாம் பறக்கடித்துக் கொண்டிருந்தது. மரங்களும், செடி, கொடிகளும் பசுமை பூத்து செழித்தோங்கியிருந்தது. அந்த வருடத்திலேயே அது மிக அழகான பருவம். ஆனால் பாதசாரிகளின் பிரயாணத்திற்கு முற்றிலும் ஒவ்வாத காலம்.

"மாஸ்கோ ஸ்டேஷனில், ஒரு ரெயில்வே கார்டிடம் என்னை அந்த 'குட்ஸ் டிரெயினில்' ஏற்றிப் போக வேண்டுமென்று கோரினேன். அதன்படி அவர் என்னை அனுமதித்தார். நான் ஏறியிருந்த வண்டியில் மற்றும் 8 'சர்க்கஸ்' எருதுகளும் இருந்தன. அவைகள் அறுப்பதற்காக நிழனிநோவ் கோரட்டிற்கு ஓர் கசாப்பு கடைக்காரனுக்கு அனுப்பப் பட்டவை. அவற்றில் 5 சுமாராய் காணப்பட்டன. பாக்கி எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. எப்படியிருந்தால் என்ன மனிதன் வயிற்றை நிரப்ப வேண்டியது தானே?

"அந்த ரெயில் பிரயாணம் மட்டும், அம்மாடுகளுக்கு தீனி போடும் உத்தியோகத்தை அந்த கார்டு என்னிடம் ஒப்படைத்திருந்தார். அந்த மாடுகளை எனது சகபாடிகளாக அவர் மதித்திருக்க வேண்டும் வண்டி நிற்கும் ஒவ்வோரிடத்திலும் கையில் கொஞ்சம் வைக்கோலை அள்ளி என்னிடம் கொடுத்து அதனைப் போடச் சொல்லுவார்.

"34 மணி நேரம் அந்த மாடுகளுடன் வண்டியில் கழித்தேன். அத்தகையவிபரீதமான சம்பவத்தை என் வாழ்விலே பின்னிட்டு நான் என்றும் கண்டதில்லை...." என்பதாக.

இப்படியெல்லாம் சுற்றி அலைந்து விட்டு திரும்பவும் நிழனி-நோவ் கோரட்டிற்கு வந்தான். ஆனால் இந்தத் தடவை கார்க்கி வெறுங்கையுடன் வரவில்லை. பையில் ஓர் நோட்டு புஸ்தகம் இருந்தது. அதில் "விருத்த செந்தூர மரத்தின் கீதம்" என்ற மகுடத்துடன் கூடிய ஓர் கவிதையை எழுதி வைத்திருந்தான். இதில், அவன் இதை எழுதியுள்ளதைப் பற்றி அவனுக்கே ஓர் அடக்க முடியாத மகிழ்ச்சி. இக் கவிதையில் அமோகப் பிரியங் காட்டினான். இது என்றாகிலும் வெளியிடக் கூடுமானால், நிச்சயம் அவனது சகபாடிகளின் மனதில் ஓர் அழியாத உணர்ச்சியை உண்டாக்கக் கூடுமென் றெண்ணியிருந்தான்.

ஆனால் அவன் மெச்சும் இத்தகைய கவிதையை எழுதி விட்டதினால் மட்டும் அவனது நிலமையில் கொஞ்சமும் மாறுபாடுண்டாகி விடவில்லை. 'பசி கற் சுவற்றையும் தகர்த்து விடும்' என்பார்கள். அதே போல் அவனது வறிய நிலை வேறு பக்கம் திருப்பி விட்டது.

நிழனி-நோவ் கோரட்டில் அவனுக்கு யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. வேலை தேடி பல இடங்களில் கேட்டும் பார்த்தான். ஒன்றும் அவனுக்கு கிடைக்காததா யிருந்தது. எனவே அவனுக்கு புது யோசனை ஒன்று முளைக் களாயிற்று. ராணுவத்தில் போய் சேர்ந்தால் வயிற்றுப் பாட்டிற்காகிலும் கவலை யற்றிருக்கலா மென்றெண்ணினான். அதுவே அவனுக்கு உசிதமாய் பட்டது. உடனேயே போய் ராணுவத்தில் வேலைக்கு மனுச் செய்து கொண்டான். ஆனாலும் அவனது தூரதிர்ஷ்டம் அங்கும் அவனை விரட்டிச் சென்று விட்டது. அவனை பரிசோதனை செய்து பார்த்த

ராணுவ வைத்தியர் 'அவனது நரை ஈரல் கெட்டுப் போயிருக்கிறதென்றும், அவன் வேலைக்கு லாயக்கில்லை என்றும் சொல்லி, அவனை திரும்ப அனுப்பி விட்டார்.

எவ்வித ஆதரவு மில்லை, உடலிலும் சரியில்லை என அவன் உணர்ந்த பொழுது துக்கம் தாளமாட்டாதவனாய் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான். விதி அவனைக் கைப்பாவையாக்கி அதன் காலடியிலே போட்டு அவனை மிதிப்பதைப் போலுணர்ந்தான்; உந்தித் தள்ளும் வாழ்வின் எதிரே தன் தோல்வியை ஒப்புக் கொண்டு விதியுடன் இணங்கிச் செல்வதென தீர்மானித்தான். அவன் படித்த அறிஞர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள் அவனுக்கு ஓர் சிறிய ஆறுதலை உண்டு பண்ணியது. எதிர் காலத்தைப் பற்றிய தன் வாழ்க்கையை எண்ணினான்; மறைந்தொழிந்த நினைவுகள் மீண்டும் அவன் ஹிருதயத்தில் வந்து உலாவுவதைப் போல் உணர்ந்தான்; கடந்த காலத்திய அனுபவங்கள்வேறு-அவன் அந்த உள் ஆழத்திலே அவைகள் வட்டமிட்டு அவனது ஜீவச் சுடரை அணைப்பதைப் போல் கண்டான்.

ஆனால், அப்பொழுது அவனுக்கு சட்டென இது நினைவில் பிரகாசித்தது. அவனது தந்தையைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றை மீண்டும் ஞாபகத்தில் கொணர்ந்தான். அந்த கர்ம வீரனின் வரலாறு கார்க்கிக்கு ஓர் ஆறுதலை அளித்தது. விதியுடன் வைராக்கியமாய் நின்று போராடி வெற்றி பெற்ற அவனது வீர வாழ்க்கை இவனுக்கு ஓர் புத்துணர் வளித்தது. தந்தையின் பராக்கிரமத்தை எண்ணி மெச்சிப் புகழ்ந்து கொண்டான். அதே கணத்தில் அவனது நெஞ்சத்திலும் இந்த ஞானபோதம் உற்பத்தியானது. 'மனிதன் வாழப் பிறந்தவன்' என்ற லௌகிக உண்மை.

பின் ஓர் சாராயச்சாலையில் போய் வேலைக் கமர்ந் தான். அங்கே எல்லா வேலையுடனும் பவேரியன் குவாஸை யும் கொண்டு போய் விற்று வர வேண்டும். குவாஸை தூக்கிச் சுமந்து கொண்டு தெருத் தெருவாய், வீடு வீடாய் அலைந்து விற்று வருவான்.

இந்த வேலை பார்த்த பொழுது கார்க்கி அணிந் திருந்த உடை தெரு ஜனங்களை எல்லாம் பிரமிக்கச் செய்து விட்டது. போலீஸ்காரர்களைப் போல் கால் சட்டை, சமைய லாட்கள் போட்டிருப்பதைப் போன்ற மேற்சட்டை, ஒரு தினுசான குல்லாய்.

இதனுல் போலீஸ்காரர்களின் கவனமும் அவன் மேல் சென்றது. இவன் மீது வேறு வகையான சந்தேகமும் போலீஸ் காரர்களின் மனதில் குடி கொண்டிருந்தது.

அவர்களின் சந்தேகத்திற்கு காரணமும் இல்லாதபடி இல்லை. அப்பொழுது நிழனி-நோவ் கோரட்டில் புரட்சிக் காரர்கள் வசித்தார்கள். அந்தக் கூட்டத்தினரில் கார்க்கிக்கு வேண்டிய நண்பர்கள் பலரும் இருந்தனர்.

கார்க்கி அவர்கள் கூடும் இரகசிய கூட்டங்களுக்கு அடிக்கடிச் செல்வான். அதோடு அவன் ஜாகை வைத்திருந் தது காஸானிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்ட இருவர் களுடன்தான். இவர்களில் ஒருவன் காஸான் சர்வகலா சாலையில் படித்த மாணவன். சோமோவ் என்பவன். மற்ற வன் செக்கின் என்ற பெயர் உள்ள உபாத்தியாயர். இவர் களுடன் ஒரே வீட்டில் வசித்த காரணத்தாலேயே போலீ ஸார் கார்க்கியின் மீதும் சந்தேகிக்கத் தொடங்கினர்.

போலீஸ் ஒற்றர்கள் அடிக்கடி கார்க்கி இருக்கும் இடத்திற்கும், மற்ற அவனது தோழர்கள் இருக்கும் இடத்திற்கும் வருவார்கள். இந்த சந்தர்ப்பத்தில் கார்க்கியைப் பற்றிய தகவலை அறிவிக்கும்படி போலீஸ் மேலதிகாரிகளிடமிருந்து உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. தவிர, முன்னமேயே சோமோவுக்கும் வாரண்டு தயாராக காத்திருந்தது. ஆனல் போலீஸார் சோமோவைப் பிடிக்கப் போவதற்குள் ஆள் மறைந்து விட்டான். அவனைக்கண்டு பிடிக்க முடியவில்லை. எனவே கார்க்கியைப் பிடித்து தொந்திரவு செய்ய ஆரம்பித்தனர். அவனைக் கைது செய்து நிழனி-நோவ் கோரட் சிறையில் அடைத்தனர்.

கார்க்கி போலீஸ் கோர்ட்டில் மிக மெச்சத் தகுந்த முறையில் வாதாடினன். அதைக் குறிந்து போலீஸ் இன்ஸ்பெக்டரே மேலதிகாரிகட்கு அவன் திறமையை வியந்து ரிப்போர்ட் செய்தான். அவன் மேலும் கார்க்கிக்கு சில புத்திமதிகளைக் கூடச் சொன்னன்: நன்ருய் படி, எழுது-ஆனல் இப்படி எல்லாம் எழுதாதே என்றெல்லாம். ஆனல் அந்த அதிகாரிக்கு வரப் போகும் சில வருடங்களுள் கார்க்கியை ஓர் பிரபல எழுத்தாளனுக உலகம் போற்றும் என்பது எப்படித் தெரியும்? ஜீவன் ததும்பும் அவனது நடைச் சித்திரத்தை அவர்கள் எப்படி உணர முடியும்?

ஒரு மாதம் விசாரணையில்லா கைதியாக அவனை சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். பிறகு விடுதலை செய்தார்கள். என்ருலும் 'சந்தேகப் பேர்வழியாகவே' அவன் போலீசாரின் கண்காணிப்பிலேயே இருக்க வேண்டியதாயிற்று.

சிறையிலிருந்து வெளிவந்ததும் அந்த போலீஸ் அதிகாரி அவனுக்கு சொன்ன யோசனைப்படி அவனுக்கு

கொரொலெங்கோவைப் போய் பார்க்க வேண்டு மென்ற ஆசை ஏற்பட்டது. § விலாடிமிர் கோரொர்லெங்கோ எழுத்து வன்மையுடைய பிரசித்தம் பெற்ற ஓர் பிரபல நாவலாசிரியர். அவர் அப்பொழுது நிழனி-நோவ் கோரட்டிலிருந்தார்.

கார்க்கி தான் எழுதி வைத்திருந்த அந்தக் கவிதையை எடுத்துக் கொண்டுபோய் கொரொலெங்கோவிடம் காண்பித்தான். இருவரும் இலக்கியத்தைப் பற்றி சம்பாஷித்தனர். கொரொலெங்கோ கார்க்கியின் அந்தக் கைஎழுத்துப் பிரதியை பார்த்து விட்டு அவனுக்கு உற்சாகத்தை ஊட்டினர். ஆனல் கை எழுத்து பிரதியை நன்கு பார்வை யிட்டனுப்புவதாகச் சொல்லி கார்க்கியை போக விடைகொடுத்துவிட்டார்.

ஒரு வாரம் கழித்து, அக் கை எழுத்து பிரதி கொரொலெங்கோவிடமிருந்து திரும்பி வந்தது. அதில் கொரொலெங்கோ கவரின் மேல் எழுதி யிருந்தார்:

"இந்தக் கவிதையிலிருந்து நீங்கள் எதற்கு தகுதியுடையவர் என்ற ஓர் அபிப்பிராயத்திற்கு வருவதென்பது மிகச் சிரமமாக இருக்கின்றது. ஆனல் உங்களிடம் நல்ல திறமையிருக்கிறதென நினைக்கிறேன். உங்களுடைய அனுபவங்களிலிருந்து வேறு ஏதாகிலும் எழுதி எனக்குக் காண்பியுங்கள். உங்களுடைய கவிதையில் சில வரிகள் சக்திகரமாயும், வேக உணர்ச்சி கொண்டதாயும் இருந்துங் கூட அவற்றைப் புரிந்து கொள்வது கஷ்டமா யிருக்கிறது, நான் கவிகளைப் பற்றி தீர்மானம் செய்யக் கூடியவனல்ல."

இதை பார்த்ததிலிருந்து கார்க்கிக்கு எழுத வேண்டும் என்ற ஆசையே அவன் மனதை விட்டகன்று போனது.

§ Vladimir Korolenko.

இனி கவியோ, கதையோ எதுவும் எழுதுவதில்லை என சங்கல்பித்துக் கொண்டான். அவன் நிழனி-நோவ் கோரட்டிலிருந்த அந்த இரண்டு வருடங்களிலும் பேனாவைத் தொடவே இல்லை.

ஆனால், அவன் சிந்தனைகள் சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கும். குருட்டயாவில் கழித்த அவனது வாழ் நாட்களின் சம்பவங்கள் அவன் கண் முன்னே பிரதி பிம்பிக்கும். அதன் உள்ளீடான துயருணர்வில் சிக்கிக் கொள்வான்; அவைகள் அவனை அவனறியா ஓர் ஆழ்ந்த இருளிலே தள்ளிப் போட்டு விடும்.

கல்விமான்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்லுவான். அவர்களுடன் போய் கலந்துற வாடுவதன் மூலம் அவன் மனதிற்கு கொஞ்சம் சாந்தியை கொண்டு வரலாமென நினைப்பான். அங்கெல்லாம் போவான். ஆனால் அவர்களும் பெரும்பாலும் வாழ்வில் இன்ப மற்று இருப்பவர்களாய் இருந்தார்கள்; துயரத்தின் சாயலிலே நடமாடித் திரிபவர்களாய் காணப்பட்டார்கள். நல்ல நூல்களெல்லாம் படிப்பார்கள். அதைப்பற்றி விவாதிப்பார்கள். அவ்வளவுதான்.

ஆனால் கார்க்கி தேடிக் கொண்டிருந்தது அது வல்ல, அவன் வேறொன்றை. ஓர் உண்மையான, சக்தி மிகுந்த, வீரம்நிறைந்த ஓர் வாழ்விற்காக விழைந்து கொண்டிருந்தான். அவனால் ஆராய்ந்து உணர்ந்து ஓர் முடிவுக்கு வரமுடிந்தது இது ஒன்றுதான், 'அவன் எங்கேயாகிலும் வெகுதூரம் ஒரு நீண்ட பிரயாணம் போகவேண்டும்.'

அவனது எண்ணத்திற்கு ஏற்றாற் போல் ஓர் உத்தியோகஸ்தன் அவனுடன் உதவியாக கார்க்கியையும் பாமிர்

ஸ்டாக்கு ஸ்தல சுற்றுப் பிரயாணங்களுக்கு அழைத்துச் செல்வ தாக சொல்லி யிருந்தான். ஆனால் முடிவில் கார்க்கி ஓர் 'நம்பிக்கை இல்லா பேர்வழி' என்பதற்காக அவனை அழைத் துப்போக மறுத்து விட்டான்.

ஏதோ கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போனது போல் இந்த ஏமாற்றத்தால் அவனுக்கு மனத் துயர் ஏற்பட்டது. அது கோடை காலம். ஓர் நாள் இரவு, கார்க்கி ஓர் குன்றின் பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டு வால் காவின் இயற்கை வனப்புகளில் மனதை லயிக்கச் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அவன் பக்கத்தில் சத்தம் செய்யாதபடி வேறொருவர் மனிதர் வந்து உட்கார்ந்தார். கார்க்கி சட்டென்று திரும்பிப் பார்த்தான். அந்த மனிதன் கொரோலெங்கோ என்பது தெரிந்தது. உடனே எழுந்து அவருக்கு வணக்கம் செய்தான். கொரோலெங்கோ கேட்டார்:

"ஆமாம், இப்பொழுது நீ எழுதிக் கொண்டிருக்கி றாயா?" என. "இல்லை", என்றான் கார்க்கி பதிலுக்கு.

"அது விந்தை தான். நான் உன்னிடம் நல்ல திறமை யிருக்கிற தென்பதை பூரணமாய் ஒத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் உனக்கு ரொம்ப கெட்ட குணம்." என்றார்.

அது உண்மைதான். கார்க்கி அப்படி இருந்ததில் ஒன்றும் பிசகில்லை என்பதை கொரோலெங்கோ அறிந்திருக்க மாட்டார். கார்க்கி அவனது இலக்கியத்திலிருந்த ஆமோக மான ஆவலைத் தவிர்த்து இரண்டு வருடங்களாகி விட்டது.

அவன் எழுத முடியும் என்ற நம்பிக்கையையும் இழந்து விட்டான். தவிர, வாழ்விலே அவன் எல்லா சந்தங்களிலிருந்தும் வெருட்டப் பட்டான். அந்த துர்ப்பாக்கிய வாழ்விலும் ஓர் காதல் முளைத்தது. அவன் காதலித்த பெண் வேறொருவனை மணந்து விட்டாள். இதைப் பற்றி அவன் தன்கொடிய நிலைமையை நொந்து கொண்டானே தவிர வேறொன்றும் செய்து கொள்ள வில்லை. அந்தக் காதல் சம்பவத்தை பின்னிட்டு தன் நாவல் ஒன்றில் கதா பாத்திரத்தின் வாயிலாக விளக்கி யிருக்கின்றான்.

9 வதைக்குந் தண்டனை.

அன்று இரவு கழிந்தது. மறு நாள், கார்க்கி தன் பயணத்தைத் தொடங்கினான். வால்கா பாதையோடு சென்று, ஆறு, நதி, பாழ்வெளி, எல்லாம் கடந்து கடைசியாக ரோஸ்டோவுக்கு வந்தான். ரோஸ்டோவில் ஓர் சீரழிந்த துறை முகம் இருக்கிறது. அங்கே திருக்கி கப்பலில் சாமான்கள் தூக்கும் கூலியாக வேலைபார்த்துக் கொண்டு கொஞ்ச காலம் தங்கியிருந்தான். கூலி வேலை மிகக் கஷ்டமாக இருந்தது. தினம் 15 மணி நேரத்திற்கு மேல் வேலை பார்த்தாக வேண்டும். சலியாமல் உழைத்தாக வேண்டும். இப்படி தினம் 15 மணி நேரத்திற்கு குறையாமல் வேலை பார்த்தால் 50 கொப்பெய்க்காஸ் சம்பளம் கிடைக்கும்.

என்றாலும் கார்க்கிக்கு இது சொல்ல முடியாத ஓர் சம்பத்தாக இருந்தது. இதை விட அதிகம் ரொட்டிக்கிடங்கில் செமியனோவிடம் கஷ்டப்பட்டான். அதற்கு செமியனோவ் கொடுத்த சம்பளம் 10 கொப்பெய்க்காஸ்தான்.

கார்க்கி துறைமுகத்திற்கும் பக்கத்தில் ஓர் கிழவி வீட்டில் வசித்தான். அந்த வயோதிக ஸ்திரீ கார்க்கிக்கு அவள் இருந்த வீட்டின் ஓர் அறையை தினம் ஐந்து கொப்பெய்காஸ் வாடகைக்கு கொடுத்திருந்தாள்.

இந்த ரோஸ்டோவ் வாசமும் கொஞ்சகாலத்திலேயே அவனுக்கு பிடிக்காமல் போய் விட்டது. மீண்டும் தன் நாடோடி வாழ்க்கையை மேற் கொண்டான். டான்யூப் நதிக்கரையின் வழியாக ஆயிரக்கணக்கான மைல் தூரம்

நடந்து சென்று ருமேனியா எல்லைக்கு, பெஸரேபியாவுக்கு போய்சேர்ந்தான். அதிலிருந்து கிளம்பி ஒவ்வொரு ஊராய் சுற்றி அலைந்துகொண்டு கருங்கடற்கரை வரையில் வந்தான். கிரிமியா, குபான், ஜியார்ஜியா போன்ற பிரதேசங்களெல்லாம் சுற்றினன். கையில் ஓர் தம்பிடிக்கும் வழியில்லை. ஆங்காங்கே போகும் மார்க்கத்தில் யாசித்து உண்பான். சில சமயங்களில் ஏதாகிலும் வேலைகள் கிடைத்தால் அந்த ஊதியத்தைப் பெற்று வயிற்றை நிரப்புவான்.

கல்லிலும், முள்ளிலும், காடுகளிலும், பாழ்வெளிகளிலும் நடந்து நடந்து அவன் கால்கள் தேய்ந்து போயின. எத்தனையோ நாள்கள் பட்டினியோடு போக்கியிருக்கின்றான். படுத்துறங்க ஓர் அங்கணமும் கிடைக்காதபடி சந்திக்கரைகளிலும் தோப்புகளிலும் மரத்தடியிலும் படுத்துறங்கி யிருக்கின்றான்.

ஒரு சமயம், அவன் அபேஸியாவிலிருந்த பொழுது தேனைத் தவிர வேறொன்றும் கிடைக்க வில்லை. தேனீக்கள் ஒவ்வொரு மலராக சென்று இனிய தேனை கொண்டு வந்து தன் கூட்டில் வைத்து பாதுகாக்கும். அவற்றை எடுத்து மதுரத்துடன உட்கொண்டு அத் தேனீக்களின் வாழ்வைப் பற்றி சிந்தித்தபடி அங்கேயே படுத்து விடுவான். அவனை வஞ்சித்த விதி அவன் முன்னல் நின்று அதன் கோரப் பற்களைக்காட்டி விளித்து அவனை பரிகசிப்பதைப் போலுணர்வான். கண்ணீர் தாரை தாரையாக தரையில் வழிந்தோடிக் கொண்டிருக்கும். அவன் ஹிருதயத்தின் ஆழத்திலிருந்து அவனல் அடக்க முடியாத துக்க உணர்ச்சிகள் எழும்பி அவன் முன்னல் உயிர் பெற்று உலாவுவதாக இருக்கும்.

அப்பொழுது தன்னைப் பற்றியே கேட்டுக்கொள்வான். உலகத்தில் எல்லா மாந்தர்களும் வாழ்கின்றனர். அவனும் வாழ ஆசைப்படுகின்றான். ஆனால் வாழ்க்கை அவனை மட்டும் ஏன் உந்தித் தள்ளி விட்டு விரைந்தோடிக் கொண்டிருக்க வேண்டும்? அவன் நாடோடி வாழ்விலே அவன் அனுபவித்த, அவன் கண்ணால் கண்ட அந்த சம்பவங்களெல்லாம் அவன் நினைவில் பளீரிட்டு அவன் சிந்தையைக் கலக்கச் செய்யும்.

நிழனி-நோவ் கோரட்டை விட்டு கிளம்புவதற்கு முன்னால் அவன் அப்பொழுது தான் †போம்யாலோவ்ஸ்கி என்ற பிரபல மேதையின் நூல்களெல்லாம் படித்திருந்தான். போம்யாலோவ்ஸ்கி தன் நாவல் ஒன்றில் கூறியுள்ளார். "மனித இயற்கையை, மனித வாழ்க்கையை, ஒவ்வோர் துறையிலும், ஒவ்வோர் அற்ப விஷயத்திலும் மனிதர்களிடமிருந்தே கற்க வேண்டும். நாடோடிகள், கடைக்காரர்கள், செம்படவர்கள் எல்லோரிடத்திலிருந்தும் வாழ்க்கையைப் பற்றி அறிய வேண்டும்''. என்பதாக.

மனிதத்தன்மையைப் பற்றி, மனிதனின் குணாதிசயங்களைப் பற்றி நிதர்சனமாக அவன் கண்ணாலேயே காண நேரிட்டது தான் அவனுக்கு மிகவும் அற்புதமாயிருந்தது.

கார்க்கி ஒரு நாள் உக்ரேனிய கிராமம் ஒன்றில் போய்க் கொண்டிருந்தான். ஓர் கல் நெஞ்சப் பாபி, ஓர் பெண்ணை குதிரை வண்டியில் குதிரைக்கு பதிலாக குதிரை

---

† Pomyalovski:-இந்த ஆசிரியன் நூல்களை கார்க்கி ஆவலுடன் படித்து வந்தான்.

யுடன் கட்டி ஓட்டிச் சென்றான். போகும்போது சவுக்கால் பலமாய் அடித்துக் கொண்டே சென்றான். வரும்போது முதலில் குதிரையின் மீதும், பின் அந்தப் பெண்ணான அவன் மனைவியின் மீதும், ஏறிவந்தான்.

அக் கிராமத்தார்கள் அப் பெண்ணை வதைப்பதைக் கண்டு கை கொட்டி கேலி செய்து கொண்டே கூட்டமாக அவ்வண்டியில் போனார்கள். மக்களின் மனதில் அத்தகைய ஜீவகாருண்யம் நிரம்பியிருந்தது!

இதைப் பார்த்த பொழுது கார்க்கிக்கு உண்டான மனத்துயருக் களவே இல்லை. இது வெகுவாக அவனை வருத்தியது. இதைப்பற்றி அவன் அக்கிராமத்தில் விசாரித்த பொழுது புருஷன் மனைவியின் பேரில் கொண்டுள்ள கோபத்திற்காக அவன் அவளுக்கு அளிக்கும் தண்டனை என்பதை அறிந்தான். இன்னும் இதைவிட அதிகக் கொடுந்தண்டனைகள் எல்லாம் பெண்களுக்கு வழங்கப்படும் என அவன் கேள்விப்பட்டபொழுது உண்மையில் கண்ணீர் வடித்து விட்டான்.

அந்தப் பெண் பரிதாபமாய் காணப்பட்டனள். அவள் கண்களினின்றும் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அடி பட்ட அவள் உடல் தடிப்பேறிப்போய் சவுக்கின் கர்ஜனையினால் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவள் உடைகள் கழற்றப்பட்டு நிர்வாணமா யிருந்தாள். இல்லை பெண்குதிரையாக களைத்து சோர்ந்து போயிருந்தாள்.

இத்தகைய கோரநிர்த்தியத்திலே பெண்கள் புழுப்போல் நெளிந்து கொண்டு எதற்காக வாழ்கின்றனர் என்பதை தனக்குள் பலமுறை கேட்டுக்கொண்டான். இந்தச் சம்பவம்

அவன் மனதை விட்டகல வில்லை. பின்னிட்டு எழுத்தாளனாக வந்த பொழுது கார்க்கி இச் சம்பவத்தை "வதைக்கும் தண்டனை" என்ற பெயருடன் ஓர் கதாரூபமாக சித்தரித்திருக்கின்றான். அதில் ஓர் இடத்தில் இதைப் பற்றி பெயர்களைக் குறிப்பிடாது சொல்கிறான்: "நான் பிரத்தியக்ஷமாக என்கண்ணாலேயே 1891 ஜூலை 15ல் காண்டி போவ்கா என்ற கிராமத்தில் இந்தச்சம்பவத்தைக் கண்டேன்......"என.

அந்த கொடுமைகளுக் காளாக்கப்பட்ட அந்த பெண்ணுக்காக எந்த ஒரு மனிதனும் பரிந்து வரவில்லை. கேவலம் அவள் பேரில் உள்ள குற்றம் அவள் புருஷனுக்கு சரிவர கீழ் படிந்து நடக்க வில்லை என்பதுதான். அவளுக்காக இந்த ஆசிரியன்தான் -(கார்க்கி) பச்சாதாபப் பட்டான். அவளைக் காக்கும் பொருட்டு ஓடிப் போய் அவள் கணவனிடம் மன்றாடினான். அவ்வளவுதான். உடனே அக்கிராமத்தான்கள் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அந்தப் பெண்ணை படுத்தியதை விட அதிகமாக கார்க்கியை படுத்தி, அவனை நைய அடித்து ரஸ்தாவின் பக்கத்தில் சகதியில் தூக்கிக் கொண்டு போய் எறிந்து விட்டார்கள். இரக்கம் காட்டியதற்கு காண்டி போவ்கா கிராமத்தினர் அளித்த வெகுமதி. இக் கொடிய சம்பவங்களை விவரித்தெழுத மனமில்லாத படி இங்கே குறுக்கிச் செல்கின்றேன்.

* *

கார்க்கி சேற்றில் பிரக்ஞையற்றுக் கிடந்தான். உடம்பெல்லாம் ரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ரோட்டோடுபோன வண்டிக்காரன் ஒருவன் அவனை தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு போய் நிக்கோலேய்விலுள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்தான். அவன் உயிரின் பெரும்பாகம் காண்டி

போவ்கா கிராமவாசிகளின் அடியிலும், உதையிலும் போய் விட்டது. மிஞ்சி இழைந்து கொண்டிருந்த அந்த அற்ப ஸ்வாசத்திலிருந்து கார்க்கியை ஓர் நல்ல மனிதனுக்க முயற் சித்தான் டாக்டர்.

ஆனால் டாக்டருக்கு கார்க்கி திரும்ப பிழைத்துக் கொள்ளக் கூடுமென்ற நல்ல நம்பிக்கை இல்லை. அவன் உடம் பில் 42 இடங்களில் காயங்கள் காணப்பட்டன. எனவே குணப்படுத்துவது மிகவும் சிரமமாயிருந்தது. நீண்ட நாட்கள் ஆஸ்பத்திரியிலேயே இருந்து உடல் சிகிச்சை பெற்றான்.

உடம்பு குணமானதும் மீண்டும் தன் பயணத்தை தொடங்கலானான். போகும்போதே கிராமங்களிலும், குடிசைகளிலும் ஜனங்கள் எப்படி வாழ்கின்றார்களென்பதை பார்க்க ஆவல் கொண்டு ஒவ்வொன்றினையும் கவனித்துச் சென்றான்.

ஒரு நாள் குபான் பக்கம் போய்க்கொண்டிருந்த பொழுது மெய்க்கோப் நகரத்தில் கோமாரிக் கலவரம் ஏற் பட்டிருப்பதாக கேள்விப் பட்டான். கோமாரி என்பது மாடுகளுக்கு உண்டாகும் ஒரு வகையான தொத்து நோய். அதற்காக ஜார் அதிகாரத்தின் கீழுள்ள கால்நடை ரண வைத்தியர்கள் மக்களுக்கு அடாதனவற்றைக் கூறி அவஸ் தைக் குள்ளாக்கினார்கள். அந்த அநீதியை சகிக்க மாட்டாத வர்களாய் நகரவாசிகளில் சிலர் அந்த கால் நடை ரண வைத்தியர்களை அடித்து விட்டனர். விஷயம் அவ்வளவுதான்.

அதற்காக கீழதிகாரிகள் பட்டாளத்தை வரவழைத் தனர். பட்டாளத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் கோஸாக்

குகன். கோஸாக்குகள் என்றால் ஈவு இரக்க மற்ற மனிதப் பேய்கள் என்று தான் சொல்லவேண்டும். கூட்டத்தார்களின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யும் படி உத்திரவிடப் பட்டது. நிரபராதிகளாய் நின்ற குடியானவர்கள் மீது கோஸாக்குகள் துப்பாக்கியால் சுட்டனர். எண்ணற்ற மக்கள் அக்குண்டுகளுக்கு பலியாகி உயிர்துறக்க நேரிட்டது.

கார்க்கி அங்கே மெய்க் கோப்புக்கு போன பொழுது இந்த கோர அடக்கு முறை தாண்டவமாடி நின்று போனது. ஸ்திரீக்கள் விதவைகளாய் கத்திக் கதறிக் கொண்டு கண்ணீரில் மூழ்கிக் கிடந்தார்கள். அட்டகாசத்தாலும், அதிகாரத் திமிறினாலும் அடக்கப்பட்ட தெருக்கள் புயலடித்து ஓய்ந்ததைப் போல் ஓர் போலி அமைதியுடன் காணப்பட்டது.

கார்க்கியை கண்டவுடன் போலீஸ்காரன் களுக்கு அவன் மேல் சந்தேகம் தோன்றி விட்டது. அவனைப்பிடித்து பல கேள்விகள் கேட்டு உபத்திரவம் செய்தனர். போலீஸ் அதிகாரி ஒருவன் கார்க்கியை கேட்டான்:

"இந்த மாதிரியான சமயத்தில் நீ எதற்காக மெய்க் கோப்புக்குச் செல்ல வேண்டும்?"

இதற்கு கார்க்கி சுருக்கென்று தைக்கும் படி பதில் சொன்னான்:

"நான் ரஷ்யாவை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்"

அந்த அதிகாரி இறுமாப்புடன் சொன்னான்:

"இது ரஷ்யாவல்ல. கசமல மிகுந்த பன்றிக்காடு" என்றெல்லாம்.

அதற்கெல்லாம் சளையாது ஆண்மையுடன் தன்பதிலைச் சொல்லி போலீஸ்காரர்களிடம் வாதாடினான். ஆனால் பயன்

என்ன? எவ்வித விசாரணையுமின்றி அவனைப்பிடித்து சிறையில் அடைத்து விட்டார்கள்.

என்றாலும் போலீஸ் காரன்களுக்கு பெஷ்கோவின் மேல் சாற்றுவதற்கு குற்றம் ஒன்றும் அகப்படவில்லை. அப்படி ஏதாகிலும் திரித்துமுறுக்கி போடுவதற்கும் சாட்சியம் ஒன்றும் கிடைக்காது போனது. அதனால் சிலநாட்கள்மட்டும் சிறையில் வைத்திருந்து விட்டு அவனை விடுதலை செய்து விட்டனர்.

இது கார்க்கியின் 2 வது சிறை வாசம் எனலாம். இவற்றிலிருந்து அந்த போலீஸ்காரன்கள் கார்க்கியினிடம் பயந்தது போல் வேறு யாரிடமும் அவ்வளவு பயந்திருக்க மாட்டார்களென்று தான் தெரிகிறது.

அவனைப் பற்றி போலீஸ் டயரியில் கீழ் கண்டவாறு போலீசார் எழுதி வைத்திருந்தார்கள்:

> "பெஷ்கோவ் ரொம்பவும் சந்தேகிக்கத்தக்க நடவடிக்கை. நல்ல படிப்பு. நல்ல எழுத்து வண்மை. ரஷ்யா பூராவுக்கும் பெரும்பாலும் காலாலேயே சுற்றி வந்திருக்கின்றான்."
>
> "எவ்வித தொழிலுமில்லாதபடி ஊர் ஊராகச் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறான். அவனைப் பரிசோதித்து பார்த்த பொழுது அவனிடம் நிறைய புத்தகங்களும், அவன் சட்டைப்பையில் கவிகள் எழுதப்பட்ட ஓர் நோட்டுப் புத்தகமும் காணப்பட்டது. அவன் எதற்கும் லக்ஷியம் செய்யாதபடி பதில் சொல்கிறான்.........."

10. முதல் கதை

கார்க்கி சிறையிலிருந்து விடுதலையானவுடன் மெய்க் கோப்பிலிருந்து கிளம்பி ஊர் ஊராய் சுற்றிக் கொண்டு கடைசியாக ரஷ்யாவின் தென் திசைக்கு, காஸ்காஸுக்கு வந்து டிப்ளிஸில் தங்கினான். டிப்ளிஸில் ரெயில்வே தொழிற்சாலை இருக்கிறது. இந்த தொழிற்சாலையில் கூலியாளாக சேர்ந்து வேலை பார்த்தான்.

இந்த டிப்ளிஸ் வாழ்க்கையும் அவனுக்கு இன்பமாக மல்லிகை மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மெல்லிய சயனத்தைப் போலில்லை. கற்களும், முற்களும் நிறைந்த ஓர் கர்ணகடூரமான வாழ்க்கையாகவே இருந்தது. இங்கும் வறுமை, போலீசாரின் தொந்திரவு, முதுகு எலும்பை ஒடிக்கும் வேலை, நல்ல இடம் கூட கிடையாது. என்றாலும் இது அவன் இளமையில் அடைந்த கஷ்டத்தைப் போல் அவ்வளவு துயரத்தைக் கொடுத்து விட வில்லை.

டிப்ளிஸில் கார்க்கிக்கு ஏராளமான புதிய நண்பர்கள் பரிச்சயமானார்கள். அவர்கள் மூலமாக புரட்சிக் காரர்களுடனும், புரட்சி இயக்க மாணவர்களுடனும் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். ரெயில்வே தொழிலாளர்களிடத்தில் இரகசிய புரட்சி இயக்கப் பிரசுரங்களை விநியோகித்து அவர்களிடம் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டான்.

இப்படி இருக்கும் பொழுது ஒரு நாள் கார்க்கி ¶ அலெக்ஸாந்தர் மெபோடிவிய்ச் கலுஸினி என்பவரை

¶ Alexander Mefodievich Kaluzhni

சந்திக்க நேரிட்டது. கலுஷினி புரட்சி இயக்கத்தில் சம்மந்தப் பட்டவர். ஆறு வருடங்கள் சிறைவாசம் செய்தவர். நல்ல கல்வி ஞானமும் அனுபவ அறிவும் பெற்றவர். மக்களின் நோக்கங்களை உணர்ந்தவர். மக்களிடம் பழகுவதிலும், அவர் களிடம் தன் அபிப்பிராயத்தை மனதில் பதியும்படி எடுத்துச் சொல்வதிலும் வெகு சமர்த்தர்.

கலுஷினி முதன் முதலாக கார்க்கியை சந்தித்த போதே அவனிடம் மறைந்து கிடக்கும் ஓர் சூக்ஷ்ம சக்தியை, ஓர் மேதா விலாஸத்தை, உயர்ந்த அவனது கலா ஞானத்தைக் கண்டு கொண்டு விட்டார். கார்க்கி நீண்ட நேரம்வரை கலுஷினியுடன் சம்பாஷித்தான். அவரிடம் அவன் காலால் ரஷ்யா பூராவும் சுற்றி வந்ததைப் பற்றியும், அவன் கண்ணினால் ஆங்காங்கே கண்ட கொடிய நிகழ்ச்சி களைப் பற்றியும், அவன் அடைந்த கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றியும் எல்லாம் விவரித்துச் சொன்னான்.

இது கலுஷினிக்கு மிக வருத்தத்தை அளித்தது. அதே மாத்திரத்தில் கார்க்கியின் பேரில் ஓர் அன்பையும், அநுதாபத்தையும் அவருக்கு சுரக்கச் செய்துவிட்டது. அவன் சொன்ன விஷயங்களில் அவர் மனம் நன்கு பதியலாயிற்று.

இது முதல் இவ்விருவரும் நெருங்கிய ஆப்த நண்பர் களாயினர். கலுஷினி கார்க்கி எப்படிக்கும் ஓர் இலக்கிய மேதையாகி விடுவான் என நம்பினார். அவனிடம் அபார வாத்சல்யத்தைக் காட்டி அவனை அனுதினமும் ஆதரித்து வந்தார்.

எனினும் கார்க்கி எதுவும் எழுதுவதாகத் தெரிய வில்லை. கலுஷினி ஒரு நாள் கார்க்கியிடம் வற்புறுத்திக்

கூறினார்: "கார்க்கி! நீ சொன்னதெல்லாம் எழுது. நல்ல கதையாக எழுதி என்னிடம் காண்பி." என்று.

அவரது விருப்பத்திற்கிணங்கி கார்க்கி தன் மனதில், தோன்றினவற்றை ஓர் கதையாக எழுதினான். ஆனால், கலுஷினி அவனிடமிருந்து எதிர்பார்த்தபடியாக இல்லை, அது.

அவன் தன் அனுபவங்களிலிருந்து சேமித்து வைத்த அந்தச் சம்பவங்களைப் பற்றித்தான் எழுதினான். அவன் பேனாவைத் தொட்ட மாத்திரத்தில் அது மனதில் மறைந்து கிடந்த அவனது ஞானச் சுரங்கத்திலிருந்த எல்லாவற்றையும் புதிய மெருகுடனும், புதிய லாகவத்துடனும் வெளியே கொண்டு வந்து கொட்டிற்று.

என்றாலும் இது கலுஷினுக்கு அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை. கார்க்கியிடம் மீண்டும் சொன்னார்: 'நீ கண்ணால் கண்டதைப் பற்றி மட்டும் எழுது' என்பதாக.

கார்க்கிக்கு உடனே ஓர் சம்பவம் நினைவுக்கு வந்தது. அவன் பெஸெரேபியாவில் கேட்ட ராதா, லாய்கா ஸோபார் பற்றிய ஓர் அதிசய கதையை நினைத்துக் கொண்டான். அவன் அங்கே சம்பாஷித்துக் கொண்டிருந்த ஓர் வயோதிக மனிதன் மேக்கர் சோத்ரா என்ற பெயருடையவன் சொன்னதை திரும்ப எண்ணினான்.

உடனேயே அதே சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 'மேக்கர் சோத்ரா' என்ற தலைப்புடன் ஓர் உயர்ந்த கதையை எழுதி அதனை கலுஷினியிடம் கொண்டு போய்க் கொடுத்தான்.

கலுவினிக்கு கதை ரொம்ப பிடித்திருந்தது. உடனே அக்கதையை எடுத்துக்கொண்டு 'காவ்காஸ்' பத்திரிகாலயத்திற்குச் சென்றார். ஆசிரியரிடம் அந்தக் கதையைக் கொடுத்தார்.

கதை அவ்வாசிரியரின் மனதில் பிரமாதமாகப் பட்டது. அந்தக் கதாசிரியனின் மேன்மையை வியந்து போற்றினார்.

கார்க்கியின் 'மேக்கர் சோத்ரா' என்ற அந்த முதல் கதை டிப்ளிஸின் பெரிய பத்திரிக்கையான காவ்காஸில் 1892 செப்டம்பரில் ¶"மாக்ஸிம் கார்க்கி" என்ற எழுத்தாளன் பெயரைத் தாங்கி வெளியானது.

கார்க்கி கொஞ்ச காலத்திற்கெல்லாம் டிப்ளியை விட்டு தன் சொந்த ஊருக்கு கிளம்பி விட்டான். இந்த டிப்ளிஸ் அவனுக்கு பல நன்மைகளை அளித்தது. அவன் முதன் முதலாக எழுதிய கதை அங்கே பிரசுரிக்கப் பட்டது. அதோடு அவனுக்கு அங்கே பல ஆப்த நண்பர்களும் ஏற்பட்டிருந்தார்கள். தவிர அவன் காதலி ஓல்கா என்பவள் டிப்ளிஸில் இருப்பதாகக் கேள்விப்பட்டான். ஆனால், அவள் இப்பொழுது அவளது புருஷனுடன் சேர்ந்து வாழவில்லை. அது ஏன் என்றும் தெரியாதிருந்தது.

இதனை அவன் கேட்டபொழுது அவனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. அவன் வாழ்வில் ஏதோ ஓர் மதுரமான, இன்பம் செறிந்த ஓர் புத்துயிர் ஏற்பட்டதைப் போலுணர்ந்தான்.

¶ Maxim Gorky = Maxim Bitter.

இறந்து பட்ட அவன் காதல் ஓர் புது வடிவுடன் மீண்டும் அவன் உள்ளத்தில் இடம் பெற்றது. நிமிஷத்திற்கு நிமிஷம், நாழிக்கு நாழி, அது வளர்ந்து வளர்ந்து அவன் ஹிருதயத்தின் ஆழத்திலே வேரூன்றி வந்தது.

தன் காதலியைப் பற்றிய பலத்த எண்ணங்களால் தடுமாறிப்போவான். அவனுள்ளே, ஏதோ ஒன்று அவனை தகித்து அவனது எலும்புகளை எல்லாம் கூட உருக்கிக் கொண்டிருப்பதைப் போலுணர்வான். அதிலிருந்து அவன் பிரேமைக் கடலில் தூக்கி எறியப்பட்டு காதல் அலைகளின் நடுநடுவே சிக்குண்டு கரையேற வழியற்றுப் போய் தவிப்பான். காதல் அவனுக்கு ஓர் இன்ப லாகிரியைப் போன்றிருந்தது. அதிலும் அந்த ஸ்திரீயின் காதல் அவனுக்கு அமிர்தத்தைப் போன்ற ஓர் வரப்பிரசாதமாகத் தோன்றியது.

அவளைப் போய் பார்க்க ஆசைப்பட்டான். அவனை தகித்து உருக்கிக் கொண்டிருக்கும் காதற் ஜ்வாலை அவளது ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் அது குளிர்ந்து சொஸ்தமாகி விடும் என்றெண்ணினான்.

மறுநாள் உடனேயே ஒல்கா இருந்த இடத்திற்குச் சென்றான். அங்கே ஒல்கா தன்னந்தனியாய் இருப்பதைக் கண்டான். அவளைக் கண்ட மாத்திரத்தில் அவன் ஹிருதயத்தில் எங்கோ ஓர் தீச்சுடர் போய் ஊடுருவிப் பாய்வது போல் கண்டான். அது அவன் மௌனத்தை கலைக்கச் செய்தது. அவர்களிடையில் தொங்கவிட்டிருந்த ஓர் சங்கோசத்திரை சற்று விலகி வந்தது. பிரிந்த அக் காதலர்கள் மீண்டும் அளவளாவி பிதற்றிக் கொண்டார்கள்.

காதல் கணை அவ்விருவரையும் பிணைத்துக் கட்டியது. ஒல்கா அவனுடன் வாழ சம்மதித்தாள்.

கார்க்கி அவளை அழைத்துக் கொண்டு தன் சொந்த ஊராகிய நிழனி கோவ் கோரட்டுக்கு வந்தான்.

மாரிகாலமும் வந்தது. குடியிருக்க ஓர் பாதிரியின் தோட்டத்திலுள்ள ஸ்நான கட்டடத்தை வாடகைக்கு பிடித்துக் கொண்டு அங்கே இருவரும் காலம் கழித்தனர்.

கார்க்கி அங்கே நிழனி-நோவ் கோரட்டிலுள்ள லானின் என்ற ஒரு பெரிய வக்கீலிடம் நகல் எழுதும் குமாஸ்தாவாக இருந்தான். பகலில் கோர்ட்டுக்கு போவான்; கேசுகளை கவனிப்பான்; மனுக்களுக்கு நகல் எழுதுவான். அந்த வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் இரவில் உட்கார்ந்து கொண்டு நீண்ட நேரம் ‡பால்ஸேக் போன்றவர்களின் சித்தாந்தங்களை படித்துக் கொண்டிருப்பான். அவனுக்கு இந்தியாவுக்கோ, சிலோனுக்கோ எங்கேயாகிலும் ரொம்ப தூரம் வரை பிரயாணம் போக வேண்டுமென்ற ஆசை எழும். தன் ஆசையைப் பற்றிய கனவுகளை கண்டு கொண்டே அந்த கற்பனை ராஜ்யத்தில் பொழுதைக் கழிப்பான். சில சமயங்களில் அடிக்கடி உட்கார்ந்து கதைகளை எழுதி குவிப்பான். ஆனால் அந்தக் கதைகளை அவன் பத்திரிக்கைகளுக்கு அனுப்புவதில்லை.

இலக்கியம் அவனுக்கு ஓர் தெவிட்டாத இன்பமாகத் தான் தோன்றி வந்தது.

---

‡ Balzac.

ஒரு நாள் கார்க்கி ஒரு கதை எழுதினான். அதில் அவனும் அவனது சகாவான எமிலியன் பிலே என்பவனும் கருங்கடற்கரையோரத்தில் பசியோடு வேக் வேக் என்று சென்றதையும், இரவில் அந்த நண்பன் அவனிடம் சொன்ன செய்திகளைப் பற்றியும் அழகாக எழுதியிருந்தான். அந்தக் கதை மிக அற்புதமாய் அமைந்திருந்தது.

கார்க்கியின் நிழனி-நோவ்கோரட் நண்பனொருவன் அந்தக் கதையை வாங்கிக்கொண்டு அவன் மாஸ்கோவிற்குப் போய் பத்திரிகாலயம் ஒன்றில் கொடுத்தான். பத்திரிகாலயத்தினர் அதனை ஆவலுடன் ஏற்றுக்கொண்டார்கள். சில நாள் கழித்து மாஸ்கோவின் சிறந்த பத்திரிக்கையான "ரஷ்கியா விடோ மோஸ்டி"யில் 'எமலியன் பிலே' என்ற கார்க்கியின் அந்தக் கதை வெளிவந்தது. கார்க்கி அது முதல் காஸானுக்கு, அந்த பத்திரிக்காசிரியரான வால்ஸ்கை வெஷ்ட்னிக் என்பவருக்கு அவனது கதைகளை அனுப்பி வந்தான்.

ஒரு நாள் தபாலில் கார்க்கிக்கு அந்த ஆசிரியரிடமிருந்து ஓர் கடிதமும் அதோடு 30 ரூபிளுக்கு ஒரு 'பாங்கி செக்'கும் வந்தது. அந்தச் சிறு தொகை அவனது கதைக்கு சன்மானமாக அனுப்பியிருப்பதாயும் அதனை அன்புடன் ஏற்றுக்கொண்டு அடிக்கடி கதைகள் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கும்படிக்கும் கார்க்கிக்கு அக்கடிதத்தில் சொல்லப்பட்டிருந்தது.

தொகை சொற்பமெனினும் அப்போது அவனிருந்த நிலைமையில் அதை ஓர் பெரும் அதிர்ஷ்டமாக எண்ணி மகிழ்ந்தான்.

பலரும் கார்க்கியின் கதைகளை ஆவலோடு படித்தனர். கொரொலெங்கோவும் கார்க்கியின் கதைகளில் வியப்படைந்துபோய் அந்த இளம் எழுத்தாளனைப் பார்க்க விரும்பினார். அதே மாத்திரத்தில் அவனுக்கு ஓர் அழைப்பும் அனுப்பி வைத்தார்.

அந்த அழைப்பை அன்போடு ஏற்றுக்கொண்டு கார்க்கி கொரொலெங்கோவின் வீட்டிற்கு வந்தான். அந்த வீட்டு வாசற்படியை மிதித்தபொழுது கார்க்கியின் மனதில் அந்த பழய சம்பவம் அவன் நினைவில் திமிறி எழுந்தது. முன் ஒரு முறை அங்கே சென்றிருக்கிருன். அவன் எழுதிய கவிதை ஒன்றை அவரிடம் காண்பித்திருக்கிருன். அவர் அவனுக்கு சில புத்திமதிகளை சொல்லியிருக்கிருர். ஆனல் அதுமுதல் அவனல் இரண்டு வருடங்கள் எழுத முடியாதபடி அந்த சம்பவம் அவனை நிறுத்தி வைத்திருந்தது.

இப்பொழுது அவன் அந்த உணர்ச்சிலிருந்து மாறுபட வேண்டியதாயிற்று. வீட்டின் உள்ளே பிரவேசித்தான். புஷ்பங்களாலும், புத்தகங்களாலும் நிறைய அலங்கரிக்கப் பட்ட அதே அறை. கொரொலெங்கோ நாற்காலியில் அமைதியாய் நூல்களை புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

கார்க்கி கொரொலெங்கோவுக்கு மரியாதைசெய்தான். கொரொலெங்கோ அவனை அன்புடன் வரவேற்று ஆசன மளித்தார். அவ்விரு இலக்கிய மேதைகளும் இலக்கியத்தைப் பற்றி சம்பாஷித்தார்கள். விஷயங்கள் தெளிவுபட ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டார்கள்.

கொரொலெங்கோ கார்க்கியின் கதைகளை மெச்சி அவனை பாராட்டினர்.

அதோடு கார்க்கிக்கு அவர் விரும்பிய சில புத்திமதி களையும் சொன்னார்:

'உன்னிடம் நல்ல உயர்ந்த எழுத்து நடை இருக்கிறது இன்னும் கொஞ்சம் மெருகிடப் படவேண்டும். அப்பொழுதுதான் எல்லோரும் அந்த ரஸனையை அனுபவிக்க முடியும். அவ்வளவுதான்.'

இதற்கு கார்க்கி கேட்டான்:

'அப்படியானால் நான் எழுதமுடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?'

கொரொலெங்கோ ஏதோ ஆச்சரியமடைந்தாற் போல் 'அதில் சந்தேகமென்ன? நீ முன்பே எழுதியிருக் கின்றாய், அவைகளும் பிரசுரமாயிருக்கின்றன. இன்னும் என்ன வேண்டும்? இதில் நீ ஏதாகிலும் தெரிந்துகொள்ள விரும்பினால், நீ எழுதுவனவற்றை என்னிடம் கொண்டு வா............'என்றார். இன்னும் அவனுக்கு எழுதும் முறைகளைப் பற்றி அறிவுரைகளைப் புகட்டினார். அதோடு கார்க்கியை சமராவுக்குச் சென்று "சமரஸ்காயா கெஸெட்டா" என்ற பத்திரிக்காலயத்தில் போய் ஓர் எழுத்தாளனாக வேலை பார்க்கச் சொல்லி சிபார்சு செய்து அவனை அப்பத்திரிக் காலயத்தில் சேர்த்து விட்டார்.

இந்த கொரொலெங்கோவின் உதவிதான் கார்க்கியை ஓர் பிரபலஸ்தனுக்கச் செய்தது. கார்க்கி அவரை தன் முதல் ஆசிரியராக மதித்தான். அந்த இலக்கிய மேதை இளம் எழுத்தாளனின் உண்மைச் சக்தியை அறிந்து அவனுக்கு வழிகாட்டி வைத்தார். உலகில் கார்க்கியின் புகழ் நிலவிக்கொண்டிருக்கும் வரை அந்த மகாமனிதனின் பெயரும் சாகாதிருக்கும் என்பது திண்ணம்,

11. வாழ்வின் (உதயம்)

கார்க்கி பத்திரிக்கைத் தொழிலில் புக வேண்டி கொரொலெங்கோவின் யோசனைக்கிணங்க நிழனி-கோவ் கோரட்டை விட்டு சமாராவுக்குப் போக தீர்மானித்தான்.

அங்கே நிழனி-நோவ்கோரட் வாசத்தில் அவனுக்கு எதுவும் இன்பமளிக்கவில்லை. நாள் பூராவுக்கும் கோர்ட்டுக்கும் வக்கீல் வீட்டுக்குமாக அலையவேண்டும். சதா பொய்யும் புரட்டும் நிறைந்த தஸ்தவேஜிகளினின்று நகல்கள் எழுதியாக வேண்டும். இது அவன் இலக்கிய பாட்டைக்கு முரணாக இருந்தது. அதோடு அதில் கிடைக்கும் சொற்ப வருமானமும் அவனுக்கு போதவில்லை.

அதிலும் ஆகஸ்ட் ஸ்டிரின்ட் பெர்க் போன்று, அதிருப்தியுற்ற இல்வாழ்க்கை. அவன் ஒல்காவை நேசித்தான். அவளும் அவனை நேசித்தாள். அவர்கள் காதல் களங்கமற்றது. மாசுமருவற்ற அக்காதலுக்கு, ஆனால் கார்க்கியின் இலக்கியப் பற்றும், வறுமையும், சூழ் நிலையும் வெவ்வேறாகச் செய்தது.

ஒல்கா ஏழைப் பெண். அல்ப சுபாவமுடையவள். படிப்பு வாசனையே இல்லாதவள். கார்க்கியின் போக்கும் அவன் புத்தகப் படிப்பும் அவளுக்கு வெறுப்பைத் தட்டி விடும். தாசிக்கும் தரித்திரியவானுக்கும் உறவில்லை என்பார்கள். அதேபோல்தான். இதனால் அவர்களது தாம்பத்ய வாழ்வில் மனக்கசப்பேற்பட்டது. இதெல்லாம்

நினைத்துப் பார்த்தபொழுது கார்க்கி அவளை விட்டு தனியனாய்ப் பிரிந்து விடுவதென்றே முடிவு கட்டிவிட்டான். அதோடு அந்த இல்லற வாழ்க்கை அவனுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டது.

கார்க்கி சமாவிற்கு வந்து எழுதும் தொழிலை மேற் கொண்டான். அதே பத்திரிகையில் அப்பொழுது பிரபல எழுத்தாளர்களாயிருந்த கொரொலெங்கோ, 'தையோ மோ' என்ற நாவலின் ஆசிரியரான கேரின் மெய்க்கோ லெவ்ஸ்க்கி, இன்னும் அலெனுஷ்கா கதைகள் முதலிய பிரபல புத்தகங்களை எழுதிய மாமின் சைபீர்யாக் போன்றவர்களும் அப் பத்திரிக்கையில் ஸ்தானம் வகித்து எழுதி வந்தார்கள். இப்பொழுது அவர்களது எழுத்துகளுக்கும் பக்கத்திலே, பிரதி ஞாயிற்றுக்கிழமையும், இந்த 'மாக்ஸிம் கார்க்கி' என்ற பேனாப் பெயர் படைத்த இளம் எழுத்தாளனின் கதைகளும் பிரசுரிக்கப்பட்டன.

கார்க்கியின் கதைகள் புத்தம் புதிய கருத்துக்களுடனும் ஜீவலயத்துடனும் சொற்சித்திரக் கோவை மாதிரி—வாசகர்களின் மனதில் ஓர் புதிய ஆவலை தட்டி விட்டது. அவனது கதைகளை ஜனங்கள் வெகு ஆவலோடு வாங்கி படிக்கலாயினர். பத்திரிக்கையின் விற்பனையும் நாளுக்குநாள் பெருகி வந்தது.

கார்க்கி கதைகள் எழுதுவதோடு மட்டுமின்றி அடிக் கடி சமூக சம்மந்தமான, உள் நாட்டு விஷயங்களைப் பற்றிய அரிய வியாசங்களும் எழுதி வந்தான்.

வியாசம் எழுதுவதில் அப்பொழுது கேரின்மிக்ரோ லோவ்ஸ்க்கி தான் நிகரற்று விளங்கினான். ஆனால் மனித

னியல்பில் பொருமை ஒன்று கலந்திருக்கிறதே! அது அவனை சும்மா இருக்க விடாதல்லவா? இப்பவந்த பயல். இவன் இவ்வளவு உயர்ந்த வியாசங்களை எழுதவாவது! இதை ஜனங் கள் போற்ற வாவது! கேரின் மிக்ரோவுக்கும் அந்த பொரு மைத்தீ பற்றிக் கொண்டது. கார்க்கியினிடம் உள் பகை கொண்டான். எப்படியாகிலும் கார்க்கியை மட்டந்தட்டி விடுவதென தீர்மானித்தான். அவன் தீய கண்கள் கார்க்கி எழுதுவனவற்றில் குற்றங்காண தேடி அலைந்தது. ஒன்றும் கிடைக்கவில்லை. இருந்தாலும் ஓர் யுக்தி செய்தான். அவன் எண்ணம் எப்படியாகிலும் மட்டந்தட்டி விடவேண்டு மென்பதுதானே!

ஒரு சமயம் கார்க்கியை சந்தித்தான். உள்ளே பகையையும், உதட்டில் உறவையும் கலந்து கொண்டாடினன். இப்படி பேச்சோடு பேச்சாகச் சொன்னன்:

"உனக்கு விஷயங்களை எப்படி புகுத்துவதென்று தெரியவில்லை. நீ நல்ல கட்டுரையாளன் அல்ல" என்பதாக.

இந்தக் குற்றச் சாட்டிற்கு கார்க்கியா செவி சாய்ப்பவன். ஆனல் கேரின் மிக்கோவிடம் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. அவனது கட்டுரைகளின் தன்மையை அவன் நன்குணர்வான்.

உண்மையில் கார்க்கியின் கதைகளோடு அவனது கட்டுரைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அவைகள் கொஞ்சம் மட்டமாகத்தான் தோன்றியது. ஆனல் சில நாட்களில் அந்த குறைபாட்டையும் போக்கி விட்டான்.

சமாராவில் அவன் வசித்து வந்தது ஓர் சின்ன குடிசை வீடு. அதன் எதிரே வால்கா காட்சியளித்துக்

கொண்டிருந்தது. ரஷ்யா பூராவுக்கும் அவனை விரட்டியடித்த அப்பொழுது அந்த சமாரா அவனுக்குத் தஞ்சமளித்தது. அங்குதான் கார்க்கி தன் வாழ்வின் உதயத்தைக் கண்டான். அதுவரையில் அவன் படித்திருந்த கொயத்தே, ஷேக்ஸ்பியர், முதல் ஹியூகோ, லெர்மாண்டோவ், டிக்கன்ஸ், தாக்கரே வரை சகல கலா விற்பன்னர்களின் கலைச் செல்வத்தையும் அங்குதான் அவனால் பூரணமாய் சுவைக்க முடிந்தது.

அந்தத் தெருவில் அவன் அறையை ஜன்னல் வழியாகப் பார்த்தால் தெரியும். விளக்கொளியில் கார்க்கி குனிந்த வண்ணம் இரவின் பெரும் பகுதி வரையில் எழுதிக் கொண்டிருப்பான். அல்லது படித்துக் கொண்டிருப்பான். சில சமயங்களில் பொழுதும் புலர்ந்துவிடும். சூரியன் உதயமாகி நீண்ட நாழியான பிறகுங்கூட விளக்கு அப்படியே சுடர் விட்டெரிந்து கொண்டிருக்கும். மேஜை நிறைய எழுதிக் குவித்த தாள்கள், நல்ல புத்தகங்கள் அவன் தலைமயிர் முகத்தை மறைத்து வைத்திருக்கும்.

12 தாய் நாட்டின் புகழ் மாலை.

பிறந்து இந்த இருபத்தேழு வருடங்கள் துன்பச் சகதியில் சிக்குண்டு தவித்த கார்க்கியின் வாழ்க்கை இப்பொழுது வெளியே தலை காட்டிற்று. 'எங்களூர் மனிதன் கார்க்கி! அந்த பிரபல எழுத்தாளன் எங்கள் ஊர்க் காரன்!' என்று நிழனி-நோவ்கோராட் வாசிகள் பெருமையடித்துக்கொண்டு அவனை வானளாவி புகழத் தொடங்கினர். நிழனி-நோவ்கோராட்டின் 'லிஸ்டோக்' பத்திரிக்காலயம் அவனுக்கு அழைப்பு அனுப்பியது. வால்காவின் எல்லா பத்திரிக்காலயங்களும் அவனை அழைக்க முன் வந்தன.

ஆனால் கார்க்கி அவன் வாழ்வின் ஒவ்வோர் சந்தங்களையும் உணர்வான். அவன் பிறந்த அதே நிழனி-நோவ்கோராட் அன்று அவனை விரட்டியடித்தது. இன்று அவனை எதிர் கொண்டழைக்கின்றது. உலகத்தில் வாழ்ந்த கலைஞர்கள் எல்லாருக்குமே அக் கதிதான். வாழ்வின் இன்பங்களை நுகர விடாதபடி நாடும் நிலமையும் எல்லா மேதைகளையுமே விரட்டியடித்திருக்கின்றது. ஆனால் அவன் நல்ல திசைக்கெட்டியவுடன் உலகம் அவனை கைகூவி அழைக்கின்றது.

ஜினிவாவில் பிறந்த அந்த சீல புருஷனை ரூஸ்ஸோவுக்கு அந்நாட்டிலே இடமில்லை. அவனை தேசப் பிரஷ்டம் செய்தது; அவனது நூல்களை பகிரங்கமாய் தீயிலிட்டு எரித்தது. அவன் இறந்தான். அதன் பிறகு

அவனது உருவத்தை ஜீனிவரில் சமைத்து அவனை மேதை என கொண்டாடுகிறார்கள். கார்ல் மார்க்ஸ் முதல் கவி பாரதி வரையில் சரி. உலகத்தில் வாழ்ந்த எல்லா அறிஞர்களும் அத்தகைய அநீதிகட்கும், கொடுமைகட்கும் தம் வாழ்வை பலியிட்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்காலத்தில் பெரும்பாலோர் புகழுடையவில்லை. துன்பத்திலும், துயரத்திலும், வறுமைப் படுகுழியிலும் தள்ளிவிட்டு உலகம் அவர்களை பரிகசித்து நின்றது.

ஆனால் கார்க்கி அவ்வறிஞர்களின் கதிக்கு அதைப் போல் முற்றிலும் ஆளாகிவிடாதபடி மத்ய வாழ்விலே உலகம் அவன் மேதையை கண்டு பிடித்து அவனைப் பயன் படுத்தியதற்காக நாம் மனதார மகிழ்கிறோம்; இனியாகிலும் இவ்வுலகம் அறிஞர்களின் விஷயத்தில் சிரத்தை கொள்ளுமென்று நம்புகிறோம்!

கார்க்கி மகா உத்தம குணம் உடையவன். எனவே தான் அழைப்பை எற்றுக்கொண்டு தன் சொந்த ஊருக்குத் திரும்பினான். நிழனி-நோவ்கோரட் அவனுக்கு புகழ்மாலை அணிவித்து அவனை வரவேற்றது. ஊரிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள பிரபல எழுத்தாளர்களும், அறிஞர்களும், கல்விமான்களும், தொழிலாளர்களும் கார்க்கியை கூட்டம் கூட்டமாக வந்து தரிசித்தார்கள்.

கார்க்கி அப்பொழுதும் இளைஞன்தான். இந்த இருபத்தேழு வருடத்திற்குள் உலகக் கலைச்செல்வம் அனைத்தையும், உலக ஞானம், அனுபவம், அனைத்தையும் அவன் தன்னுள் அடக்கிக்கொண்டு வந்து விட்டான்.

அவனிடம் தெளிந்த அறிவும், சிறந்த கலாஞானமும் பிரகாசிக்கின்றது. அவனது ஒவ்வோர் சுவாசத்திலும் அவனது மேதா விலாசம் பிரபையோடு கலப்பற்ற சுத்த நெறியிலே வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றது.

இப்பொழுது கார்க்கியின் கண்களுக்கு நிழனி-நோவ் சோரட் ஓர் புதிய அழகுடன் காணப்பட்டது. ஒவ்வோர் வீடும், ஒவ்வோர் வீதியும், ஓர் புதிய அமைப்பாக இருந்தது. அந்த பழய கருவாட்டு நாற்றமும், கொழுப்பின் துர் வாடையும் இப்பொழுது இல்லை. பன்றிக் காடாயும், குப்பை மேடாயும் இருந்த தெருக்கள் இப்பொழுது சுத்தமாகக் காணப்பட்டன. வீடுகளெல்லாம் பழுது பார்க்கப்பட்டு ஓர் புதிய பொலிவுடன் வீதிகள் நின்று காட்சியளித்தன.

அங்கே, கார்க்கி போனசமயம் 'அகில ரஷ்ய கண் காக்ஷி சாலை' யொன்று நடத்த ஏற்பாடாகி இருந்தது. அந்த கண்காக்ஷி சாலையின் முக்கிய நோக்கம் அதன் மூலம் ஐரோப்பா கண்டம் பூராவுக்குமே ரஷ்ய பெருமையையும், கீர்த்தியையும் காண்பிக்கவேண்டும் என்பதற்காக.

ரஷ்ய சக்ரவர்த்தியான இரண்டாம் நிக்கோலாஸ் மன்னன் அக் கண்காக்ஷி சாலையை திறந்து வைக்க ஒப்புக் கொண்டிருந்தான். ஒரு பெரிய திடலின் மத்தியில் ஏராளமான பொருட்செலவில் கண்காக்ஷிசாலை அமைக்கப் பட்டிருந்தது.

நிக்கோலாஸ் வந்து கண்காக்ஷியை திறந்து வைத்தான். ஜனங்கள் ஆரவாரத்துடனும் மகிழ்ச்சியுடனும் மன்னனுக்கு தங்கள் மரியாதையையும், வணக்கத்தையும்

சமர்ப்பித்தார்கள். ஜார் மன்னனைப் பற்றிய புகழ் கீதங்கள் பாடப்பட்டன. மெழுகுவர்த்திகளாலும், சோப்புகளாலும் பலவித வர்ண வேலைப்பாட்டுடன் கூடிய அலங்காரங்கள் மிகுதியாயிருந்தன. கையால் செய்யப்பட்ட பலவித வேலைப் பாடமைந்த சாமான்கள் கண்காக்ஷிசாலையில் வைக்கப் பட்டிருந்தன. ஒரு புதிய பயோனு வாத்தியமும் இருந்தது. அந்த வாத்தியத்தில் தந்திக் கம்பிகளுக்கு பதிலாக மாட்டின் தசைகளை மாட்டியிருந்தது. இன்னும் செம்மறி ஆட்டுக் கொம்புகளிலிருந்தும், பலவகையான தந்தங்களிலிருந்தும் செய்யப்பட்ட வேலைப்பாடுகளுடைய சாமான்கள் நிறைய வைக்கப்பட்டிருந்தன. ராஜாவே வந்து அக்கண்காக்ஷி சாலையை திறந்து வைக்கிறாரென்றால்! அது எப்படி இருக்கக் கூடுமென்று நேயர்கள் ஊகித்து பார்த்துக் கொள்ளக்கூடிய விஷயம்.

இந்தக் கண்காக்ஷிசாலையைப் பற்றி எல்லா பத்திரிக்கைகளும் அதனை வியந்து, ரஷ்ய சாம்ராஜ்யத்தின் பெருமையை புகழ்ந்து எழுதலாயின.

கார்க்கியும் தன் பத்திரிக்கையில் அந்தக் கண்காக்ஷி சாலையைப் பற்றிய பல கட்டுரைகளை தொடர்ந்து எழுதினன். உள்ளதை உள்ளவாறு சித்தரித்து நாட்டின் பிற்போக்கான நிலைமையை எடுத்துக்காட்டினன். அதிகார வர்க்கத்தின் அட்டகாசத்தினுலும், அதிகாரத் திமிரினுலும் அழிக்கப்பட்ட நாட்டின் செல்வ நிலைமையை விளக்கி எழுதினன். பாமர மக்களின் மனதில் நன்குணர்த்தும்படி புள்ளி விவரங்களுடன் அக்ரமச் செலவுகளை எடுத்துக் காட்டினன்.

கார்க்கியின் கட்டுரைகள் ஜனங்களின் மனதில் ஓர் புதிய எழுச்சியை உண்டுபண்ணியது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் பலமேதைகள் வியந்து போற்றிய 'மிருகங்களாயிருந்து மனிதன் தோன்றினான்' என்பதைப் போன்ற பல உயர்ந்த கட்டுரைகளை கார்க்கி எழுதியது.

நிழனி-நோவ்கோரட்டிற்கு வந்த கொஞ்ச காலத்தில் அதாவது 1896ல் கார்க்கிக்கு க்ஷயரோகம் ஏற்பட்டது. அவனது பட்டினியும், வறுமையும், அலைச்சலும், கடின உழைப்பும் அவனுக்கு க்ஷயத்தை வழங்கிற்று. சக்தியற்று நோய்வாய்ப்பட்டு, உடல் நிமிர முடியாத நிலைமையில் படுக்கையில் கிடக்கலானான். நாளுக்கு நாள் உடல் நிலைமை கேவலமாகிக்கொண்டு வந்தது. அவனது உற்ற நண்பர்களெல்லாம் இந்த சந்தர்ப்பத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். கார்க்கியை பரிசோதித்து சிகிச்சை செய்து வந்த டாக்டர்கள் அவனை கொஞ்சகாலம் தெற்கே போய் வசிக்கும்படி கூறினார்கள்.

அந்த யோசனையை மேற்கொண்டு கார்க்கி கொஞ்ச காலம் கிரிமியாவிலும், உக்ரேனிலும், இருந்துவிட்டு பின் மெனுவ்லோவ்கா என்ற கிராமத்தில் தங்கினான். மெனுவ்லோவ்கா சின்ன குக்கிராமம். இயற்கை வனப்புகளை தன்னுள் கொண்டது. அங்கே கார்க்கிக்கு ஏற்றாற்போல் சீதோஷ்ண நிலைமையும், வசதிகளும் இருந்தமையால் கொஞ்சகாலம் அங்கேயே தங்கி உடல் நலத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு பின் நிழனி-நோவ்கோரட்டிற்கு வந்தான்.

வந்தும் பல கஷ்டங்களுக்கு ஆளான பிறகு பிரசுராலயம் ஒன்று அவனுக்கு ஆதரவு காட்ட முன் வந்தது. கார்க்கி தான் எழுதிய கதையை இரண்டு வால்யூம்களாக தொகுத்து புத்தக ரூபத்தில் வெளியிட கொடுத்தான் அதுவரை அவன் புகழ் அந்த மாகாணம் வரையில்தான் வியாபித்திருந்தது. கார்க்கியின் புத்தகம் வெளிவரவே ஜனங்கள் ஆவலோடு வாங்கத் தலைப்பட்டனர், வெளியான ஒரு வாரத்திற்குள் ஆயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாயின.

அதன்பின் ரஷ்யா வெங்கும் கார்க்கியின் புகழ் பரவத் தொடங்கியது. அப்பொழுது ரஷ்யாவில் பிரபல இலக்கிய மேதைகளாய் விளங்கியவர்கள், வெளி உலகிற்கு சர்வ சாதாரணமாய் தெரிந்த லியோ டால்ஸ்டாயும், ஆண்டன் செக்காவும்தான். இப்பொழுது மூன்றும் நபராக கார்க்கியின் பெயர் ரஷ்ய இலக்கிய வானில் மின்னத் தொடங்கிற்று.

13. மீண்டும் சிறைவாசம்,

கார்க்கி விசேஷமாக கண்காக்ஷிசாலையைப் பற்றிய அந்த அக்ரமச் செலவை புள்ளி விவரங்களுடன் எடுத்தெழுதிய கட்டுரைகள் சர்க்காரின் கவனத்தை அவன்மேல் நன்கு திருப்பிவிட்டுவிட்டது. அதோடு அவனது பிரசங்கங்களும், எழுத்துக்களும் ஜார் ஆட்சிக்கு முரணாகப்பட்டது. அவனை சர்க்காரின் ஜன்மப் பகைவனாகக் கருதலாயினர்.

டிப்ளிஸில் புரட்சி இயக்கத்தில் சம்மந்தமுள்ள அபெனேஸ்யேவ் என்பவன் கைது செய்யப்பட்டான். அவன் வீட்டை பரிசோதனை செய்து பார்த்தபொழுது அவன் அறையில் ஒரு 'போட்டோ' படம் இருந்தது. அதன் கீழ் 'மாக்ஸிமிச்சின் ஞாபகார்த்தமாக அருமை பெட்யா-அபெனேஸ்யேவுக்கு' அளிக்கப்பட்டதென்ற குறிப்பு காணப்பட்டது.

அவ்வளவுதான். இந்த அல்ப விஷயத்தை போலீஸார் வியாஜமாகக்கொண்டு கார்க்கியை தேடி அவனைப் பிடித்து கைது செய்யலாயினர். அவனை கைது செய்து பின் டிப்ளிஸ் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

டிப்ளிஸ் சிறைக்கு கார்க்கியை விசேஷமாக அனுப்பியதுபற்றி அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அங்கேதான் அரசியல் பெரும் குற்றவாளிகளை எல்லாம் கொண்டுபோய் தள்ளுவது வழக்கம், அத்தகைய கொடுஞ் சிறைக்கூடம் அது.

ஜெயில் வார்டன் சதா தாழ்வாரத்தை சுற்றிக் கொண்டேயிருப்பான். சமயங்களில் அவனுக்கு புத்தி பேதளித்துவிடும். அவன் கார்க்கியை பார்த்து கத்துவானும்: ‘என்ன சொல்றே, இன்னும் 10 வருடத்திற்கு உன்னை இங்கேயே போட்டு விடவா?’ என்றெல்லாம்.

ஆனால் கார்க்கியின் நல்ல காலம் அபெனேஸ்யேவின் கேசின் மூலம் அவன்பேரில் எவ்வித குற்றமும் சாட்ட இயலாதிருந்தது. இல்லாவிட்டால் அந்த வார்டன் சொன்னபடி, அங்கேயே 10 வருடம் போட்டு அவனை மடியவைத்திருப்பான். அதற்கு வழிதான் இல்லையே. எனவே கொஞ்சகாலத்தில் விசாரணையில்லா கைதியாக அடைக்கப்பட்டிருந்த அவனை விடுதலை செய்துவிட்டார்கள்.

அவன் விடுதலையாகி நிழனி-நோவ்கோரட்டிற்கு வந்தது முதல் சதா சர்வகாலமும் அவனை இரகசிய போலீஸார் கண்காணிக்கலாயினர். போலீஸ் ஒற்றர்கள் அடிக்கடி மாறுவேஷத்துடன் கார்க்கியின் வீட்டிற்கு வருவார்கள்.

போலீஸ் ஒற்றர்கள் ஒரு சமயம் அன்னியனொருவனைப் போல் வந்து கார்க்கியின் ஜாகைக்கு பக்கத்தில் ஓர் பலகையில் ஆகாசத்தை பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான். இன்னொருவன் பத்திரிகையை புரட்டிக்கொண்டு அந்த விஷயங்களை கூர்ந்து கவனிப்பவன்போல் நடித்தான். அதோடு கார் டிரைவர் ஒருவன். அவன் கார்க்கியினிடம் அடிக்கடி செல்வானும்: அவன் எங்கு போக விரும்பினாலும் வாடகை இல்லாமல் காரில் அவனை அழைத்து போவதாக எல்லாம்.

ஆனால் பின்னிட்டு அவர்கள் போலீஸ் ஒற்றர்கள் இரகசிய போலீஸைச் சேர்தவர்கள் என்பதை கார்க்கி அறிந்து கொண்டான்.

அடிக்கடி, சதா; கார்க்கியின் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்த மயம்தான். அவனை பார்க்க அநேகர் வந்துகொண்டே இருப்பார்கள். அவர்களில் இன்னென்னார் என்று வரை யறுத்துக் கூறுவது சிரமம். பத்திரிக்கை எழுத்தாளர் களிலிருந்து, வியாபாரிகள், நடிகர்கள், பிரயாணிகள் உள்பட பள்ளிச்சிறுவர்கள் வரையில் கார்க்கியை பார்ப்பதற்கு தினசரி அங்கே வந்து குவிந்து கொண்டிருப்பார்கள். இதனால் கார்க்கி சற்றும் சலிப்படைவதில்லை. அவனிடம் வந்து யார் என்ன உதவி கேட்டபோதிலும் தயங்காமல் கொடுத்து உதவுவான்.

இந்த சந்தர்ப்பத்தைப்பற்றி கார்க்கி தன் நண்பன் ஸ்ரீடினுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இந்த விஷயங்களை அழகாக குறிப்பிடுகிறான்:

> "ஒவ்வொரு நாளும் பலதரப்பட்ட ஜனங்கள் கூட்டம் கூட்டமாக என்னைப் பார்க்க இங்கு வருகிறார்கள். ஒருவர் புஸ்தகம் கேட்கிறார்; இன்னொருவர் செய்யுள்; ஒருவர் அச்சுக்கோர்ப்பவர்; நாடு கடத்தப்பட்டிருந்து இப்பொழுதுதான் வந்தார். வந்தும் எனக்கு அவர் மரியாதை செய்கிறார். பிறகு, உதவி கவர்னரின் மனைவி ஒரு தையற்காரியின் பின்னோடு சட்ட விரோத மான பிரசுரங்களை ஒரு மூட்டையாக கட்டிக்கொண்டு வந்தார்...... பக்ரோவ் என்ற வியாபாரி அவரோடு கடவுளைப்பற்றி இருவருமாய் கலந்து பேசவேண்டு மென்று அழைக்கிறார். நாடகச் சபையை சேர்ந்த ஒருவன் வந்து, அவன் அங்கே சொன்னதை கேளாத பெண்ணுக்கு புத்திமதி சொல்ல கூப்பிடுகிறான்......"

இதிலிருந்து கார்க்கியின் பொழுது எப்படி போய்க் கொண்டிருக்கிறதென்பதைச் சொல்ல சற்றும் பின் வாங்க மாட்டோம்.

கார்க்கிக்கு குழந்தைகளின்பேரில் அமோகப் பிரியம். ஒருசமயம் நிழனி-நோவ்கோரட்டிலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு 'கிறிஸ்துமஸ் விருந்து' நடத்துவதென்று திட்டமிட்டான். அவர்களுக்கு ஒரு நாளைய பொழுதையாகிலும் உற்சாகமுடையதாக ஆக்கிவிட வேண்டுமென்பது அவனது ஆவல். சிறுவர்களுக்கு கொடுக்க ஏராளமான வெகுமதிக்கான பண்டங்களை கொண்டுவந்து நிரப்பி வைத்திருந்தான். அதற்காக முன்கூட்டியே சகலமும் தயாரிக்கப்பட்டன. எலெக்ட்ரிக் விளக்குகளால் கிறிஸ்துமஸ் மரம் அலங்கரிக்கப் பட்டது.

சுமார் 500 பேர் கொண்ட சிறுவர், சிறுமியர் கூட்டம் அணிவகுத்தாற்போல் அங்கே வந்து சேர்ந்தது. கார்க்கி அக்குழந்தைகள் ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த்தான். அவர்கள் கண்களில் சோகம் மிகுந்து காணப் பட்டது.

கார்க்கி ஒவ்வோர் குழந்தைக்கும் இனாம் கொடுத்தான். ஒரு ரொட்டி, ‡ ஒரு பை மிட்டாய், ஒரு ஜதை பூட்ஸ், ஒரு குல்லாய், ஒரு ஷர்ட் இன்னும் எல்லாம்.

இன்னும் சில குழந்தைகளுக்கு படங்கள் நிறைந்த ஆல்பங்களைக் கொடுத்தான். அதைப்பற்றி கேட்டபொழுது கார்க்கி அளித்த பதில் இதுதான்:

---

‡ (சுமார் 1½ பவுண்ட்)

'குழந்தைகள் ஒன்றையும் பார்த்திருக்க மாட்டார்கள். இதில் நதிகள், நகரங்கள், அழகிய கட்டடங்கள், அற்புத மனிதர்களின் உருவப் படங்கள் எல்லாம் இருக்கின்றது. அவர்கள் இவர்களையெல்லாம் பார்த்துவிட்டு, அவர்கள் எல்லாம் என்ன செய்திருக்கின்றார்கள் என்று பார்ப்பார்கள். அதன் மூலம் அவர்கள் அறிவு விசாலமடையும். அது அவர்களின் வருங்காலத்திற்கு ஓர் போதனையாகும்.' என.

சிறுவர் சிறுமியர்கட்கு மட்டுமல்லாது வயது வந்தவர் களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச்செய்து வந்தான்.

பெரிய கட்டடம் ஒன்று அந்நகரத்திலிருந்தது. அதனை வசதி செய்து வேலையற்றோர்களும், வீடற்றவர்களும் அங்கே தங்க ஏற்பாடு செய்திருந்தான். அதில் ஓர் வாசக சாலையும், பயோனு வாத்யம் ஒன்றும் வைத்திருந்தான். எல்லா நல்ல பத்திரிக்கைகளையும் அங்கே வரவழைத்தான். ஏழை மக்கள் அங்கு வந்து இலவசமாய் படித்துப்போக அது பெரும் உதவியாக இருந்தது. ஜனங்கள் அங்குபோய் கல்வி யிலும்,தர்க்கத்திலு மாக பொழுதை இன்பமாய் போக்கு வார்கள்.

இது செய்கை போலீஸாருக்கு அவன் மேல் உறுத்தியது. கார்க்கியும் அடிக்கடி சோரோமோவுக்கு, தொழிலாளர் கூட்டங்கட்குச் சென்று வருவான். அந்த நிழனி-நோவ் கோரட் ஜில்லாவிலேயே சோரோமோவில்தான் தொழிலாளர்கள் அதிகம். அது இன்னும் அவன்மேல் சந்தேகத்தை அதிகப் படுத்தியது.

அந்த சோரோமோவ் தொழிலாளர்களும் அடிக்கடி கார்க்கியிடம் வருவார்கள். வந்து அவனிடம் வேண்டிய

புத்தகங்கள், பணம், உபதேசம் எல்லாம் பெற்றுச் செல்லுவார்கள். கார்க்கியும் தயங்காது அவர்கள் கேட்பவற்றை தாராள சிந்தையுடன் கொடுத்துதவுவான்.

14. தேசப்பிரஷ்டம்.

1901-ம் ஆண்டில், ரஷ்யாவில் அடக்குமுறை தாண்டவமாடிற்று. கார்க்கி செயிண்ட். பீட்டர்ஸ் பர்க் நகரத்திற்கு சென்றிருந்தான். அங்கே அப்பொழுது மாணவர்கள் புரட்சி கீதங்களை பாடிக்கொண்டும், கோஷித்துக் கொண்டும் நகரில் ஊர்வலமாய் சென்றார்கள். நிரபராதிகளான அவர்களை போலீஸார் ஈவு இரக்கமின்றி அடித்து ஹிம்ஸிக்கலாயினர்.

இதைக் கண்டபொழுது கார்க்கியின் மனம் பதைத்தது. சர்க்காரின் இந்த அடாத செய்கையை வன்மையாய் கண்டித்து பத்திரிக்கையில் வியாசமெழுதினான். அதோடு ஆவேச உணர்ச்சியை யூட்டும் பாடல்களையும் எழுதி வெளியிட்டான்.

'புயல்! சீக்கிரத்தில் புயல் எழும்' என்ற அந்த கீதத்தின் வரி தேசமெங்கும் எதிரொலித்தது.

வெகு சீக்கிரத்திலேயே பீட்டர்ஸ்பர்க் நகரத்தை விட்டு கிளம்பிவிட்டான். வரும்பொழுது அவன் இயக்க தோழர்களுக்காக 'நகல்' எடுக்கும் மெஷின் ஒன்று கொண்டு வந்தான்.

அது எப்படியோ, போலீஸாருக்கு தெரிந்து போயிற்று. கார்க்கியின் பேரில் ராஜத்துரோக குற்றம்சாட்டி அவனுக்கு சிறைதண்டனை அளித்தனர். கார்க்கிக்கு உடல்

நிலை அப்பொழுது சரியில்லாதிருந்தது. இருந்தும் அவனை நிழனி நோவ் கோரட் சிறையில் அடைத்தனர். அதோடு அவனை ஒரு பெரிய அபாயகரமான குற்றவாளியாகக் கருதி சிறையில் அவனைக் கஷ்டப் படுத்தினார்கள். கடிதப்போக்கு வரத்துக்களும் அவனுக்கு தடை செய்யப்பட்டது.

கார்க்கியை சிறையிலடைத்த விஷயம் வெகு சீக்கிரத்தில் நாடெங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. தேசம் பூராவும் அந்த செய்கையை கண்டித்து அவனை விடுதலை செய்யுமாறு கோரி கிளர்ச்சி செய்தது.

கார்க்கிக்கு சிறைவாசத்தின் பயனாக இன்னும் உடல் நிலைமை தாழ்வுற்றது. நோய் நாளுக்குநாள் பலமடைய லாயிற்று.

நம் காந்தியின் குருவான டால்ஸ்டாய் கார்க்கியின் சிறை தண்டனையைக்கேட்டு உள்ளங்கலங்கிப்போய் உடனே அவனை விடுவிக்க முன் வந்தார். இந்த இளம் எழுத்தாளனின் விடுதலையின் பொருட்டு தேசம் பூராவும் கச்சை கட்டி எழுந்தது. பொது ஜன அபிப்பிராயத்தைக் கேட்டு கார்க்கியை விடுதலை செய்யும்படி சர்க்காரை வற்புறுத்தலாயினர்.

தேசத்தின் இந்த பலத்த எதிர்ப்பைக் கண்டஞ்சி ஜார் அரசாங்கம் அவனை விடுதலை செய்வித்தது. ஆனால் வீட்டுக்கு கார்க்கி சென்றதும் அவனை சதா கண்காணித்து 'ரிப்போர்ட்' செய்து கொண்டிருக்கும்படி இரு போலீஸ் சி. ஐ. டி.,க்களை ஏவி விட்டது அரசாங்கம்.

அவர்களில் ஒருவன் சமையல் கட்டில் இருப்பான், இன்னொருவன் கூடத்தில் இருப்பான், கார்க்கி படித்துக்

கொண்டிருக்கும்போதெல்லாம் அவனுடன் ஏதாகிலும் பேச்சுக் கொடுத்து அவன் வாயை கிண்டி விஷயங்களை கிரகிக்க முயற்சிப்பார்கள்.

இவ்வளவு பந்தோபஸ்து இருந்துங்கூட கார்க்கி இரவில் நீண்ட நேரம்வரை எழுதிக்கொண்டிருப்பான். இது எல்லாவற்றைக் காட்டிலும் இன்னும் அதிக சந்தேகத்தை கிளப்பிவிட்டது. அவ்விரு சி. ஐ. டி. களும் மேலதிகாரி களுக்கு ரிப்போர்ட் செய்தார்கள்:

'அவன் இரவிலும், சதாகாலமும் சுறுசுறுப்பாகத் தான் ஏதாகிலும் செய்து கொண்டிருக்கிறான்' என்பதாக.

இந்த ரிப்போர்ட்டைக் கொண்டு போலீஸ் அதிகாரிகள் அவனை எதுவும் செய்ய முடியாதவர்களாய் இருந்தார்கள். மேலும் வேறு எவ்வித குற்றமும் அவனிடம் அகப்படவில்லை. எவ்வளவோ தோண்டித் துருவிப் பார்த்து விட்டார்கள். கடைசியாக போலீஸாரின் யோசனையில் ஒன்று சிக்கியது. கார்க்கிக்கு தொழிலாளர்களிடத்தில் அதிக செல்வாக்கிருக்கிறதல்லவா? அதைச் சுட்டிக்காட்டி போலீஸார் அக்ரமமான புகாரை சர்க்காருக்கு தெரிவித்தனர்.

அப்பாடா! இது போதாதா என்ன. இது தகவல் கிடைத்ததுதான் தாமதம், உடனே அவனை நிழனி-நோவ் கோட்டை விட்டு பிரதிஷ்டம் செய்ய தீர்மானித்து விட்டது அரசாங்கம். உடனே பின் தொடர்ந்தாற்போல் அவனுக்கு தேசப்பிரஷ்ட உத்திரவும் சாதரா செய்யப்பட்டது. அதில் அவன் நிழனி-நோவ்கோட்டை விட்டு அர்ஸமாஸூக்குப் போய் விடும்படி அவ்வுத்திரவில் சொல்லப் பட்டிருந்தது.

புதுயுகச் சிற்பியான லெனின், சர்க்காரின் திடுக்கூறான தகாத இச்செய்கையை கண்டித்து, பலமாய் ஆக்ஷேபித்தார்; அதைப் பற்றி எழுதினார். "ஐரோப்பாவின் மிகச் சிரேஷ்டமான எழுத்தாளர். அவரது முக்கிய ஒரே ஆயுதம் பேச்சு சுதந்திரம். அதனை கொடுங்கோல் ஆட்சி முறை விசாரணை இல்லாதபடி பறித்துத் தூக்கிவிட்டது." என.

சிறை வாசத்தின் பயனாக கார்க்கியின் உடல் மெலிந்து நோய் அதிகமானது. டாக்டர்கள் கிரிமியாவுக்குச் சென்று வசிக்கும்படி வற்புறுத்திக் கூறினார்கள். நிலைமையும் நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வந்தது. டால்ஸ்டாய் உள்பட கார்க்கியின் எல்லா நண்பர்களும் அவனை கிரிமியாவில் போய் தங்கியிருக்க அரசாங்கத்திடம் அனுமதி கோரினார்கள்.

கார்க்கிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அவனை கிரிமியாவுக்கு வழியனுப்ப ஏராளமான மக்கள் குழுமி விட்டார்கள். மாணாக்கர்களின் கூட்டமும், தொழிலாளர்களின் கூட்டமும் நிறைந்திருந்தது.

ஜனத்திரள் ஒரு முகமாக கார்க்கியை பார்த்தபடி இருந்தார்கள். வண்டி ஊதியதுதான் தாமதம் வானைப் பிளக்கும் கரகோஷங்களும், புரட்சி சுலோகங்களும் ஸ்டேஷனை கிடுகிடுக்கச் செய்தது. மாணவர்களும், தொழிலாளர்களும் புரட்சிக் கீதங்கள் பாடினார்கள். "கார்க்கி நீடூழி வாழ்க! கொடுங் கோன்மை வீழ்க"!! என எல்லோரும் உரக்க சத்தமிட்டு பலத்த கர கோஷங்களுக்கிடையே அவர்களது அன்பிற்கு பாத்திரமான அந்த எழுத்தாளனை வழியனுப்பினார்கள்.

ரெயில் புறப்பட்டது. வண்டியின் ஒவ்வோர் படிக் கட்டிலும் இரண்டு சி. ஐ. டி. கள் காணப்பட்டனர்.

கார்க்கி கிரிமியாவில் சில மாதங்களைக் கழித்தான். அங்கிருந்தபொழுது "அகாடமி ஆப் சயின்சஸ்" தேர்தல் நடைபெற்றது. அந்த 1902ம் வருட அத்தேர்தலுக்கு கார்க்கியை ஓர் கௌரவ அங்கத்தினனாக தேர்ந்தெடுத் தார்கள்.

இது அதிகார வட்டாரங்களில் ஓர் பெரும் பர-பரப்பை உண்டாக்கி விட்டது. கார்க்கி அகாடமியில் ஸ்தானம் வகிக்கவாவது, அதை நாம் பார்த்துக்கொண்டிருக்க வாவது என சீறி விழுந்தார்கள் அரசாங்க ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள். உடனே ஜார் மன்னனுக்கும் இச் செய்தியை அறிவித்தார்கள்.

ஜார் மன்னனுக்கு ரொம்ப நாளாகவே கார்க்கியின் பேரில் ஓர் கண் உண்டு. அதிலும் இந்த சமாச்சாரத்தை கேள்வியுற்றதும் உடனே பாந்து பாந்து எழுதித்தள்ளினான்: 'இது இயற்கை வரம்பு கடந்த செய்கையாகும்' என அதோடு-கல்வி இலாக்கா மந்திரிக்கும் ஓர் கடிதம் எழுதி அதில் கார்க்கி 'அகாடமி ஆப் சயின்ஸில்' அங்கம் வகிப்பது தகாதெனவும், அது அவனுக்கு ஆத்திரத்தை அளிக்கக்கூடிய விஷயமெனவும் குறிப்பிட்டு அவன் அதிருப்தியை காட்டி யிருந்தான். அஃதன்றியும்-

கார்க்கி முன்னமேயே இரு முறை சிறை சென்றவன். அவன் அகாடமிக்கு வர எப்படி யோக்யதை உண்டு? இது போன்ற பல குயுக்தி வாதங்கள் தலை விரித்தாடியது.

மேலும், ஜாரின் அக் கடிதமே கார்க்கியின் தேர்தலை ரத்து செய்ய அவர்களுக்கு போதுமானதாயிருந்தது. அவ்வளவு தான். தேர்தலை ரத்து செய்து விட்டார்கள். 'சயின்ஸ் அகாடமி' இதற்கு புறமுதுகு காட்டிக்கொண்டு மௌனம் சாதித்தது. ஆனல் உலகப் புகழுக்குரிய அவ் விரு வீர திலகங்கள் மட்டும் - ஆண்டன் செக்காவும், விலாடிமிர் கொரொலெங்கோவும் இந்த அநீதி முறையை கண்டித்து தங்கள் கௌரவப் பட்டங்களை உதறித் தள்ளி விட்டு அகாடமியை விட்டு வெளியேறினார்கள். சுய மதிப்புடனும் கௌரவத்துடனும் நடந்து கொண்ட அவர்கள் புகழப் பட்டார்கள். சுயநலமிகளும் தாசர்களும் ஜாருடன் வீழ வேண்டியவர்கள்தானே!

15. அர்ஸமாஸ் வாசம்.

அர்ஸமாஸ் என்பது பாதிரிகளும், வியாபாரிகளும், சர்க்கார் உத்தியோகம் வகித்தவர்களும் நிரம்பிய ஊர். அங்கே மாதா கோவில்கள் மட்டும் 36 இருக்கின்றன. கோவில்களிலிருந்து வரும் மணிச் சத்தம், தவளைகளின் சங்கீதம், இவைகளைத் தவிர அங்கே அதிகம் ஒன்றும் கேட்கமுடியாது. கிறிஸ்தவ பாதிரிகளால் நடத்தப்படும் பத்திரிக்கை ஒன்று கிடைக்கும்.

மற்றும் பரம ஏழைகளும், சக்கிலியர் போன்ற தொழிலாளர்களும் உள்ளனர். அந்த ஏழைத் தொழிலாளி களைப் பற்றி லெனின் எழுதிய புத்தகம் ஒன்றில் அவர்களது பரிதாபகரமான வாழ்க்கையைப் பற்றி வர்ணித்திருக்கிறார்:

'அத் தொழிலாளர்கள் தினசரி 14 மணி நேரத்திற்கு மேல் அவர்களது எஜமானர்களுக்கு உழைத்து விட்டு அரை வயிற்றிற்குக் கூட போதாத ஊதியத்தைப் பெற்று வந்தார்கள். வறுமை நாளுக்கு நாள் அவர்களை விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டு வந்தது.' என.

இப்படி பாதிரிகளால் சூழப்பட்ட இடத்திற்கு வந்துங்கூட கார்க்கியின் பேரில் உள்ள சந்தேகம் போலீஸா ருக்கு கொஞ்சமும் குறையவில்லை. அந்த ஊர் போலீஸ் சூப்ரின்டென்டெண்டுக்கு மேலதிகாரிகளிடமிருந்து ஓர் அறிக்கை வந்தது. அதில்:

சமீபத்தில் "அலெக்ஸி மாக்ஸிமோவிச் பெஷ்கோவ் (மாக்ஸிம் கார்க்கி) அர்ஸமாஸுக்கு, அங்கே தங்கி இருப்பதற்காக வருவார். அவரை போலீஸாரின் கண்காணிப்பிலேயே வைத்திருக்க வேண்டுமென்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது." என்பதாக.

இந்த அர்ஸமாஸ் வாசத்தையும், போலீஸ் பாராவையும் பற்றி கார்க்கி ஆண்டன்-செக்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்,

> 'இங்கே அமைதியாயும், உல்லாசமாயும் இருக்கின்றது. காற்று சந்தோஷத்தை அளிக்கிறது. எங்கு பார்த்தாலும் ஒரே தோட்டங்கள் தான். தோட்டங்களிலிருந்து இராப்பறவைகள் கீதமிழைக்கின்றன; போலீஸ் ஒற்றர்கள் புதர்களில் ஒளிந்திருக்கின்றனர். அங்கே எல்லா தோட்டங்களிலும் இராப் பறவைகளுண்டு. ஆனல் போலீஸ் ஒற்றர்கள் என் தோட்டத்தில் மட்டும்தான். அவர்கள் இரவில் அந்த இருளிலே ஜன்னலின் கீழ் மறைவாய் இருந்து கொண்டு நான் எப்படி ரஷ்யா பூராவுக்கும் குழப்பத்தை பரவச் செய்கிறேனென்று பார்த்து ஏதாகிலும் என்னிடமிருந்து ஓர் குற்றத்தைக்காண முயற்சிக்கிறார்கள். அது எப்படி செய்யப்படுகிறதென்றும் பாராதபடி ஏங்கியவர்களாய் என் வீட்டிலிருப்பவர்களை மிரட்டி, உருட்டி பயம் காட்டுகிறார்கள்.........' என எழுதுகிறான்.

கார்க்கி செய்யும் அலுவல்கள் ஒவ்வொன்றும் போலீஸாருக்கு சம்சயம்தான். அவன் யாராகிலும் ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு வெள்ளிப் பணத்தை பிச்சை போட்டாலுங்கூட, அதையும் உடனே அவனிடமிருந்து பிடுங்கிப் பார்த்து அது போலி நாணயம் அல்ல என்று அவர்கள் தங்கள் சம்சயத்தைப் போக்கிக் கொள்ளுவர்.

8656,

ஒரு சமயம் போலீஸ் ஒற்றன் ஒருவன் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாத பாவனையில் கார்க்கியிடம் வந்தான். அவனைக்கண்ட மாத்திரத்திலேயே கார்க்கி சட்டென கேட்டான்:

'நீ போலீஸ் உளவாளி, அல்லவா?
'இல்லை.'
'நீ பொய் சொல்கிறாய். வேவு பார்ப்பவனில்லையா நீ?
'நான் அல்ல.'
'நீ ரொம்பநாளாய் அந்த உத்தியோகத்திலிருக்கிறாயா?'
"இல்லை சமீபமாகத்தான்."

எவ்வளவு சாதுர்யமாக உண்மை வெளியாகிறது பாருங்கள். இவ்வளவு கடுபிடிகளிருந்துங்கூட கார்க்கி புரட்சி இயக்கத்தில் கலவாமல் இல்லை.

அர்ஸமாஸுக்கு பக்கத்தில் பொனிதேயேவ் ஆச்ரமம் இருக்கிறது. அங்கே 'ஒயின்' கடையும் உண்டு. கார்க்கி உள்பட நிழனி-நோவ் கோரட் புரட்சிக் காரர்கள் அந்தக்கடையை கைவசப்படுத்த தீர்மானித்தார்கள். ஆச்ரமத்திற்கு அடுத்த கடை அதுவும்.

எப்படியோ, அவர்களது திட்டம் வெற்றி பெற்றது. லெபெதேவ் என்ற நிழனி-நோவ் கோரட்டைச் சேர்ந்த தச்சனை ஒயின் கடையில் வைத்தார்கள். தச்சன் சந்யாசிகளுக்கும், பிரயாணிகளுக்கும் நிறைய * 'ஒட்கா'வைக் கொடுத்து விற்றுமுதல் செய்தான். அந்தக்கடையின்

---

* 'ஒட்கா' என்பது ஒருவகையான சாராயம்,

பின் புறத்தில் புரட்சியாளர்கள் ஓர் அச்சு இயந்திரம் வைத்திருந்தார்கள். அதிலிருந்து இரகசியமாக எல்லா பிரசுரங்களையும் அச்சிட்டு அம் மாகாணம் பூராவுக்கும் விநியோகிப்பார்கள்.

ரொம்பகாலம் வரை இது விஷயம் போலீஸாருக்குத் தெரியாமலேயே இருந்தது. ஒயின் கடையைப்பற்றி கவனிக்காமலே இருந்தார்கள். ஒரு சமயம் திருடர்கள் அக்கடையில் புகுந்து சூறையாடிவிட்டார்கள். திருட்டு போன விஷயம் போலீஸாருக் கெட்டியது. உடனேயே போலீஸார் வந்து அந்த ஸ்தலத்தில் புலன் விசாரிக்கலாயினர். ஆனால் எப்படியோ, புரட்சிக்காரர்கள் ஒயின் கடையில் வியாபாரம் செய்த லெபெதேவையும், அந்த அச்சு இயந்திரத்தையும் போலீஸ் கண்களை மறைத்து அப்புறப்படுத்தி விட்டார்கள். அச்சு இயந்திரம் காப்பாற்றப்பட்டது. எனினும் போலீஸார் அவர்களை எப்படியும் பிடித்து விடுவதென்று கங்கணம் கட்டித் திரிந்தார்கள்.

ஜில்லா போலீஸ் அதிகாரி தானிலோவ் என்பவன். ஒரு சமயம் கார்க்கியின் வீட்டுபக்கமாக குதிரைமேல் சவாரி செய்துகொண்டு போனான். அப்படியே ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தான். கார்க்கி எழுதிக்கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. நிச்சயமாய் நம்பிவிட்டான். கார்க்கியை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். இல்லாவிட்டால் அவன் ரஷ்யா பூராவுக்கும் ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணி விடுவான். அதைப்பற்றி அவன் தன் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கக் கடமைப் பட்டவன் என்று.

அதற்கேற்றாற் போல் சம்பவங்களும் நடைபெற்று வந்தன. கார்க்கியின்பேரில் 'அவன் சதா இரவு பூராவும் படித்துக்கொண்டிருக்கின்றான்' என்ற புகார் அடிக்கடி போலீஸ் வேவுகாரர்களிடமிருந்து கிடைத்துக்கொண்டிருந்தது.

அது இன்னும் அந்த போலீஸ் அதிகாரியின் சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

கார்க்கி இரவு பூராவும் சமயங்களில் படிப்பான்; எழுதுவான். சில நாள்களில் கொஞ்சநேரம் மட்டும் தூங்குவான். எனினும் போலீஸ் கடுபிடி அவனுக்கு அதிகமாயிருந்தது. அதைப்பற்றி ஆண்டன் செக்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்கூட 'அந்த நாடகம் எழுத முடியுமென்றே படுகிறது. ஆனால் எனக்கு அதை எழுதுவது குற்றமாகும் என்பதால் அதில் பிரவேசிக்கவில்லை..........' என்று குறிப்பிடுகிறான்.

16. நாடகங்கள்.

மாஸ்கோவின் பழைய நாடகக் கொட்டகைகளைப் பற்றி முதலில் சொல்லிவிட வேண்டியிருக்கிறது. 'மாலே' கொட்டகையிலும் சரி; 'கோர்ஸ்' கொட்டகையிலும் சரி; பழயகாலத்து மாடல். சிகப்பு கம்பளியால் சித்திர வேலைப் பாடுகள் செய்யப்பட்ட திரை தொங்கும். அதை இழுக்கும் பொழுது ஏதோ வாத்தியத்தின் சத்தம் கேட்பதுபோல் கேட்கும். வாத்தியங்களின் அணிக்கிரமத்தைப் பற்றி சொல்லவேண்டியதில்லை. நடிகர்கள் காலை 'தொப்', 'தொப்' பென்று சத்தம் உண்டாகும்படி அடிவைத்து நடப்பார்கள். சமயங்களில் காலால் ஓங்கி தரையில் தட்டுவார்கள். அந்த சத்தம் அவர்களுக்கேற்றாற் போல் ஏதோ துப்பாக்கி வெடித்த சத்தத்தைப்போல் கூட கேட்கும். சம்பாஷணைகளோ இன்னும் ரொம்ப அழகு. அர்த்தமில்லாதபடி வாயில் வந்ததெல்லாம் உளறிக்கொட்டுவார்கள்.

அதை பார்க்கும் நாடகாபிமானிகளோ: நாடகம் நடந்துகொண்டிருக்கும். அப்பொழுதுதான் சுணைப்பார்கள்; இருமுவார்கள்; சத்தம் போட்டு பேசுவார்கள். சில சமயத்தில் கை கொட்டி ஆரவாரம் செய்வார்கள்.

ஆனல் புதிய கொட்டகையில் இப்படி அல்ல. அவ்வளவும் மாறுதல். ஜனங்கள் தாமாகவே அமைதியை கடைப்பிடிப்பார்கள். நாடக அரங்கத்திலிருக்கும் நவீன திரை இழுக்கப்படுவதில்லை. புஸ்தகத்தில் பக்கங்கள் புரள்வது போன்று, திரை மெல்லத்திறக்கும்.

கல்வி கேள்விகளிற் சிறந்த புலவர்களாலும், சிறந்த கலாரஸிகர்களாலும், நாடகப் புரவலர்களாலும் அமைக்கப் பட்டது அக் கலை அரங்கம்.

நடிகர்களெல்லாம் நாடகக்கலையில் நல்ல பாண்டித்ய முள்ள இளம் நடிகர்களாயிருப்பார்கள். அந் நடிகர்களில் ஒருவர் உபாத்தியாயர்.

ஜனங்கள் கைதட்ட மாட்டார்கள் சத்தம் செய்யவும் மாட்டார்கள். 'ஒன்ஸ் மோரும்' நாடகத்தில் அங்கீகரிப்ப தில்லை. உணர்ச்சியை அள்ளி வீசும் அபார நடிப்பு. மணிப்பிரவாக உயர்தர வசன விருந்து. அமைதி நிலவிக் கொண்டிருக்கும். அவ்வமைதியிலே மழைத்தூவானம் விழுந்தால் கூட அந்தச் சிறு சத்தத்தையும் பூரணமாய் கேட்க முடியும்.

கார்க்கி மாஸ்கோவிற்கு சென்ற சமயம். அங்கே, அக்கலை அரங்கிற்கு விஜயம் செய்தான். அப்பொழுது ஆண்டன் செக்காவின் உன்னத சிருஷ்டியான "மாமன் வான்யா" (Uncle Vanya) நாடகம் நடந்து கொண் டிருந்தது. கார்க்கி அந் நாடகத்தைப் பார்த்தான். உள்ளத்தை உருக்கும் நடிப்பு; உயரிய கலைப்பண்புடன் காட்சியளிக்கும் ஜோடனைகள்; மனித வாழ்க்கையை அப்படியே பிரதிபலிக்கச் செய்யும் கதை அமைப்பு. 'மாமன் வான்யா கணக்குகளைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான்; வேபின் சாந்தத்துடன் தம்புராவை சுருதி கூட்டிக் கொண்டிருக்கிறான்; டாக்டர். அஸ்ட்ரோவ் அறையில் மாட்டப்பட்டிருக்கும் ஆப்பிரிக்கா பூகோள படத்தை பார்த்த படி இருக்கிறார்............'

கார்க்கி நாடகம் முடிந்து வீட்டுக்குப் போனதும் அங்கும் அதே காட்சிகள் அவன் மனத்திரைகளில் பிரதி பலிப்பதைப் போலுணர்ந்தான். சபா மண்டபத்தை ஆட் கொண்டிருந்த அமைதி அவனை ஸ்தம்பிக்கச் செய்தது. அவனை எங்கோ உணர்ச்சிக்கடலில் மிதக்க விட்டு அவன் தலைதூக்க முடியாதவாறு அவனை அச்சுறுத்துவதைப் போலுணர்ந்தான். அந் நாடகாசிரியனை செக்காவை வெகுவாய் புகழ்ந்தான். மனதார போற்றிப் போற்றி வியந்தான். என்னே? அவன் திறன் பெரிது! பெரிது!

உடனே செக்காவுக்கு ஓர் கடிதம் எழுதலானான். அத்தகைய கடிதத்தை கார்க்கியின் பேனா என்றும் எழுதி யிருக்க முடியாதென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதிலே-

> "அந்த நாடகம் உங்கள் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சியை எழுப்பி விடுகிறதென்பதை உடனேயே உங்களால் தெளிவாகக் கூறமுடியாது. ஆனால் அந்தக் கதாபாத்திரங்களை பார்த்த மாத்திரத்தில், என்னிடம் ஸ்மரணையே இல்லாது போனது போல் இருந்தேன். என் உணர்ச்சிப் பிரவாகமாகி, பற்களை கிட்டி, இத யத்தைச் சுருங்கச் செய்தது. பெரு மூச்சுடன் என் இதயம் அணு வணுவாய் சிதை வதைப் போலுணர்ந் தேன். என்னளவில், அது ஓர் பயங்கர அனுபவம் என்று தான் சொல்வேன். ஆமாம். 'மாமன்வான்யா' நாடகக் கலையில் ஓர் புது மலர்ச்சி.
>
> கடைசி கட்டத்தில் டாக்டர் ஆப்ரிக்காவில் உஷ் ணம் எப்படி இருக்கிறதென்பதைப் பற்றி நீண்ட நேரம் பேசியபொழுது தங்கள் மேதையை எண்ணி ஆச்சரியத்துடன் நடு நடுங்கினேன்; ஜனங்களுக்காக, நம் அவாந்தரமான, வறுமை வாய்ப்பட்ட, எளிய மக்களுக்காக பயந்து போனேன்." என எழுதியிருக் கிறான்.

நாடகம் நடந்து கொண்டிருந்த பொழுது சத்த மிட்டு அலறி அழுது விட்டானும்; அநேகம் கண்ணீர் துளிகளை அங்கேயே உதிர்த்து விட்டானும்.

அது என்ன? அத்தகைய நாடகத்தில் கார்க்கி மன மிழந்து போனது நமக்காச்சர்ய மில்லைதான்!

கார்க்கி நிழனி- நோவ் கோரட்டில் இருந்த காலம் வரை இத்தகைய ஓர் சிறந்த நாடகத்தையும், நாடகக்கொட்ட கையையும் அவனுக்கு பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டாதிருந்தது.

பின் கார்க்கி கிரிமியாவில் செக்காவைச் சந்தித்தான். இருவருமாக செக்காவ் இருந்த யால்டாவிற்கு வந்தனர்.

அப்பொழுது வசந்த காலம். செக்காவின் வசந்த வாசஸ்தலத்தின் தோட்டத்திலே பலவித பூஞ்செடிகளை வைத்து அவரே பயிராக்கியிருந்தார். செடிகள் செந்தளிர் விட்டு மலர் கண்டிருந்தன.

இருவரும் உல்லாசமாய் வேனிற் பொழுதை அங்கே சழிப்பர். இருவரும் யால்டாவின் வீதிகளில், வெள்ளை அணைக்கரையின் வழியாக உலாவி வருவர். மாலையில் அவர்க ளிருவரும் நாடகக் கொட்டகைக்குச் செல்வர்; நாடகத்தைக் கண்டு களிப்புறுவர்.

நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு நாள். செக்காவ் கார்க்கியிடம் அவனையும் ஒரு நாடகம் எழுதும் படி தூண்டினர். அதோடு அந்நாடக சபையும் கார்க்கியை ஓர் நாடகம் எழுதித்தரும்படி கேட்டது. அதற்கு கொஞ்சம் தலையசைத்தான். அதுதான்,

அர்ஸமாஸுக்கு வந்த பிறகு கார்க்கி ஓர் நாடகம் எழுதத் தொடங்கினன். பெஸிமெனேவ் குடும்பத்தைப் பற்றிய-அக்கொடிய வாழ்வை சித்தரிக்கும் ''பிலிஸ் டைன்ஸ்'' (Philistines) என்ற முதல் நாடகத்தை எழுதி முடித்தான்.

நாடகம் எழுதுவது முதலில் கார்க்கிக்கு சுலபமாக இருக்க வில்லை. நாடக பாணி அவனுக்கு முற்றிலும் புறம் பாகத் தென்பட்டது. அடித்து அடித்து திருத்தித் திருத்தி எழுதினன். அப்படிச் சிரமப்பட்டு அந்நாடகத்தை பூர்த்தி செய்தான். அதை எழுதும் பொழுது அவனுக்கு யாரோ ஒரு 'நையாண்டி அறிஞன்' சொன்ன விஷயம் மட்டும் நினை வில் இருந்தது. அதனை அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொண்டே சலியாது எழுதலுற்ருன்.

''ஐந்து அங்கங் கொண்ட நாடகம் ஒன்றெழுது. பின் ஒரு வருடங் கழித்து அதை மூன்றங்க நாடகமாக புனருத்தாரணம் செய. பின் ஒரு வருடத்திற்கு அதை அப்படியெ வைத்து விடு. பிறகு அதை எடுத்து ஒற்றையங்க நாடகமாக திருத்தி எழுது. பின்னும், மற்ருெரு வருடங் கழித்து அதனை நெருப்பில் போட்டு விடு.........''

எப்படி இருக்கிறது இந்த உபதேசம். ஆனல் கார்க்கி அந் நாடகத்தைப் பற்றி அதிருப்தியுறவுமில்லை, அதனை நெருப்பில் போட்டு விடவுமில்லை. அது சீரற்று, உருவில்லாதிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. ஆகவே விடாமுயற்சியுடன் அதனை எழுதி உருவாக்க வேண்டி யிருந்தது. அதைப்பற்றி செக்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கூட 'அதை நான் விரும்பவில்லை. இந்த மாரியில் நான் வேருென்று எழுதுவதற்கு திட்டமிட்டிருக்கிறேன், அதுவும்

சரிவர அமையாவிட்டால் - இன்னும் ஒரு டஜன் எழுதி அதிலிருந்து ஒன்றை நான் விரும்புகிறபடி தேர்ந் தெடுப்பேன்........' என்றெழுதி யிருக்கிறான்.

அதோடு, அவன் நாடக அரங்கத்தில் பார்த்த செக்கா வின் நாடகங்களில் பாடப்பட்ட பாடல்கள் சாதாரண எளிய பாடல்கள். அதை எண்ணி இந்த அவனது புதிய நாடகத் திற்கும் அதைப் போல் பாடல்கள் போட நினைத்தான்.

இந்த 'பிலிஸ்டைன்ஸ்' என்ற நாடகத்தில் அவனுக்கு சிறு வயது முதல் பழக்கமுள்ள - அந்த தரித்திரியத்தில் வாடி வதங்கும் ஏழைகளின் வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டியிருக்கின்றான்.

அதன் பின் மற்றோர் புது நாடகத்தை எழுதி முடித்தான்.

இந்த புதிய நாடகத்தில் நிழனி-நோவ்கோரட்டின் பணக்காரர்களின் வீதியில் இருட்டுச் சந்திலும், காஸானில் 'பளிங்கு மாளிகை'யில் வசிக்கும் 'போஸ்யாக்'க்குகளைப் பற்றிய வாழ்க்கையையும் அடிப்படையாய் கொண்டு நாடகத்தை அமைத்திருக்கின்றான்.

அதிலே ஒரு காட்சியில்:— போஸ்ட் மாஸ்டராக யிருந்தவன், நிழனி-நோவ்கோரட் தெருக்களில் பிச்சைக் காரனாய்த் திரிகிறான். அங்கே ஓர் மாது தென்படுகிறாள். அவளிடம் பிரஞ்சு மொழியில் கெஞ்சி யாஜிக்கிறான். அவள் ஓர் செப்புக் காசை தூக்கி அவனிடம் எறிந்து விட்டு செல்கிறாள்.........

இன்னும் அந்த நாடகத்தைப் பார்ப்போம்:—

ஒரு பணக்காரன் வீட்டு வேலையாளாக (பட்லர்) இருந்தவன். அதை விட்டுவிட்டு வந்து ஓர் விடுதி வைத்து நடத்துகிறான். அங்கே ஜனங்கள் ஏராளமாய் வந்து தங்குகிறார்கள். அவன் மனைவி அந்நியன் ஒருவனைக் காதலிக்கிறாள்.........

இந் நாடகத்திற்கு "வாழ்வின் ஆழத்திலே தாழ்வு" (Lower depths of life.) என்ற மகுடத்தைச் சூட்டியிருக்கின்றான்.

நாடக நிலையத்தினர் அந் நாடகத்தை சபையில் வாசித்துக் காண்பிக்க ஏற்பாடு செய்திருந்தனர். கார்க்கியும் ஒப்புக்கொண்டு வாசிக்கலானான்.

ஒவ்வோர் அங்கமும், ஒவ்வோர் பாத்திரமும் உயிர், பெற்று அங்கே பேசுவதைப் போல் தோன்றியது. சாவப் போகும் ஆளுவுக்கு லூகா ஆறுதல் சொல்கிறான். அவன் வார்த்தைகள் அடி ஆழத்திலிருந்து கண்களில் நீரை மல்கிக் கொண்டு ஒவ்வோர் துளி கண்ணீருடன் வெளியே உதிர்கின்றன.

இந்த இடம் படித்த பொழுது நடிகர்கள் மெய் சிலிர்த்து பெருமூச்செறியலாயினர். கார்க்கியும் கண்ணீர் சொரிந்து விட்டான். ஓர் துளி கண்ணீர் அவன் கண்ணின்றும் சொட்டிற்று. தொண்டை துக்கத்தால் கட்டியது. யாவரும் கண்ணீர் வடிக்கலாயினர்.

மீண்டும் மீண்டும் சிரமத்துடன் ஒவ்வோர் வார்த்யையாகப் படித்தான், துக்கம் குமுறி எழுந்தது.

அவனை படிக்க விடாதபடி அழுகல் வந்து அநேகந் துளி கண்ணீரை உதிர்க்கச் செய்தது.

இத்தகைய சோக நாடகம் இரண்டாவதாக அங்கே நடத்தினார்கள்.

அரசாங்கம் கார்க்கியின் நாடகங்களுக்கு அரை குறை மனதுடன் தான் அனுமதியளித்தது. அதிலும் 'சென்ஸார்' அவன் நாடகங்களிலிருந்து சில இடங்களை வெட்டி விட்டனர். 'பிலிஸ்டைன்ஸ்' என்ற நாடகத்தில் 'வியாபாரி ரோமினேவின் மனைவி' என்ற வாசகத்தை எடுத்து விட்டார்கள். ரோமனேவ் என்ற பெயருக்கு பதிலாக இவானேவ் என்ற பெயரை வைக்கச் சொன்னார்கள். ஏனென்றால் அந்த பெயர் ராஜ குடும்பத்தைக் குறிக்கும் ஜாடையாக இருப்பதாக சந்தேகப்பட்டார்களாம்.

'பிலிஸ்டைன்ஸ்' நாடகத்தின் ஒத்திகையின் போது கூட அங்கே ஏராளமான ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர் காவல் புரிந்தனர். அநேக நாட்கள் வரை அக் காவல் நடந்து வந்தது.

அவ்விரு நாடகங்களும் சரி. அதில் பேசப்படும் வசனங்கள் பாமர மக்களின் உள்ளத்தில் ஓர் தீவிர புதிய எழுச்சியினை உண்டு பண்ணக் கூடியதாயிருந்தது. 'சென்ஸார்' நாடகங்களின் வசனங்களைக் கூட பல இடங்களில் பேசக் கூடாதென கட்டளையிட்டனர்.

இரண்டாவது நாடகத்தில் சாத்தின் ஓரிடத்தில் சொல்கிறான் "......அங்கே உங்கள் அடிமைகளின் மதமும், அடித்து வேலை வாங்கும் ஆண்டைமார்களும் இருக்கின்றனர்"

என. இந்த வாசகத்தைக் கூட 'சென்ஸார்' பேசக் கூடாதென சொல்லி நீக்கி விட்டனர்.

மறைந்து கிடக்கும் பொய்யை ஒவ்வொன்றிலிருந்தும் கிண்டிக் கிளறி எடுத்துச் சொல்கிறான். சமுதாய சூழல்களை அக்கிரமமாய் அதிகாரத்தினால் அடக்கப்பட்டு நசுங்கி மடிந்து வரும் மக்களின் பரிதாப காட்சிகளை எடுத்து விளக்குகின்றான்.

இந் நாடகத்திலே - பார்த்த மக்கள் மனமிழந்து போய், போகும் போது ஓர் புதிய ஆதர்சயத்தை உடன் கொண்டு சென்றனர்.

இந் நாடகம் ரஷ்யாவில் மட்டுமல்ல. ஐரோப்பா கண்டம் எங்கனும் நடத்தப்பட்டது. கார்க்கியின் அனுமதியின் பேரில் ஜெர்மனியிலும் நடத்தினார்கள். இவ் ஒரே நாடகம் ஜெர்மனியில் மட்டும் 4 வருடங்கள் நடந்தது. பெர்லின் நகரில் மட்டும் 500 தினங்கள் சேர்ந்தாற்போல் நடத்தப்பட்டது.

17 புரட்சித் தீ.

1905ம் ஆண்டு வந்தது. 'இரத்த ஞாயிற்'றென்று ரஷ்ய சரித்திரத்தில் பொறிக்கப் பட்ட அந்த ப் புரட்சி சரிதத்தின் முதலாம் அத்தியாயம் விரிக்கப் பட்டது. அது ஜனவரி ஒன்பதாம் நாள். செயிண்ட் - பீட்டர்ஸ்பர்க் நகரத்தின் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் சுமார் இரண்டு லக்ஷம் மக்கள் ஜார் அரண்மனையை நோக்கி ஊர் வலமாகச் சென்றனர். அவர்களது குறைகளை நிவர்த்திக்க வேண்டி அக் கொடுங்கோல் மன்னனுக்கு ஓர் மனுக் கொண்டு சென்றனர். அதிலே:—

> "செயிண்ட். பீட்டர்ஸ் பர்க் நகர தொழிலாளர்களாகிய நாங்கள் எங்கள் மனைவியர்களுடனும், குழந்தைகளுடனும், ஆதாவற்ற எங்கள் பெற்றோர்களுடனும் தங்கள் சமூகத்திற்கு - தங்கள் அரசாட்சியிலிருந்து உண்மையையும், ஆதரவையும் நாடி வந்துள்ளோம்.
>
> மன்னனே! இனி அரைக்கணமும் எங்களால் பொறுக்க முடியாது. எங்கள் பொறுமை கடந்து போய்விட்டது. இத்தகைய சகிக்க முடியாத துன்பங்களை அனுபவிப்பதை விட இறப்பதென்ற பயங்கர நிலைமைக்கு ஆளாகிவிட்டோம்........"

என்றவர்கள் நெஞ்சத்திலே அடக்க முடியாத கொடுந்துயர்களை எடுத்து மனுவில் கண்டெழுதி அதை ஜாரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் எதாகிலும் நிலைமை மாறுமென்றெண்ணினார்கள்.

அந்தோ! மதியீனர்கள். அரசாங்கம் அவர்கள் ஊர்வலமாய் வரும் அக்காட்சியை முன் கூட்டியே அறிந்து விட்டது. ஜார் மன்னனும் அதை அறிவான்.

கொடிய துன்பங்களுக்காளான அந்த தொழிலாளர் கட்கு அரச சபை நீதி வழங்கிற்று.

ஜார் இனத்தைச் சேர்ந்த ¶ விலாடிமிர் என்பவன் நீதி சொன்னான்: 'இந்த மக்களின் இரத்தம் தான் ராஜ வம்சத்தைக் காப்பாற்றும்' என.

அன்று கார்க்கியும் தொழிலாளர்களுடனேயே அந்த தெருவுகளில் நின்று கொண்டிருந்தான். நிரபராதிகளான அம் மக்களை சுட கொடுங்கோலாட்சி உத்திரவளித்தது. அந்த சமிக்ஞையை அவன் காதால் கேட்டான்!

கொடுமை! கொடுமை! ஐயோ, பரிதாபத்திற் குரிய காட்சி!!

துப்பாக்கிகளின் வெடி சத்தங்கள் வானைப் பிளந்தன. அனல் வாய்ப் பட்ட புழுக்கள் போல் துடித்தனர் மக்கள். மனுக் கொண்டு சென்ற கைகள் ஆயுதந் தாங்கின. புரட்சித் தீ குமுறி எழுந்தது. தொழிலாளர்கள் எதிர்த்துப் போராட லாயினர்.

கொடுங்கோல் மன்னன் உத்திரவிட்டான். "தளபதியே! சுடு. உன்னால் முடிந்த வரை சுட்டுக்கொல்."

குண்டு மாரி பொழியலாயின. துப்பாக்கிக் குண்டு கள் அவர்களை எமனுலகிற்கனுப்பிக் கொண்டிருந்தது. பல நூற்றுக்கணக்கான மக்கள் வதைக்கப்பட்டு பலியிடப்

¶ The Grand Duke Vladimir.

பட்டார்கள். இரத்தத்திலே பிணங்கள் தோய்ந்து கிடந்தன. ரஷ்ய சரித்திரத்திலே இரத்தக் கறை படிய வைத்த - அன்று ஞாயிறு. நகரமே செவ்வலாம் தோன்றியதாம்.

இக் கொடுமைகளை சகிக்க மாட்டாதவனுய் கார்க்கி துடி துடிக்கும் கரத்திலே பேனுவை ஏந்தினுன், 'ஓர் விண்ணப்பம். எல்லா ரஷ்ய பிரஜைகளுக்கும், ஐரோப்பிய தேசங்களின் பகிரங்க அபிப்பிராயங்களுக்கும்' என ஒன்றை. எழுதினுன்.

அதிலே, அன்று மாலை பீட்டர்ஸ்பர்க் நகரத்தின் தெருக்களிலே நடந்த அந்த அக்ரம பகிரங்க கொலைகளைப் பற்றியும், அதற்கு ஜார் மன்னன் தான் காரண புருஷன் என்பதையும் எடுத்து விளக்கினுன்.

அதோடும் நிற்கவில்லை. அக் கொடுங்கோலாட்சியை தகர்த்தெறிய ஓர் போராட்டத்தை நடத்துவதென்று மக்களை போராட்டத்திற் கழைக்கலானுன்.

ஆனுல் அவன் எழுதிய அந்த விண்ணப்பத்தின் அசல் பிரதி எப்படியோ போலீஸாருக்கு கிடைத்து விட்டது. போலீஸாருக்கு கார்க்கின் கையெழுத்து நன்கு தெரியும் அந்த ஜனவரி 9ம் தேதிய நிகழ்ச்சிகளுக்குப் பின், இரு தினம் கழித்து, கார்க்கியை கைது செய்து சிறையிலடைத்தார்கள்.

அச் சிறை வாசத்தை மேற்கொண்ட போதிலும், கார்க்கி தான் ஏதாகிலும் எழுத வேண்டுமென்று அதிகாரிகளிடம் விண்ணப்பித்தான். அவனது பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் - கடைசியாக இலக்கியத் துறையில் எழுதுவதற்கு மட்டும் அனுமதி ஈந்தனர்.

கார்க்கி அங்கு தான் "சூர்ய புத்ரர்கள்" என்ற ஒப்புயர்வற்ற நாடகத்தை எழுதினன். அதில் அந்த ஒன்பதாந் தேதிய சம்பவத்தின் சாயல்களை வர்ணந் தீட்டி யிருக்கின்றான். கதா பாத்திரத்தின் வாயிலாக அதைச் சொல்லும் பொழுது:

> "கஷ்டத்தையோ, துயரத்தையோ ஏதாகிலும் நான் எப்பொழுது பார்த்தாலும், சிகப்பாக நான் எப்பொழுதாகிலும் ஏதாகிலும் பார்த்தாலும், உடனே மீண்டும் ஒரு பெரும் பயம் என் ஆத்மாவிலே நிரம்பி என்னை அணுவணுவாய் பிய்த்துத் தின்கின்றது. என் கண்களின் முன் அவ்விரக்க மற்ற கூட்டமும், இரத்தம் தோய்ந்த முகங்களும், மண்ணில் ஓடிய இரத்தமும் இவை யாவும் தோன்றி காட்சியளிக்கின்றது."

சிறையிலும் கார்க்கி தன் உற்சாகத்தை இழந்து விடவில்லை. மன தைரியத்துடன் தான் அங்கே இருந்தான். சமயங்களில் அவனுக்கு சிரிப்பு வந்து விடும். அதை அடக்க மாட்டாதவனாய் வாய் திறந்து கல கல வென்று நன்றாய் சிரித்து விடுவான். இது கூட ஜெயில் வார்டன்களுக்கு பொறுப்பதில்லை. உடனே மேலதிகாரியை கூப்பிட்டு 'இக் கைதி அடிக்கடி சத்தமிட்டு ஓங்கிச் சிரிக்கின்றான்' என புகார் செய்வான்கள்.

கார்க்கியின் இச் சிறைவாசம் வெகு சீக்கிரத்தில் ஐரோப்பா கண்டம் பூராவும், அதற்கு அப்பாலுங்கூட பரவிப் போய்விட்டது. இதற்கு பல வருடங்களுக்கு முன்னால், நிழனி-நோவ்கோரட் சிறையில் அடைக்கப்பட்ட பொழுது-ரஷ்யா தேசம் மட்டுமே அவன் விடுதலையைக் கோரியது. இப்பொழுது எல்லா தேசத்தினரும் அந்த எழுத்தாளனுக்காக பரிந்து அவனை விடுவிக்க முன் வந்தார்கள்,

பீட்டர்ஸ்பர்க் நகரம் முதல் ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், போர்ட்சுகல், ஆகிய எல்லா நாடுகளிலிருந்தும் கண்டனத் தீர்மானங்கள் ஜாரிடம் வந்து குவிந்தன.

பாரிஸ் மா நகரில் ஒரு பொதுக்கூட்டங் கூட்டி அதில் ஏகமனதாக கார்க்கியை விடுதலை செய்ய வேண்டு மென்று வற்புறுத்தி ரஷ்ய அரசாங்கத் தாருக்கு கோரிக்கை செய்தனர் பிரான்சு தேச மக்கள். அப் பொழுது கூட்டத்தில் பேசிய ¶ அனதோல் பிரான்ஸ் என்பவர் 'கார்க்கி ரஷ்யாவுக்கு மட்டும் சொந்தமல்ல அகில உலகத்திற்கும்' என்பதாகச் சொன்னார்.

இன்னும் உலகின் பல பாகங்களிலுள்ள உலகப் பிரபல கலாவிற்பன்னர்கள் † கிளாட் மோனேட், ‡ ஆகஸ்டி ரோடின் § ஜென்ஜாரேஸ், $ பியரிகியூரி, உள்பட எல்லா பிர முகர்களும், எல்லா தேச மக்களும், ரஷ்ய அரசாங்கத்தைக் கண்டித்து, கார்க்கியை விடுதலை செய்யுமாறு வற்புறுத்தினர்.

உலகந்திரண்ட ஓர் எதிர்ப்பைக் கண்டஞ்சிய ஜார் அரசாங்கம் கார்க்கியை விடுதலை செய்வித்தது.

¶ Anatole France. (Jacques Anatole Thibault 1844- 1924) Noble Prize Winner in Literature.

† Claude Monet — Landscape Painter.

§ Auguste Rodin — Sculptor.

‡ Jean Jaures — Socialist Leader.

$ Pierre - Curie — Physicist.

ஆனால் சிறையில் கார்க்கியை அடைத்து வைத்திருக்கக் கூடுமானால், உலக மக்களின் போக்கு ஒரு புறமிருக்க, அவன் அங்கேயே இறந்தொழிந்திருப்பான் என்பது திண்ணம். அந்த கற்கள் அவனை நாளடைவில் விழுங்கி வந்திருக்கும்.

வெளியே வந்து ஒரு மாத மாவதற்குள் கார்க்கிக்கு மீண்டும் உடல் நோய் கண்டது. வாயால் ரத்தம் கக்க ஆரம்பித்தான்.

அன்று நடந்த ரஷ்யப் போராட்டம் அந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஓர் சுதந்திர பிரதிக்கினை தினமாகவே ஆய்விட்டது. ஜனங்களின் மனதில் அச்சம்பவங்கள் வளர்ந்து அவர்களை மீண்டும் புரட்சிக்கு ஆளாக்கி விட்டது.

அந்த ஆண்டின் இறுதியிலே, அப்பொழுது கார்க்கி மாஸ்கோவில் இருந்தான். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினார்கள். அன்று முதலே அவ்வதிகாரத்தை ஒழித்துக்கட்ட கச்சை கட்டியிருந்தனர். நாளடைவில் புகைந்து வந்த சுதந்திராக்னி மீண்டும் ஜ்வாலை வீசத் தொடங்கியது.

கார்க்கி நிதி திரட்டி அப்புரட்சி வீரர்களுக்கு ஆயுதங்கள் அளித்து அவர்களுக்கு பல வகையிலும் உதவி புரியலானான்.

தொழிலாளர்கள் தங்கள் இரத்தத்தை அந்த போராட்டத்திலே, துப்பாக்கி முனையிலே ஈய்ந்து தங்கள்

சந்ததிக்கு உயிர் பலியிடலாயினர். அதிகாரவர்க்கம் அவர்களை பழிவாங்கியது. கோர நிர்த்தியம் ஆடி அக்கலவரம் அடக்கப் பட்டது. ஆனாலும் புரட்சித் தீ அவிந்து விட வில்லை.

கார்க்கி தொழிலாளர்களுக்கு ஓர் கடிதம் எழுதி அதனை 'டைப்' செய்து காப்பிகளை ரஷ்யா பூராவுக்கும் விநியோகித்தான். அதிலே அவன் எழுதியுள்ளான்:

> "பாட்டாளி மக்கள் கஷ்ட நஷ்டங்களை அடைந்த போதிலும் முறியடிக்கப்பட வில்லை. புரட்சி புத்தம் புதிய கருத்துக்களால் பலமடைந்து விட்டது. அதன் சக்தி மிகப் பிரமாண்டமானதாக வளர்ந்து விட்டது."
>
> "ரஷ்ய பாட்டாளி மக்கள் ஓர் முடிவான வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அது ஒன்று தான் யோக்யதையுடைய பலம் பொருந்திய கட்சி. அதன் தீர்ப்பிலே ரஷ்யா நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த உண்மையைத் தான் நான் சொல்கிறேன். இந்த உண்மையை எல்லா கௌரவமுள்ள பக்ஷபாதமற்ற சரித்திராசிரியர்களும் ஒப்புக் கொள்ளுவர்."

இக்கடிதத்தின் விளைவு கார்க்கியை கைது செய்ய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. இதனை அறிந்த கார்க்கியின் நண்பர்கள் அவனை எச்சரிக்கலாயினர்,

கார்க்கி உடனே ரஷ்யாவை விட்டு இரகசியமாய் வெளியேறலானான்.

18. லெனின் சந்திப்பும், வெளிநாட்டு : : சுற்றுப்பிரயாணமும்.

மாஸ்கோ கலவரத்தின் போது அதாவது 1905ம் ஆண்டில் கார்க்கி லெனினை முதன் முறையாகச் சந்தித்தான்.

பின் லண்டனில் 1907ல் நடந்த 'ரஷ்ய சோஷியல் டெமாக்ரடிக் கட்சி'யின் ஐந்தாம் காங்கிரஸ் (மகாநாடு) நடந்தது. அதற்கு அந்த ‡ போல்ஷ்விக் கட்சி தலைவரால் கார்க்கிக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அம் மகாநாட்டிற்கு 300 (வெளிநாட்டு பிரதிநிதிகள்) பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். அவர்கள் லக்ஷத்தி ஐம்பதினாயிரம் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாய் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே அனுப்பப்பட்டிருந்தனர்.

கார்க்கியை அங்கே கண்டதும் லெனின் முதன் முறையாக வந்து அவனை 'கைலாகு' கொடுத்து அன்புடன் வரவேற்றுப் பேசினார்.

"நீங்கள் வந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இங்கே ஓர் அழகான வாதம் நடக்கப் போகிறது. நீங்கள் பிரியப் படுவீர்களென்றே நம்புகிறேன்." என்றெல்லாம் அன்பு கனிந்த சொற்களால் அவனை மகிழச்செய்து-அங்கே அழைத்துக் கொண்டார்.

---

‡ Bolsheviks.

இது கார்க்கிக்கு மிகவும் வியப்பாக இருந்தது. இதை அவன் முற்றிலும் எதிர் பார்த்தவனல்ல. லெனினது அன்பும், சொற்திறனும், புன்னகையும், இன் சொல்லும், எளிய தோற்றமும்- அவன் இதயத்திலே அவன் என்றும் மறவாத ஓர் உருவத்தை சமைத்து விட்டது; அவர்களது நட்பை பிணைத்து விட்டது; இருவரும் தோழமை பூண்டனர்; ஒருயிரும் ஈருடலும் ஆயினர்.

மகாநாடு ஆரம்பமானது. கார்க்கி தூண் ஒன்றில் சாய்ந்தபடி அங்கே போல்ஷ்விக்குகளுக்கும், §மென்ஷ்விக்குகளுக்கும் நடந்த விவாதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியாக லெனின் எழுந்து பேச ஆரம்பித்தார். "........கடைசியாக விலாடிமிர் இலியச் எழுந்து பிரசங்க மேடைக்கு வந்து உற்சாகம் நிரம்பிய குரலில் 'தோழர்களே' என்றாரம்பித்தார். அவர் முதலில் பேசிய பொழுது அது எனக்கு அவ்வளவு சிலாக்கியமாகத் தோன்றவில்லை. ஒரு நிமிஷம் கழித்து எல்லோரையும் போன்று அவர் பிரசங்கத்திலே மயக்கமடைந்து விட்டேன். இத்தகைய பிரசங்கத்தைக் கேட்டது இது எனக்கு முதல் தடவையாகும். இதற்கு முன் இவ்வளவு தெளிவாகவும், நயமாகவும், விஷயங்களை எடுத்துத் தெளிவு படுத்திப் பேசிய யாரையும் நான் பார்த்ததே இல்லை. பொருள் செறிந்த வார்த்தைகளும், அழகுடைய தெளிந்த கம்பீர்யக் கருத்துக்களையும் கேட்டு ஆச்சரியமடைந்து விட்டேன்......" என்று லெனின் பிரசங்க வண்மையைப் புகழ்ந்து எழுதுகின்றான் அவனே.

ரஷ்யாவை விட்டு கிளம்பிய பின்னர் பிரான்ஸ்,

---

§ Mensheviks.

ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளெல்லாம் சுற்றிக் கொண்டு அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே நியூயார்க் நகரில் பல பொது கூட்டங்களில் ஜார் ஆட்சியின் கொடுமைகளை விவரித்துப் பேசி பல சொற் பொழிவுகள் நடத்தினான். இதைப் பற்றி அங்கிருந்த போதும் பல பத்திரிக்கைகளுக்கும் வியாசம் எழுதி வந்தான். பொதுக்கூட்டங்களிலும், மற்றும் போல்ஷ்விக் கட்சிக்கென நிதி திரட்டி போல்ஷ்விக் கட்சிக்கு அனுப்பிக் கொண்டிருந்தான்.

அமெரிக்காவில் தங்கியிருந்த சொற்ப காலத்தில் மட்டும் 10,000 டாலர் வரை அங்கே வசூலித்து ரஷ்ய போல்ஷ்விக் கட்சிக்கு அனுப்பினான்.

அங்கு தான் அமெரிக்காவில் இருந்த பொழுது அதிரான்டாக்ஸ் தோட்டத்தில் இருந்து கொண்டு ஒப்புயர் வற்ற தலை சிறந்த நவீனமாகிய "தாய்" என்பதை எழுதி முடித்தான். அதிலே சோர்மோவோ தொழிலாளர்களின் வாழ்க்கையை அடிப்படையாய் கொண்டுள்ளான்.

பவேல் விலாசோவும் அவன் தாய் நிலோவ்னாவும், இன்னும் புரட்சி இயக்க பற்றுள்ள பயோதர்ஸால்மோவும்.

பயோதர்ஸால்மோவ் ஓர் புரட்சிக்காரன்; தொழிலாளி. சோர்மோவோ தொழிலாளர்களின் மே தின கொண்டாட்ட ஊர்வலத்திலே கலந்து கொண்ட காரணத் திற்காக அவன் சிறைக்கு கடத்தப்பட்டான். அவன் தாய், அவளும் வீராங்கனை, புரட்சி இயக்கத்திலே தீவிர பங்

கொடுத்துக் கொண்டாள். பயோதரின் தாய் - சந்யாசினி போன்று மாறு வேடம் தரித்து புரட்சித் துண்டுப் பிரசுரங் களை நிழனி-நோவ்கோரட் பிரதேசம் பூராவும் பரப்பினாள்.

கார்க்கி அதிலே அவனறிந்த அநேகம் வீரத்தாய்மார் களை அவர்கள் வீரப்புதல்வர்களுடன் அத் தாயின் மூலம் உலகிற்களித்திருக்கின்றான்.

அவள் - புரட்சி வீரர்களின் தாய். உபா சிறையி லிருந்த பொழுது அவள் தன் வீரப் புதல்வர்கட்கு வெடி குண்டுகளை அனுப்பி அவர்களை வெளியே கொண்டு வர தன்னால் இயன்ற வரை பாடுபட்டாள். அவளைத் தான் கார்க்கி ஓர் வீர அன்னையாக உலகிலே முடி சூட்டி இலக்கிய பீடத்திலே அவளை சிரஞ்சீவியாய் வாழ வைத்திருக்கின்றான்.

இத்தகைய ஓர் உயர்ந்த நூலை எழுதி வெயிடுவது சார்க்காருக்கு பொறுக்குமா? எனவே தான்:

ஜார் ஆட்சி அந் நாவலில் பொதிந்துள்ள புரட்சிக் கருத்துக்களை களைய நினைத்தது. 'தாய்' முதல் பாகம் வெளியிடப்பட்டது. ஆனால் பறிமுதல் செய்யப்பட்டது. இரண்டாம் பாகத்தை 'சென்ஸார்' சின்னபின்னப் படுத்தி விட்டார்கள். பாக்கி அத்தியாயங்களிலும் ஏராளமாய் வாசகங்கள் தவிர்க்கப் பட்டன.

பின் இத்தாலிக்கு வந்தான். சர்க்கார் அவன் பேரில் ஏராளமான நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு காத்திருந்தது.

செயிண்ட். பீட்டர்ஸ் பர்க் நகர பரிபாலன சபை கீழ்க்கண்ட ஓர் அறிக்கையை விளம்பரப் படுத்தி யிருந்தது.

நிழனி-நோவ்கோரட்டைச் சேர்ந்த கலைஞன் அலெக்ஸி மாக்ஸிமோவிச் பெஷ்கோவுக்காக போலீஸார் பீட்டர்ஸ்பர்க் ஜில்லா கோர்ட்டார் பிறப்பித்த ஓர் ‘வாரண்டை’ வைத்துக் கொண்டு தேடி அலைகின்றனர்.

ஆனல் நல்ல வேளையாக கார்க்கி ‘வாரண்டு’ வருவதற்கு முன்னே அவிடத்தை விட்டு வெளியேறிவிட்டான். இந்த புரட்சி நடவடிக்கைகளின் காரணமாக அவனுக்கு ரஷ்யாவுக்கு திரும்பிப் போக வேண்டுமென்ற எண்ணமே இல்லாதிருந்தது. எனவே அங்கு இத்தாலியில் ‡ காப்ரித் தீவிலே தங்கி வசிக்கலானன்.

இங்கே காப்ரித் தீவில் தங்கியிருந்த பொழுது கார்க்கியின் நண்பர்கள் பலரும் வந்து போவார்கள். லெனினும் இங்கே வந்து சேர்ந்தார். இவ் விருவர்களும் அங்கே வெகு தமாஷாகப் பொழுதைக் கழிப்பார்கள். சொக்கட்டான் ஆடுவார்கள்; மீன் பிடிப்பார்கள்; மலையடிவாரங்கட்குச் சென்று அங்குள்ள ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்து பார்ப்பார்கள்.

பின் 1913லே அரசாங்கம் விடுதலை உத்திரவு பிறப்பித்தது. லெனின் கார்க்கியை ரஷ்யாவுக்கு திரும்ப வரவழைத்தார்.

காப்ரியிலிருந்து சென்ற கார்க்கி பீட்டர்ஸ் பர்க் நகரில் தங்கி வசிக்கலானன்.

மறு வருடம் உலக மகா யுத்தம் மூண்டது. கார்க்கி

‡ Island of CAPRI.

அப்பொழுது §"லெடோபிஸ்" என்ற பத்திரிகையினை நடத்திக் கொண்டிருந்தான். யுத்தம் தொடங்கவே உடனே வீறு கொண்டெழுந்து லெனினுடன் சேர்ந்து ஏகாதிபத்யத்தை எதிர்த்து போராடினார்கள்.

கார்க்கி நடத்திய அந்த பத்திரிக்கையில் தான் முதன் முதலாக ரஷ்யக்கவிஞன் ¶மாயாகோவ்ஸ்க்கியின் "யுத்தமும்-சமாதானமும்" என்ற கவிதை வெளிவந்தது.

நாளடைவில் புரட்சித் தீ பரவிக் கொண்டே வந்தது. 1917 பிப்ரவரியிலே உலகம் கண்டிராத ஓர் மகத்தான புரட்சியை ரஷ்ய போல்ஷ்விக்குகள் நடத்தி வைத்தனர். ஜார் ஆட்சி தகர்த்தெறியப் பட்டது. இரண்டாம் நிக்கோலாஸ் ஜார் மன்னன் தன் அதிகாரத்தை துறந்து கையொப்பமிட்டோடினான். முடியாட்சி மறைந்தொழிந்தது. சுதந்திர சூர்யன் கிரணங்களை அள்ளிக் கொட்டி புது உலகைச் சிறப்பிக்கலானான். ரஷ்யா புதுயுகம் சிருஷ்டித்து வையகத்திற்கு வாழும் வழி காட்டியது.

---

§ Letopis (Annals.)
"War and Peace" By ¶ Mayakovsky.

19 அஸ்தமன வாழ்க்கை.

கார்க்கியின் இறுதிக்காலமும் கஷ்டத்தை அளித்தது. இளமையில் அடைந்த வறுமையும், துன்பமும் முதுமையில் பிணியின் கையிலே ஒப்படைத்தது.

1921ல் மீண்டும் க்ஷயரோகத்தால் ரொம்ப உபாதைப் பட்டான். டாக்டர்களும், அவனது நெருங்கிய நண்பர்களும் இத்தாலியில் போய் கொஞ்சகாலம் தங்கி இருக்கும்படி யோசனை கூறலாயினர். லெனினும் இதற்கு முன்கூட்டியே கார்க்கியை உடல் சிகிச்சை பெறுமாறு வற்புறுத்தி வந்தார். ஆனால் தன் உடல் நிலைமையை பிரதானமாக கருதவில்லை கார்க்கி. அல்லும் பகலும் எழுதிக்குவித்துக்கொண்டே இருக்கலானான்.

எவ்வளவு சொல்லியும் கேளாதபோது லெனின் இதற்காக சற்றும் மனவருத்தம் கொள்ளவில்லை. மீண்டும் கார்க்கிக்கு கடிதம்மூலம் சொல்லலானார். அவர் 9–8–21ல் எழுதிய கடிதம் ஒன்றில்:

அன்புள்ள அலெக்ஸிமாக்ஸிமோவிச்!,

"நான் தங்கள் கடிதத்தை எல். பி. கமனேவுக்கு அனுப்பி விட்டேன். நான் ஓர் சின்ன வேலையும் செய்யசக்தியற்றமுறையில் தளர்வடைந்திருக்கிறேன். தாங்களும் இரத்தம் கக்குகின்றீர்களாம் இருந்தும் எங்கும் செல்லவில்லை. அது உண்மையில் ஆலோசித்துப்பாராத விஷயம்தான். ஐரோப்பாவில் நல்ல சிகிச்சை சாலைகள் இருக்கின்றன நீங்கள்

அங்கு சென்று நல்ல குணமடையலாம். தாங்கள் எதுவும் பிரயோஜனகரமாக செய்ய இயலும். உண்மையில், உண்மையில் சொல்கிறேன். இங்கே உங்களுக்கு சௌகரியமாவப்போவதுமில்லை, உங்களால் ஒன்றும் செய்வதற்கும் முடியாது. இங்கே தொல்லையடைவதைத்தவிர வேறொன்று மில்லை. தாங்கள் போய் உடம்பை கவனித்து வாருங்கள். பிடிவாதமாயிருக்கவேண்டாமென்று உங்களை மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்.''

தங்கள்,
லெனின்.

கார்க்கி இத்தகைய வற்புறுத்தல்களுக்கிணங்கி இத்தாலிக்குச் சென்று அங்கே சொரென்டோவில் தங்கி வசிக்கலானான்.

7 வருடம் இங்கே இருந்து விட்டு பின் 1928ல் ரஷ்யாவுக்குத் திரும்பினான். அப்பொழுது ரஷ்யா கார்க்கியின் "அறுபதாம் ஆண்டு நிறைவு'' விழாவை மிக்க குதூகலத்துடன் கொண்டாடிக் கொண்டிருந்த சமயம். அவனுக்கு மகத்தான வரவேற்பளித்து அன்புடன் வரவேற்றது.

1932ல் சோவியத் யூனியன் கார்க்கியின் இலக்கியத் தொண்டிற்காக அவன் 40 வருடகாலம் சோவியத்தின் கலை வளர்ச்சிக்கு பாடுபட்ட அப்புனித கைங்கர்யத்தையொட்டி "நாற்பதாம் ஆண்டுவிழா'' கொண்டாடிற்று. அதையொட்டி அவனுக்கு அளித்த வாழ்த்துரையில் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி. "மாக்ஸிம் கார்க்கியின் பெயர் சோவியத் நாட்டின் தொழிலாளர்களுக்கும், மற்றும்

உலகத் தொழிலாளர் களுக்கும், ஜார் ஆதிக்கத்தை ஒழிக்கப் போராடிய வீரனின் பெயராகவும் உலக மக்களின் மதிப்பிற் குரிய பெயராகவும் இருக்கிறது என குறிப்பிடுகிறது.

ரஷ்ய எழுத்தாளர்கள் சங்கத்தை நிறுவினான். அதற்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பை மேற்கொண்டான். "நவஜீவன்" (New Life) என்ற உயரிய பத்திரிக்கையை நடத்தினான். இன்னும் பல ஒப்புயர்வற்ற நூல்களை எழுதினான்.

அவனது அந்திய காலத்தில் எழுதிய வியாசங்களும், நூல்களும் தலை சிறந்து விளங்குகின்றன. அவற்றுள் எல்லா பேரறிஞர்களும் வியந்து போற்றிய "யேகர்-பலுச்சோவ்" என்ற நாடகமும், ருஷ்யப் புரட்சி சரிதமும் (The History of civil war.) முக்கியமாகக் குறிப்பிடத் தக்கன.

1936 ஜுனில் மீண்டும் திடீரென உடல் நோய் கண்டது. படுக்கையில் கிடந்தான். சாவு அவன் படுக்கை அருகில் காத்து நின்றது.

மிகச் சிரமத்துடன் சுவாசித்தான். சுவாசிக்கும் இடையிடையே சோவியத்தின் அரசியலைப்பற்றி கேட்பான். விவாதிப்பான்; தன் யோசனையைச் சொல்லுவான்.

ஸ்டாலின் அவனருகில் இருந்தார்.

18-ம் நாள். கார்க்கிக்கு பிரக்ஞை தவறியது. அன்று மறு நாள் காலை. அந்த மகா மனிதன் தன் உயிரை சாவினிடம் ஒப்படைத்து விட்டான்.

சாவு அவனைக் கௌவிக் கொண்டதென்றார்கள். இல்லை. ‡ டிராஸ்க்கி சதிக் கூட்டம் அவன் உயிரை பறித்து விட்டனர். அக்கொலை பாதகர்களால் விஷம் கொடுத்து கொல்லப்பட்டான். பாவ்லாவிற்கும் ஒப்பான ஓர் மேதையை சாவு ஆட்கொண்டு விட்டது.

கார்க்கி பிறந்த தேசம், அவன் அமிர்தகலை வளர்த்த தேசம், அவன் பிரிவிற்காக அவர்கள் வருந்தி கண்ணீர் விட்டனர்.

அன்று அவர்களின் கடைசிதினம். பல லட்சக் கணக்கான மக்கள் தங்கள் அநுதாபத்தையும், மரியாதையையும் தெரிவிக்கும் முறையில் சவஊர்வலத்தைத் தொடர்ந்து சென்றனர். சர்க்காரால் சவச் சடங்குகள் நடத்தப்பட்டன.

அதோடு ரஷ்யக் கலையரங்கின் புகழ்பெற்ற பொன்னேடு திருப்பப்பட்டது.

20 அதிமானுஷ்யன்.

"நான் வாழ்க்கையில் துன்பம் என்ற பள்ளிக் கூடத்தில் நண்பர்களின் அவசியத்தை அறிந்தேன் வாழ்க்கை எனக்கு தோல்வியின் மூலமாக பல உண்மைகளை உணர்த்தியது. என் வாழ்க்கை தோல்வியின் மைல்கற்கள் வெற்றி கடினமான உழைப்பின் வழியே,"

— ரிச்சர்ட் பெட்போர்ட் பென்னெட்.

கோல்ட்ஸ்மித் சொல்கிறபடி 'அவன் அமரகுலம். கர்த்தனின் பரம்பரை.' ஜாபின் உபதேசத்திற்கிணங்க வாழ்ந்தவன். 'தீப்பொறிகளைப்போன்று, கஷ்டங்களிடையே பிறந்து மேல்நோக்கிச் சென்றவன்.

தொல் வறுமை, நீராப்பிணி, துரதிர்ஷ்டம் இவைகளே கார்க்கியின் சரிதத்தை சிருஷ்டிக்கின்றது.

4 வயதில் அவன் தந்தை இறந்துவிட்டான். அவனது 10 வயதிற்குள் தாயும் இறந்துவிட்டாள். அனாதையானான். அச்சிறுவயதிலேயே அவன் வயிற்றிற்கு அவனே தேடவேண்டியதாயிற்று.

ஒன்பதாம் வயதில் வேலை தேடி கிளம்பினான். வாழ்க்கைப் புயல் அவனை விரட்டிச்சென்றது.

அவன் நாடோடி வாழ்விலே பசியினால் ரொம்பவும் தகர்க்கப் பட்டிருக்கின்றான்; குளிரினால் ரொம்பவும் வாட்டப்பட்டிருக்கின்றான். ஒரு சமயம், வேலை ஒன்றும்

கிடைக்கவில்லை. வயிற்றுப்பசியும் அதிகமாயிருந்தது. கிராமம் ஒன்றில் அவன் போய்க்கொண்டிருந்தபொழுது ஒரு பிரேத பிரார்த்தனை செய்ய ஒப்புக்கொண்டான். அன்று இரவு பூராவும் சவத்தினிடமிருந்து பிரார்த்தனைகளைப் படித்தான். மறுநாள்காலை, சவச்சடங்குகள் புரிந்தான். அவனுக்கு கூலி கொடுக்க வந்தார்கள். ஆனால் அதை மறுத்துவிட்டு வயிறு நிறைய நன்கு சாப்பிட்டுவிட்டு வந்தான்.

அந்தச்சம்பவம் பின்னிட்டு அவன் வாழ்விலே ஓர் அற்புதமாயிருந்தது. அத்தகைய கோரப்பசியுடனேயே அதிகமான நாள்களை போக்கியிருக்கின்றான்.

4 வயதில் காலரா கண்டது. 8 வயதில் சின்னம்மை கண்டது. வேலைபார்த்த அநேகம் இடங்களில் அடிவாங்கி காயமடைந்திருக்கின்றான். காண்டிபோவ்கா கிராமவாசிகள் பெரிதும் அவன் உயிரை அங்கேயே போக்கிவிட்டார்கள்.

கப்பலொன்றில் வேலை பார்த்துக்கொண்டிருந்த பொழுது ஒரு சமயம் பிடி தவறி விழுந்து பலத்தகாயமடைந்துவிட்டான்.

ஆனால் இயற்கையன்னை அவனைத் தழுவிக்கொண்டுவிட்டாள்; அவளது ஆயிரங் கரங்களால் அவனை அணைத்து எடுத்துக்கொண்டாள்.

வாழ்வின் சோகப்படுகுழியில் வீழ்ந்தவன். சோக கீதங்களால் இயற்கையை ஆராதித்தான்.

கலாசாலையின் வாசற்படியை மிதியாதவன்.

இயற்கை அன்னை அவனுக்கு கல்வியமுதை ஊட்டினுள். ஷேக்ஸ்பியரையும், பிராங்க்ளினையும், வாஷிங்டனையும், பேகனையும், நியூட்டனையும், ஷாவையும் பேணி வளர்த்த கலைத் தெய்வம் கார்க்கியையும் அவள் மடியிலே தவழச்செய்தது.

பள்ளியில் சேர்ந்து மூன்று வகுப்புகள் வரையே படித்தான். அந்த பரீட்சையில் தேறியபோது அவனுக்கு ஓர் 'பைபிள்' புத்தகமும், ரைலோவின் கதை புத்தகம் ஒன்றும் சன்மானமாக கொடுத்தார்கள். பின் ஒரு சமயம் அவன் பாட்டி நோயினுல் அவஸ்தைப் பட்டாள். ஓர் காசுக்கும் வழியற்றுப் போனது. கார்க்கி தன் புத்தகங்களை கடை ஒன்றில் 50 காசுக்கு விற்றுவிட்டான். வாழ்க்கை அத்தகைய வறுமையை வழங்கிற்றவனுக்கு.

என்றுலும் அவன் தானுகவே படித்துக் கொண்டான். தன் கல்வியைப்பற்றி அவனே சொல்கின்ருன்:

"நான் என் வாழ்காலம் பூராவும் கற்றுக் கொண்டே வந்திருக்கின்றேன். இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன். ஷேக்ஸ்பியர் முதல் செர்வான்டீஸ் வரை, ஆகஸ்ட் பேபல் முதல் பிஸ்மார்க் வரை, லியோடால்ஸ்டாய் முதல் விலாடிமிர் லெனின் வரை, ஃபுளுபெர்ட் முதல் டார்வின் வரை, ஸ்டென்ஹெறல் முதல் ஹெறக்கேல் வரை, ஸோபென்ஹெறயூர் முதல் மெச்சின்கோ வரை. கற்றிருக்கின்றேன். பைபிளையும், மார்க்ஸையும் படித்திருக்கின்றேன். இன்னும் மத குருமார்களிடமிருந்தும், என் நேர்மையான அரை நூற்ருண்டு வாழ்விலே கண்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களிடமிருந்தும், நாடோடிகளிடமிருந்தும் பல விஷயங்களை கற்றறிந்திருக்கின்றேன்." என.

ஆனால் தற்பெருமையற்ற சுபாவம். அகந்தையற்ற கல்வி. அகண்டாகாரமான உலக இலக்கியங்களை தன்னுள் கொண்டான்.

எமர்ஸனது மொழிப்படி 'வாழ்வின் உண்மைகளை உயர்ந்த நிலையினின்று சிந்தித்து' அதனை உலகிற்கு வழங்கினான். உலகம் அவனை அதனாசில் வைத்துக் கொண்டது.

இதைத் தான் இறுமாப்புடன் எழுத்தாளனைப் பற்றிய பெருமையை தன் நாவல் ஒன்றில் போற்றுகின்றான். 'நான் உண்மையுடன் கலை பீடத்தை ஆராதிப்பவன்' என்று.

சாக்ரட்டீஸ் போன்று, தன் மனதில் பட்ட உண்மைகளை பகிரங்கமாய் பறை சாற்றினான். பேனு வண்மை படைத்தவன். புரட்சியாளன். புலமையுடையோன்.

உலக அனுபவங்களைத் திரட்டி தன் ஞானச் சுரங்கத்தில் வைத்துக் கொண்டான். முதிர்ந்த அறிவு, தெளிந்த ஞானம், மாசற்ற இலக்கியப் பற்று. தன்னம்பிக்கையுடையோன். விரட்டியடித்த அவ்வாழ்வின் எதிர் நின்று போராடி வெற்றி பெற்றான்.

கார்க்கியின் குணங்கள் மிகவும் போற்றத் தக்கவை. 10 வயது முதற்கொண்டு 'டயரி' எழுதும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றான்.

ஒரு சமயம். காஸானில் இருந்தபொழுது ஒரு பிரசங்கத்திற்கு சென்றிருந்தான். ஷேச்ஸ்பியரின் நாடகங்களைப் பற்றி சொற்பொழிவு நடந்தது. பிரசங்க வித்வான் இனிய

குரலில் ஷேக்ஸ்பியரின் உன்னத இலக்கிய பாணியைப் பற்றி வெகுவாய் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

கார்க்கியும் ஆவலோடு அப் பிரசங்கத்தைக் கேட்டான். ஆனால் இலக்கிய ரஸனையைப் பற்றி அவர் ‘இலக்கியம் மனதிற்குச் சாந்தி யளிக்கின்றதென’ கூறிய பொழுது கார்க்கி அதனை ஒத்துக் கொள்ளவில்லை. உடனே தன் நோட்டில் ‘சுத்தப் பொய்’ என குறித்துக் கொண்டான். அது அவனுக்குத் தெரியும்; இலக்கியத்தின் நோக்கம் மிகச்-சிரேஷ்டமானது. அது மனதிற்கு மட்டும் சாந்தி யளிப்பதல்ல; ஆத்ம எழுச்சியையும் உண்டாக்க வல்லது என்றெல்லாம்.

பின் அவன் எழுத்தாளனாக வந்த பிறகு அவனது கதாபாத்திரம் ஒன்றின் வாயிலாக அதைப்பற்றிச் சொல்கிறான்.

இளமையிலிருந்தே நல்ல ஞாபக சக்தி. அவனது அற்புத ஞாபக சக்தியை எண்ணி அவனை அனைவரும் பாராட்டுகின்றனர். அவன் பாட்டனார்கூட அவனை சிறு வயதில் ‘யானையைப் போல் ஞாபகம் உள்ளவன்’ என்று அடிக்கடி கூறுவானாம்.

ஒரு சமயம், கார்க்கி அவனது நண்பன் ஒருவனது கையில் ஆஸ்திரேலிய படம் ஒன்றைப் பார்த்தான். அதை உடனே கையில் வாங்கி நன்றாக கவனித்தானாம். அவ்வளவு தான். அது முதல் அந்த ஆஸ்திரேலிய படம் அவன் மனதில் அமைந்துவிட்டது. அதில் உள்ள மலைகள், நதிகள், நகரங்கள், அதன் எல்லைகள் எல்லாவற்றையும் சித்தரித்து விட்டான்.

அவன் நாடோடி வாழ்வில் கண்ட சம்பவங்கள் ஒவ்வொன்றையும் அவன் மறந்துவிடவில்லை.

துன்பத்திலும், வறுமையிலும், பிணியிலும், கார்க்கி யின் வாழ்க்கை உழன்று சென்ற போதிலும் அவனது இடை யுறாத ஹாஸ்யம் அவன் வாழ்வின் இன்ப நிலையை உணர்த்தியது.

ஒரு சமயம், ஓர் மாது. கார்க்கியின் எழுத்துக் களில் மனமிழந்து அவனிடம் பக்தி கொண்டவள். கார்க்கிக்கு விருந்து நடத்தினாள். மேஜையின் மேல் ஏராளமான வித வித பண்டங்கள் பரிமாறப்பட்டிருந்தன. அம்மாது கார்க்கியை நிறைய இஷ்டப்பட்டதை யெல்லாம் சாப்பிடும் படி வற்புறுத்தினாள். கார்க்கிக்கு என்னமோ, வயிறுதான் கொள்ளவில்லையோ, அல்லது மனதிருப்திதான் இல்லையோ. ஒரு பஜ்ஜியை எடுத்து கடித்தானும். அதை வெளியே துப்புவதா உள்ளே விழுங்குவா என்ற பிரச்சனை உண்டாகி விட்டது. அந்த அம்மாளின் வற்புறுத்தலுக்கு பயந்து மெல்ல விழுங்கி விட்டான். மறுபடியும் அந்த அம்மாள் இன்னொரு பஜ்ஜியை கொண்டு வந்து வைக்க வந்தாளாம். கார்க்கி வயிறு குலுங்க சிரித்து விட்டு அந்த அம்மாளுக்கு வந்தனம் செய்து 'எனக்கு வயிறு பசிக்கவில்லை, போதும் அதை நான் வீணாக்க விரும்பவில்லை' என்றானும்.

கார்க்கி அவன் நண்பர்களிடத்தில் சொல்லும் குட்டிக் கதைகள், அனுபவத்தில் கண்ட நிஜசம்பவங்கள் ரொம்ப ஆச்சர்யமாக இருக்கும். உதாரணமாக, ஒரு சமயம். லெனினும் கார்க்கியும் தங்கியிருந்தபோது கார்க்கி இந்தக் கதையை லெனினிடம் சொன்னானும். 1919ல் பீட்டர்ஸ்

பர்க் நகரத்தில் சமையல் கட்டில் இது நடந்ததாம். ஒரு அம்மா வந்து "என் நாய்களுக்கு ஒரு எலும்பு கொடுங்கள்" என கேட்டுவிட்டு மேலும் அவள் தன்னைப்பற்றி சொன்னளாம். தான் ராஜகுமாரி என்று. அவள் உயிர்விட தீர்மானித்தபோதிலும் அந்த நாய்களுக்காக உயிரைக் காப்பாற்றி வளர்க்கும் விசித்திர வாழ்க்கையைப்பற்றி அவள் சொல்லும்பொழுது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது.

கார்க்கியின் எழுத்துக்களில் லெனினும் மயங்கி இருக்கின்றார். அவனது அபார திறமையும் சக்தியையும் கண்டு வெகுவாய் புகழ்ந்திருக்கின்றார். வெளிப்படையாய் எழுதியும் இருக்கின்றார்; கார்க்கி உலகப்பாட்டாளி மக்களின் நலனுக்காக உழைத்தவர்; இன்னும் உழைத்துக் கொண்டிருப்பவர், பிரபல இலக்கிய மேதை என்பதில் சந்தேகமே இல்லை, என.

ஆம்; சந்தேகமில்லைதான் ரஷ்யாவை உள்ளூர அறிந்த அறிஞர் எச். ஜி. வெல்ஸ் சொல்கிறபடி "ரஷ்யாவில் கலைவாணராகிய கார்க்கிக்கும், பௌதீக சாஸ்திர நிபுணரான பாவ்லாவுக்கும் ஸ்டாலினைவிட அதிகமான செல்வாக்கும், சுதந்திரமும் உண்டு."

1934ல் மாஸ்கோவில் நடந்த "ரஷ்ய நூலாசிரியர் மகாநாட்டிற்கு" வில்லியம் எல்விஸ் என்ற பிரபல ஆங்கில நாவலாசிரியரும் சென்றிருந்தார். மகாநாடு முடிந்து இங்கிலாந்துக்கு திரும்பி வந்ததும் பத்திரிக்கைகளுக்கு அவர் அம்மகா-நாட்டைப்பற்றி எழுதியதில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

"மகா நாட்டின் தலைவர் மாக்ஸிம் கார்க்கி அவர் வயதில் முதிர்ந்தவர். ஆனால் இளைஞர் போன்று சுறு சுறுப்புள்ளவர். அவரது தோற்றம் என் உள்ளத்தை பெரிதும் கவர்ந்து விட்டது. அவர் தோற்றத்தில் கிழவர், தொனியில் சிங்கம். அவரது நீலவிழிகள் எப்படி ஜொலித்துக் கொண்டிருந்தன தெரியுமா? நட்சத்திரங்கள் போல் மின்னிக் கொண்டிருந்தன. ரஷ்யக் குழந்தைகளுக்கு அவர் மீது அளவற்ற அன்பு. வாலிபர்களுக்கு அவரிடம் அதிகமான மதிப்பு. முதியோர்களுக்கு அவர் 'கடவுளை யொப்ப' ஓர் மனிதனாகத் தோன்றினார். தொழிலாளர்களுக்கு அவர் ஒப்பற்ற தோழனாய் துலங்கினார்!"

கார்க்கி இறந்து விட்டான்; என்றாலும் அவன் உலகில் சிரஞ்சீவியாய் வாழ்ந்து கொண்டு தானிருக்கின்றான். அவனது இலக்கிய சிருஷ்டிகள் மங்காத ஒளியுடன் உலகில் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

முதலில் கார்க்கியின் நூல்கள் வெளிவந்தபொழுது அமெரிக்க விமர்சகர்கள் குறை கூறினார்கள். "கார்க்கியின் நாவல்களில் சம்பாஷணைகள் மிகுதி. அணிகளும் இல்லை, தொடருமில்லை" என்றெல்லாம்.

ஆனால், அதே விமர்சகர்கள் பின்னிட்டு அவனை வானளாவி புகழத் தொடங்கி விட்டார்கள். அவன் நூல்களை வெளியிடுவதில் முனைந்து நின்றார்கள்.

கார்க்கியே சொல்கின்றான்: 'பொதுவாக, நான் அழகுற எழுதவே ஆசைப்பட்டேன்' என. உலகமக்களின் மதிப்பிற்குரிய டால்ஸ்டாயும், செக்காவையும் குருவென

மதித்து உபதேசம் பெற்றுள்ளான். உலக இலக்கியத்தின் முன்னணியிலே அவன் நூல்கள் கம்பீரமாய் உலாவி வருகின்றன.

ஆரம்ப எழுத்தாளனாக இருக்கும்பொழுது அவன் எழுத்துக்கள் குறையுடன் இருந்தது என்பதும் உண்மைதான். இதை அவனும் ஒப்புக்கொண்டிருக்கின்றான்.

“கடல் சிரித்தது,’ இதை நான் எழுதிவிட்டு இது மிக உயர்ந்த வசனம் என்றே நினைத்து வந்தேன். அழகான வசனத்தை கையாளும் நிமித்தம், உண்மைக்கு மாறாகவும், வித்தியாசமான முறையிலும் அமைத்து விடுகிறேன்”. செக்காவ் இந்த வரியை பார்த்தபொழுது இந்தக்குற்றத்தை அவனுக்கு எடுத்துக்காட்டி விளக்கினார்:

“நீ சற்று படித்துப்பார்: ‘அந்தக்கடல் சிரித்தது’ என சுருக்கமாய் முடித்துவிட்டாய். அது உயர்ந்த வர்ணனை, அழகானது என்று நீ உண்மையில் நினைக்கிறாயா? வாஸ்தவத்தில் இல்லை! அதனை நீயே நன்கு கிரகிக்க முடியாதபடி நீ சுருக்கமாய் முடித்துவிட்டாய். எப்படி? கடல் திடீரென்று சிரிக்குமா? கடல் சிரிக்கவும் சிரிக்காது, அழவும் அழாது. அலையடிக்கும், பொங்கும், ஆரவாரிக்கும் ....டால்ஸ்டாயினுடையதைப் பார்: கதிரவன் உதிக்கின்றான், பறவைகள் பாடுகின்றன.......... யாரும் அழவுமில்லை, யாரும் சிரிக்கவுமில்லை, அதுதான் முக்கியத்துவம். எளிமை இருக்கவேண்டும்.”

இதிலிருந்து கார்க்கி முற்றிலும் குறைபகற்றிக் கொண்டான். இது ஆரம்பத்தில் அவன் எழுதிய “மால்வா” என்ற கதையில் உள்ள குற்றம்.

சென்ற 25 வருடங்களில் அவனது நூல்கள் 65 பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு 4 கோடியே 10 லக்ஷம் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன.

இது ஒன்று போதும் கார்க்கியின் இலக்கிய மேன்மையை காண்பிக்கும் காலக்கண்ணாடி.

கார்க்கி, பேனா என்ற செங்கோல் கொண்டு உலகை ஆண்டான். கவியும், எழுத்தாளனுமாய் கற்பனை உலகில் மூழ்கி கனவுகாண வில்லையவன். காற்றிலும் மேகத்திலும் பறந்து திரிந்து கானாற்றில் மூழ்கி மயங்கி விடவில்லையவன். மேதை என்ற மமதைகொண்டு மலைச் சிகரத்தினின்று மக்களை துச்சமாய் எண்ணி கீழ் நோக்க வில்லையவன். மக்களின் மத்தியிலே பிறந்து வளர்ந்தான். அவர்களது போராட்டங்களிலே, அவர்களது சுகதுக்கங் களிலே, அவர்களது அரசியல், பொருளாதார எழுச்சியிலே கலந்து நின்று அவர்கட்கு தொண்டாற்றினான்.

"ஜார் என்ன செய்தான்?

இருந்தோர்க்கு சிறை கொடுத்தான், இறந்தோர்க்கு விடுதலை யளித்தான்"

என்ற கவியை அவன் எழுதி வெளியிட்ட போது ரஷ்ய மக்கள் அவன் மேதையையும், இலக்கிய சிரேஷ்டத்து வத்தையும் எண்ணி அவனிடம் பக்தி கொண்டனர்.

கார்க்கியை பெர்லின் பத்திரிக்கை "முனிவன்" என்ற மகுடத்துடன் அவன் வாழ்வைச் சித்தரிக்கின்றது. அவன் முனிவன்தான். இல்லறப் பற்றற்றவன். மகாதியாகி; தன் வாழ்க்கையை தாய் நாட்டிற்கு தத்தம் செய்தவன். மனிதன் தான்; தன்னலங் கருதாதவன்.

அவன் பிரபல எழுத்தாளனாக வந்ததிலிருந்து அவன் வருவாயில் மூன்றிலொரு பாகத்திற்கு மேல் பெரு வாரியாக 'போல்ஷ்விக்' கட்சிக்கு கொடுத்து வளர்த்திருக்கின்றான். அவன் கடைசி சுவாசம் உள்ளவரை தன்னை தேசத்திற்காக அர்ப்பணம் செய்திருக்கின்றான்; தன்னிடமுள்ள யாவற்றை யும் தேசமக்களுக்கு கொடுத்துதவி இருக்கின்றான்.

அவன் சேவைக்கு கைம்மாறாய் ருஷ்ய மக்கள் அவனை நித்யனாக்கி யிருக்கின்றனர். அவன் பிறந்த ஊரை அவன் பெயரால் மாற்றியிருக்கின்றனர். அங்கே அவன் உருவம் கம்பீரமாய் நின்று காட்சியளிக்கின்றது.

ஒன்று சிற்பகலா வல்லுனனான வீரா முக்கினாவால் திறம்பட செதுக்கப்பட்ட கார்க்கியின் உருவச்சிலை. கார்க்கி கம்பீரமாய் தன் இருகைகளையும் கட்டிக் கொண்டு, உலகை வெறித்துப் பார்ப்பதைப் போலிருக்கின்றது. கண்கள் இமைக்கவில்லை; அதைப் பார்க்கும் பொழுது கார்க்கியின் அந்த வார்த்தைகள் நம் மனதில் எழும். கார்க்கி அதைச் சொல்வது போலிருக்கும்; நம் காதுகளில் அவைகள் ஒலிக்கக் காண்போம்.

"உன் உச்ச குரலில் சப்தமிட்டுச் சொல், சுதந்திரம், சுதந்திரம் என்று."

நிஜம்தான். சுதந்திர முழக்கம் செய்து ருஷ்ய மக்களை ஜாரின் கொடுங்கோலிலிருந்து விடுபடச் செய்த அந்த மேதையை உலகம் வியக்கும் வண்ணம் அங்கே அப்படி சிருஷ்டித்திருக்கின்றார்கள்.

இரண்டாவது உருவம் கார்க்கியின் இளமையைக் காண்பிப்பது. அதை மாஸ்கோவில் வைத்திருக்கின்றார்கள்.

அல்லல் பட்ட கார்க்கியின் ஜீவிதத்தை நினைவு படுத்து கிறது அது.

கார்க்கிக்கு பள்ளிச் சிறுவர்களிடம் அமோகப் பிரியம். அவன் குழந்தைகளிடம் காண்பித்துள்ள அன்பு எத்தகையது என்பதை விளக்குவது கடினம். அதை விட அவன் அவர்களுக்கு எழுதிய கடிதங்களில் இரண்டிலிருந்து கொஞ்சம் அப்படியே மொழிபெயர்த்து கீழே தந்து விடுகிறேன்.

இந்தக் கடிதம் கார்க்கி காப்ரியிலிருந்து பாகு (Baku) வில் உள்ள பள்ளிக் கூடச்சிறுவர்களுக்கு எழுதியது. இது ரஷ்யப் புரட்சிக்கு முன்னால் எழுதப் பட்டது. இதைப்பாருங்கள்:

"உங்கள் கடிதத்தை நான் படித்த பொழுது வாய் விட்டுச் சிரித்தேன். அவ்வளவு மகிழ்ச்சி. மீன்கள் தண்ணீருக்கும் வெளியே தலையை தூக்கி எதையோ பார்ப்பது போல் நான் உங்கள் கடிதத்தைக் கண்டு அத்தகைய சந்தோஷத்திற்காளானேன். நான் அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்: மற்றோர் கட்றசைரகளில் வாழும் ஜனங்கள் எப்படிப் பட்டவர்களா யிருக்கின்றார்கள். அவர்கள் இன்னும் சிறுவர்கள்தான் ஆனால் அவர்கள் வயது வந்ததும் உண்மையில் மிக அழகாயிருப்பார்கள். அதனால் தான் நான் அவ்வளவு சந்தோஷ மடைகிறேன்.

"நான் இந்தக் கடிதத்தை 'டைப்ரைட்டரில்' எழுதி யிருக்கிறேன். ஆகவே என் கைஎழுத்து நல்லா இல்லைஎன்றோ

The Letter to 'The School of Jolly Children'-A Kinder garten in Baku.

அதிலிருந்து தலையோ, வாலோ ஒன்றும் எடுத்து விட முடியாது.

"ஆனால் நீங்கள் எப்படி எழுதுகின்றீர்கள்? நீங்கள் கொஞ்சம் பொறுத்துப் பாருங்கள்! நீங்கள் எழுதிய கடிதங்களை அப்படியே நான் வைத்திருந்து இன்னும் 20 வருடங்கழித்து அவற்றை உங்களிடம் காண்பித்தால் நீங்கள் ஒரு காலத்தில் எப்படி வேடிக்கையாக வெல்லாம் எழுதி யிருக்கின்றீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

"நான் இவற்றை தெரிந்துகொள்ள விரும்புகிறேன், இவை என்ன? ¶ மணிப்பரு? † சாம்பேரி? § டோஜன்? ‡ மூக்கு கண்ணடி?

"நீங்கள் ரஷ்யப்பாஷையில் செய்வது போன்ற சேஷ்டைகளைகூட நான் செய்யவில்லை!

"என்னிடம் உள்ள குறை $ 'யாட்' எழுத்தை உபயோகிக்கும்பொழுது மட்டுந்தான். என்னுடையதை தயவுசெய்து வேறு யாரிடமும் கொடுத்து விடாதீர்கள்!

"அந்த எழுத்தை நான் உபயோகிக்குந் தோறும் நான் எனக்கு ஏதோ நாற்பது வயதான மாதிரி நினைக்கவில்லை. நாலு வயதானதுபோல் நினைக்கிறேன். அது எனக்கு சதா அவ்வளவு கஷ்டத்தை அளிக்கிறது.

¶ மணிப்புரு. ‡ சோம்பேரி. § டஜன். † மூக்குக் கண்ணாடி. அவர்கள் இப்படியெல்லாம் பிழைபட எழுதுகிறார்களென்பதை கிண்டலாகச் சுட்டிக்காட்டுகிறார்.

$ 'யாட்' ரஷ்யப்பாஷையில் 13வது எழுத்து. ரஷ்யப் புரட்சிக்குப் பின் இந்த எழுத்தை நீக்கி விட்டார்கள்.

‡ "பையட்', * "போட்ன்யாட்', † 'போன்யாட்' போன்ற வார்த்தைகளிலும் கூட எப்பொழுதும்' 'யாட்' ஒட்டிக்கொண்டே வருகிறது. எனவே 'பையட்' என்பதற்கு பதிலாக ¶ 'பெட்' என்று எழுதுகிறேன்.

"என் அருமைக் குழந்தைகாள்! உங்களைப் பார்க்க நான் எவ்வளவு பிரியப்படுகிறேன். உங்களுடன் சேர்ந்து விளையாண்டு, கும்மாளம் அடிப்பது எவ்வளவு தமாஷா யிருக்கும். எப்படிப்பட்ட ஆச்சரியமான விகடக் கதைகளை எல்லாம் நான் உங்களுக்குச் சொல்லுவேன்; எனக்கு குழந்தைகளுடன் விளையாடுவதில் ஆசை. அது எனது பழய வழக்கம். எனக்கு 10 வயதாயிருக்கும் போது என் இளையசகோதரனுடன் விளையாடுவேன். பின் அவன் இறந்துபோய்விட்டான். பிறகு வேறு இரண்டு பையன் களுடன் விளையாடுவேன். அதன்பிறகு, எனக்கு 20 வயதானதும் எங்கள் தெருவில் உள்ள எல்லா பிள்ளைகளையும் சேர்த்துக்கொண்டு காலை முதல் சாயந்திரம் வரை சுற்றிக்கொண்டு இருப்பேன்.

"அது உண்மையில் அவ்வளவு சந்துஷ்டியாயிருந்தது. உங்களுக்குத்தெரியும். சுமார் 60 பையன்கள் கொண்ட ஒரே கூட்டமாயிருக்கும். எல்லாம் சின்னப்பையன்கள். 4 வயது முதல் 10 வயதிற்குள்பட்டவர்கள். அடிக்கடி காடுகளுக்குப் போய் விளையாடுவோம். அவர்களுக்கு கால்கள் அலுத்துப்போய் விடும். ஆனால் அதற்கு தயாராய்

---

‡ பையட் = ஐந்து. * பொட்ன்யாட் = எழு.
† போன்யாட் = தெரிந்துகொள்.
¶ 'பெட்' = பாடு.

இருப்பேன். நடக்க முடியாதவர்களை என் தோளில் தூக்கிக்கொண்டு குறுக்கே வயல்கள் வழியாக வீட்டுக்கு கொண்டுவந்து விடுவேன். ஆஹா! அது எப்படி இருக்கும்.

"ஆமாம், அது ரொம்ப உல்லாசமானகாலம். அதை நான் எப்பொழுதும் நினைத்து இன்பமடைவேன். அதன் பிறகு நான் எழுத்தாளனுகி விட்டேன். எழுதுவதில் நான் பிரியப்பட்ட போதிலும் அது உண்மையில் ரொம்ப கஷ்டமான வேலை."

இன்னொரு கடிதம் ரஷ்யப் புரட்சிக்குப் பின்னல் 'இர்குட்ஸ்' பள்ளி மாணவர்களுக்கு எழுதப்பட்டது. (இர்குட்ஸ் என்றதும் ரஷ்ய பூகோள படத்தில் அந்த ஊர் இல்லையே என்று வாசகர்கள் மலைக்க வேண்டாம். அது பின் 'கார்க்கி'யின் பெயரால் மாற்றப் பட்டு விட்டது.

"தோழர் பாஸோவ் என்னைப் பார்க்க வந்த போது அங்கே கிழக்கு சைபீரியாவில் எப்படிப்பட்ட அபூர்வமான பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றதென்றும், நீங்கள் எப்படி எல்லாம் படித்து முன்னேறுகின்றீர்களென்றும், உங்களிடம் எப்படிப்பட்ட விசேஷ திறமை இருக்கிறதென்றும், எல்லாவற்றைப்பற்றியும் எனக்குச் சொன்னுர்.

"நீங்கள் எப்படி கஷ்டப்பட்டுழைக்கின்றீர்கள் என்பதைக்கேட்க அலாதி பெருமகிழ்ச்சி யடைகிறேன். குழந்தைகாள்! அதுதான் விஞ்ஞானத்தை (சயன்ஸ்) கற்க வேண்டும். மனிதனுக்கு அதைவிட பலம் பொருந்திய, வெற்றிகரமான, ஆயுதம் வேறென்றும் இல்லை. நம் உலக உழைப்பாளி மக்கள் கல்வியின்மையாலும், அறியாமை

யினாலும் சொல்லொணுத் துயருக்குள் ஆளாகியிருக்கின்றனர். உங்கள் தந்தையர்கள் விஞ்ஞானத்தின் சிகரம் வரை எட்டிப் போகும் அகன்ற பாதையை உங்களுக்குத் திறந்து வைத்துள்ளனர். நீங்கள் இப்பொழுது உங்கள் தந்தையர்கள் காட்டிச்சென்ற அவ்வழியிலே உங்கள் புனிதக் கடமையை செய்யவேண்டியுள்ளது. எண்பதுவருட கால தீவிர விடா முயற்சியினால், வீரப்போராட்டத்தினால், விஞ்ஞானத்தின் உதவியைக்கொண்டு, உழைப்பாளிகள் நாட்டின் எஜமானர்களாய், ஓர் அற்புத வாழ்க்கையின் திருஷ்டாந்தமாய் அவர்கள் சமைத்துள்ளனர்.

“நம் தேவைக்கு ஆயிரக்கணக்கிலே டாக்டர்களும், உபாத்தியாயர்களும், என்ஜினியர்களும், பாடகர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், நடிகர்களும் இன்னும் எல்லா வகையிலும், இன்னும் எல்லாத்துறையிலும் வேண்டியிருக்கின்றது. (ஓர் சேனை) மக்கள் தங்கள் சக்தியை செலவிட்டு பூமியின் கீழ் புதைந்துள்ள பொக்கிஷங்களை எடுத்து, அவற்றை விருத்திசெய்ய வேண்டியிருக்கின்றது.

“நம் நாட்டிலே புல்லுருவிகளுக்கும், நச்சுப்பூண்டுகளுக்கும், மக்களின் வாழ்க்கையின் நாசகாரர்கட்கும் இஞ்சிற்றும் இடமில்லை. விளைவுக்கோ, காட்டிற்கோ எதற்கும் தீங்குசெய்யும் எதற்கும் இடமில்லை. நம் பூமிபூராவையும் ஒரே தோட்டம் போல் உழுது பண்படுத்துவோம்; நஞ்சைக்கு கால்வாய் வெட்டுவோம்; தரிசுக்கு நீர் பாய்ச்சுவோம்; ஆற்றிற்கு அணை கட்டுவோம்; உதவாக் காட்டை யழிப்போம்; லட்சக்கணக்கான மைல் தூரம் ரஸ்தா போடுவோம். நம் தானியங்களை சூறையாடும் வெட்டுக்

கிளிகளுக்கு நம் நாட்டில் இடமில்லை; மக்களுக்கு ஜுரத்தை உண்டாக்கும் கொசுக்களுக்கு நம் நாட்டில் இடமில்லை; பல தீய வியாதிகளை கொண்டுவரும் ஈக்களுக்கும் இடமில்லை; பீடைக்கும், தரித்திரத்திற்கும் நம் நாட்டில் இடமில்லை.

"எலிகளும், சுண்டெலிகளும் - இந்த புல்லுருவிகள் நமக்கு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை விளைவிக்கின்றது. இன்னும் வயல் பெருச்சாளிகட்கும், அகழெளிகளுக்கும், வயல் எலிகளுக்கும், நம் நாட்டில் இடமில்லை. இது வாஸ்தவத்தில் - இதோடும் நின்று விட வில்லை.

"இன்னும் நீங்கள் சாதிக்க வேண்டிய மகத்தான காரியங்கள் ஏராளமாயிருக்கின்றன. ஓர் உண்மையான, கலாச்சாரமுடைய, சோஷலிஸ்டு சமூகமாக்க, நீங்கள் விருத்தி செய்ய பாடுபடுங்கள்.

இத்தகைய வேலைகள் உங்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றன. அது மிகப்பெரிய அளவில் விஞ்ஞான அறிவைக்கோருகின்றன. அதன் மூலம் எல்லாவற்றையும் அனுஷ்டானத்தில் கொண்டு வாருங்கள்.

இந்த ஆசிரியனின் கோரிக்கையும், விண்ணப்பமும் இது தான். அதேபோன்று நம் நாட்டிலும்செய்ய ஒவ்வொரு வீரமாணவர்களும் கச்சை கட்டி முன்வரக் கூடுமானல் நீங்களே உலகத்தின் புனித மக்கள்; எதிர்கால உலகம் உங்களைப் போற்றிப் புகழும். அத்தகைய வீரப் புதல்வர்களாக நம் நாட்டிற்கு தொண்டாற்ற உதவும் கல்வியை கற்று வந்துதவுக! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் மனிதன் கண்டு வந்த ஆசைக்கனவுகளை - நினைவாக்குக! இதோடு இச்சிறு வரலாற்றினை முடித்துக்கொள்கின்றேன்.

'மனிதன் பயனின்றி அழியக்கூடாது' (இது உங்கள் மனதில் இருக்கட்டும்.) - மாக்ஸிம் கார்க்கி.

அனுபந்தம் 1.

நாடகக் கதை: "வாழ்வின் ஆழத்திலே தாழ்வு"

——(o)——

இருதம்பதிகள் ஓர் ஹோட்டல் வைத்து நடத்து கின்றார்கள். அது இராவிடுதி; இரவில் தங்குபவர்களுக்கு இடம் அளிப்பார்கள்.

புருஷனுக்கு வயது 50க்கு மேலிருக்கும். கபட வேஷதாரி, பேராசை கொண்டவன்; கோணகோணத்தவன். தன் இளம் மனைவியின்மீது சம்சயப் படுகிறான்; விடுதிக்கு வருகிறவர்களிடம் சீறி விழுகிறான்.

அவளுக்கு வயது 26. இளம்பெண். கணவனை வெறுக்கின்றாள். வேறொரு இளைஞனை காதலிக்கிறாள்.

அவ்விளைஞன் சுகச்சோம்பேரி. நயக்கள்வன். வாஸ்ஜக்கா என்ற பெயர். காசுவேண்டும் போதுதான் வேலை பார்ப்பான். அவனுக்கு அவளிடமிருந்து சூடான தேனீரும், இனிய பண்டங்களும் கிடைத்து விடுகின்றன.

இதைப்பற்றி எல்லாம் அவன் சகாக்களுக்கு நன்கு தெரியும். ஆனால் அவர்கள் இதைப்பற்றி பொறாமைப் படவில்லை. அவர்கள் ஓர் தினுசாய் உள்ளவர்கள். அவர்களது கவலை ஒன்றுதான்: அவர்கள் யாருக்கு பணிவது. கடவுளுக்கா, மனிதனுக்கா? சைத்தானுக்கா, தேவதூதர்களுக்கா? எதை சட்டை செய்வது?

தலை மூண்டிய குடிகாரர்கள். மனோபாவம் அவர்களில் வெவ்வேறாகவும் இருக்கும். ஆனால் அதிலே ஒன்றும் அர்த்தமிராது.

அந்த திருடன் தன் காதலியிடம் சலித்துப் போகிறான். வாழ்க்கையில் சலிப்புக்கொள்கிறான். அவளது சகோதரி நடேஷா, அவள்மீது ஓர் கண் போடுகிறான். இது அவளுக்குத்தெரிகிறது. இக்கட்டின் அடியிலே நிற்கின்றாளவள். திரை மேலெழுகிறது.

* * *

அது காலை நேரம். மங்கிய வெளிச்சத்தில் நிழல் போன்ற உருவங்கள். ஒருவர் ஒருவராக, அங்கே கூடுகின்றார்கள்; முணகுகின்றார்கள்; உறுமுகின்றார்கள்; கனைக்கின்றார்கள்; கடகடவென்ற ஊத்த ஒரே சிரிப்பு. ஒரே ரகளை. சமூகத்தின் அடித்தளத்திலே கிடக்கும் வாழ்க்கையின் மறைந்த இன்னிசை லாகவங்கள்.

இன்னும் மற்ற கதாபாத்திரங்களைப் பார்ப்போம்:

அந்த இரு சகோதரிகளுக்கு மாமனான ஒரு பூட்டுக்காரன். அவனது மனைவி. அவள் தன் அரைபைத்தியங் கொண்ட புருஷனிடம் நீண்டகாலமாய் வாங்கிய அடியினால் நைந்து, க்ஷயரோகம் பிடித்து, சாகவழி பார்க்கிறாள். ஓர் வேதாரி, நல்ல நாவல்களை படிக்கின்றாள். இடைப்பொழுதில் அதைப்பற்றி பேசுகின்றாள்; தன் இளமையைப் பற்றிய அந்த காதலை சொல்கின்றாள். ஓர் குல்லாய்காரன். சுத்தசோம்பேரி, வேலையே செய்யமாட்டான். மது வெறியால் தன்னை மறந்தவன். சாத்தின் என்பவன் ஒருவன். ஓர் வீணாய் போன பிரபு, மிதமிஞ்சிய 'வோட்கா' குடியினால் உளறிக் கொட்டுகிறான், போதையால் கண்கள் ஜிமிஜிமிக்

கின்றன. இன்னும் ஓர் வயோதிகன், வயது 60க்கு மேலுள்ளவன், லூகா என்ற பெயர் - யாத்ராவாசி.

மற்றும் ஓர் தத்தாரி சக்கிலியன், அவன் பாட்டுக் கச்சேரி வைத்து விடுகிறான்; அவன் தன்னைப்பற்றி பிதற்றிக் கொள்கிறான். அவன் சுயேச்சையானவனும்; எதற்கும் அஞ்சாதவனும்; அவனுக்கு பணமோ, பொருளோ என்ன கொடுத்தாலும் அதை வாங்கிக் கொள்ளமாட்டானும்; அவ்வளவு அலக்ஷியமாக பேசுகிறான். இன்னும் அதில் சம்மந்தப்பட்டவர்கள் ஓர் தார்த்தாரி தேசத்தான், மற்றும் கீழ்த்தர வர்க்கத்தைச் சேர்ந்த பலர்.

இதில் பிரதான நடிகன் லூகா என்ற யாத்ரீகன்தான். இந்த வயோதிக மனிதன் போலனியஸ் போன்ற நல்ல வாய் சமர்த்தன்; தர்க்கவாதம் பேசுகின்றான். அவன் சந்திப்பவர்களின் மனதை மாற்றி விடுகின்றான். இப்படிப்பட்டவனுக்கு அந்த திருடனிடம் பலிக்கவில்லை. அவனை திருப்புவது கஷ்டமாயிருக்கின்றது. லூகா தன் பொறுமையை மீற வேண்டியவனாகிறான். அவனுக்கு உபதேசம் சொல்கிறான்: 'சைபீரியாவில், அதற்கப்பால், அங்கே அகன்ற நிலப்பரப்பிருக்கின்றது. அங்கே போனால் யாரும் அவனுக்கேற்ற ஓர் வழிதேடிக் கொள்ளலாம்' என்பதாக.

அதற்கு அந்த மகா யோக்யன் சொல்கிறான்: 'அவன் திருடனாகவே பிறந்தானாம். திருடனாகவே இருக்க வேண்டுமாம். அவன் தகப்பனார் எத்தனையோ சிறைகளைக் கண்டவனாம். அவன் சைபீரியாவுக்கு போக வேண்டுமானால், அவன் சொல்கிறபடி சும்மா போகமாட்டானாம், குற்றவாளியாய்த்தான் போவானாம்,

இருப்பினும் அவ்வயோதிகனின் வார்த்தைகள் அவன் மனச்சாட்சியை கிளர்த்தி விடுகின்றது. அவன் மனம் வேதனைப்படுகிறான். 'ஏன் கூடாது? ஏன் ஓர் நல்ல மனிதனாகக்கூடாது? ஏன் அப்பழய துராச்சார வாழ்விலிருந்து, போலீஸ் கண்காணிப்பிலிருந்து, தப்பி, அவற்றைத் தவிர்த்து நன்றாக, சந்துஷ்டியாக வாழக் கூடாது? வாழ்ந்து குழந்தை குட்டிகளோடு ஏன் இருக்கக் கூடாது?'

அவன் நடேஷாவைக் காதலிக்கின்றான்; அவள் சகோதரியை வெறுக்கின்றான்.

இங்கே தான், இக்காட்சியிலே அவன் வாழ்வின் 'சோதனை' வந்து சேர்கின்றது. அவன் பாதை-, அவளது தீர்ப்பு,- அதன் படி அதன் போகத்தயார்!

*　　*　　*

நடேஷா கதம்பம். நல்லவளாயு மிருக்கின்றாள் கெட்டவளாயு மிருக்கின்றாள். வாஸ்ஜக்கா அவள் சகோதரியின் காதலன். அவள் அடிபடுகின்றாள்; அவள் முகமும் தோளும் அடிக்கடி கருப்பாயிருக்கிற தென்பதற்காக. அவள் சகோதரியின் மீதுள்ள பொறாமைக் குணத்தால் உடல் நீலம் பூத்து விடுகிறது. அவள் வாழ்க்கை ஓர் நரகவேதனை. அது அவளுக்கு நன்றாய்தெரியும். இருந்தும் அவள் தயங்குகின்றாள். வாஸ்ஜக்கா சமாதானம் சொல்கின்றான்

துரதிர்ஷ்ட வசமாக அவள் சகோதரி எதிர் பார்த்ததற்கும் முன்னதாகவே திரும்பி விடுகிறாள். படிக் கட்டில் ஏறும் பொழுதே, ஜன்னல் வழியாக அந்த சம்பாஷணைகளைக் கேட்டு விடுகிறாள்.

சகோதரி- பேராசைப் பிடித்தவள்; துருவிப் பார்ப்பவள், சதா, அங்கே தங்குபவர்களை கவனிக்கின்றாள், அவளும்,

அவள் புருஷனைப்போல் கோவிலிலிருந்து பிரார்த்தனைக்குப் பின் மெல்ல வந்திருக்கலாம் ஆனால் அவள் வேஷதாரி. பெரிய பக்தையைப் போல் நடிப்பவள். அங்குள்ளவர்கள் என்ன செய்கின்றார்கள், என்ன பேசுகின்றார்கள் என்பதை ஒளிந்து பார்க்க முன்னாடி வந்து விட்டாள். பின்னால், இவள் அத்துரதிர்ஷ்ட சகோதரியின் வாழ்விற்கே உலை வைத்து விடுகிறாள்.

சுத்த சோம்பேரி. உதவாக்கரை. பிறரின் கையைக் கொண்டு காலங் கடத்துபவள். ஓர் அழகான மண ஒப்பந்தம் செய்து கொள்கின்றாள். அதுவும் ஓர் திருடனோடு!

அந்த திருடன் கேவலமாய் பேசுகின்றான். வாஸ்ஜக்கா தன் பொறுமையை இழக்க வேண்டியவனாகிறான். இருவருக்கும் கைகலப் பேற்படுகிறது. அங்குள்ளவர்கள் விலகி நிற்கின்றார்கள். போலீஸைத்தான் சொல்ல வேண்டியதில்லையே. புகை பூராத விடத்திலும் போலீஸ் புகுந்து விடும். அதிலும் அந்த மாமன் கூட அல்ல. லஞ்சம் வாங்குபவன், சூதாடி, குடிகாரன். அவனும் குறுக்கிட்டு எங்கே இரத்தம் சிந்திக் கிடக்கிறதென்று பார்த்து விடுவான். ஆனால் வாஸ்ஜக்கா வின் சான்ஸ்போய் விட்டது. அது இனி வராது. நடேஷா மேல் மாடிக்கு, சமையல் கட்டிற்கு, அங்கே வேலை பார்க்க ஓடுகின்றாள். அந்த வயோதிக லூகா. அவன் புலம்பிக் கொண்டிருக்கின்றான். அவனுக்குத்தெரியும். வாழ்க்கை என்ன என்பது. நீர்க்குமிழி போன்ற, சுருட்டும் நெடுந்திரைகள் போன்ற, வாழ்வின் எல்லா சந்தங்களும்.

பூட்டுக்காரன். மனைவி சாகும் ஆனுவுக்கு ஆறுதல் சொல்கின்றான்; குடி வெறி கொண்ட கொச்சை வார்த்தை

களால், அவர்களைத் தூற்றிக்கொண்டே அவள் காதருகில் தேறுதல் சொல்கின்றான். அவள் ஓர் அபலை. குளிரும், பட்டினியும், துன்பமும், வாழ்காலம் பூராவும் பட்ட அடியும், உதையுந்தான் அவளுக்குத் தெரியும். அவள் வேறொன்றும் அறியாதவள். அவள் கணவன் வன்னெஞ்சன். தன்னை ஓர் சுயசிரம ஜீவியாக காட்டிக் கொள்கின்றான். உழைப்பின் பெருமையையே சதா பேசுகின்றான். அதையே உபதேசிக்கின்றான். தான் ஓர் தொழிலாளி என்று அந்த திருடனிடம் பெருமையாகக் கூறுகின்றான். மனைவி சாக வழி பார்த்து இழுத்துக் கொண்டு கிடக்கும் போது அரத்தை எடுத்து பூட்டை ராவிக் கொண்டிருக்கின்றான்!

இந்த இடத்தில் அத்திருடன் சொல்கின்றான். வேலை மட்டும் மனுஷனுக்கு போதாதென்று. அவன் மனைவி ஏதோ கெஞ்சுகிறாள்; காற்று வேண்டுமென்கிறாள். அவளை தாழ் வாரத்திற்கு போகச் சொல்கிறான். அந்த இடம் மிகக குளிரானது.

பின் அவளிடம் போய் ரொட்டித்துண்டு வேண்டுமா என்கின்றான்; என்ன கஷ்டப்படுகிறாயா? என்கின்றான்; அவளை ஏதோ விசாரிக்கின்றான். அவ்வளவுதான். கடைசியாக மற்றவர்களோடு கூடிக்கொண்டு சாராயக் கடைக்கி கிளம்பி விடுகிறான்.

லூகாவின் வார்த்தைகளை அவள் கவனமாய் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது வாஸ்ஜக்கா உள்ளே வருகின்றான். அதைப்பார்த்து கேலியாய் சிரித்துக்கொண்டே கேட்கிறான்: ஓர் கடவுள் இருக்கின்றாரா?

அக் கூட்டத்தார் திரும்பி இக் கேள்வியைப் பற்றி பலமாய் விவாதிக்கின்றனர். பேசு, பேசு, பேசு. ரஷ்ய

ஊதாரிகளுக்கு கொஞ்சம் குடிக்கக் கிடைத்து விட்டால் போதும்; எதாகிலும் சமாச்சாரம் மாட்டிக் கொண்டால் போதும்; நாள் பூராவும் ஓயாது பேசுவார்கள்.

லூகா இடை மறித்துச் சொல்கின்றான்: 'ஒருவன் கடவுள் உண்டென்று நம்பினால் கடவுள் இருக்கின்றார். ஒருவன் நம்பாவிட்டால் அவனுக்கு இல்லைதான்.'

எத்தகைய அழகான தர்க்கவாத தத்து வார்த்தம்! எல்லோரும் அப்படியே பேசாதிருந்து விட்டார்கள். வாஸ் ஜக்கா மட்டும் ஜம்ப மடிக்கின்றான்: அவன் சாவுக்கோ, வாழ் விற்கோ எதற்கும் அஞ்ச வில்லையாம். ஆனா அமைதியாய் உயிர் துறக்கின்றாள். ஒரே சாந்தி நிலவுகின்றது.

சாவு! அதன் அர்த்த மென்ன? சற்று முன்னே கொஞ்ச நேர சாந்திக்காக கெஞ்சிக் கொண்டிருந்தாள். இப்பொழுது நித்யத்வ சாந்தியை யெய்து விட்டாள். கும்மாளமும் குடிகாரப் பேச்சும் மறைந்து விட்டது. சாவு!

யாராகிலும் ஓடிப்போய் சாராயக் கடைக்கி, அவள் புருஷனுக்கு தெரிவிக்க வேண்டும். அவனுக்காக சீக்கிரத்தில் போலீஸுக்கும் தெரிவிக்க வேண்டும். அவன் சந்தேகிக்கப் படுவான்- அங்கே திரை விழுந்து விடுகிறது.

உண்மைதான். ஆனால் வாழும் நாம் சாவைப்பற்றிய நினைவை ஒட்டி மேலும் பார்ப்போம்:

* * *

லூகா அந்த பழய நடிகனுடன் சம்பாஷிக்கின்றான். இருவரும் பேசிக் கொள்கின்றார்கள். இவற்றிலிருந்து நாமறிவது இதுதான்: அவன் காலத்தில் அவன் ஓர் நாடக

நடிகனாக இருந்தான். ஆனால் அவன் சொல்கிறபடி மது வெறியால் சீர் கேடடைந்து விட்டான்.' அவனும் தர்ம வைத்ய சாலை டாக்டர் சொன்ன அதனையே திருப்பிச் சொல்கின்றான்: மனித ஸ்வபாவத்தின் இத்தகைய ஈனமும், கடந்த இன்பத்தின் நினைவால் எழுந்த கடுஞ்சீற்றமும், அவனை வாழ்வின் அடித்தளத்திற்கு உந்தித் தள்ளி விட்டது. அங்கே சாவு தயாராய் இருக்கின்றது!

அதற்குள் அவனுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். லூகா அவனுக்கு ஓர் நகரத்தைப் பற்றி சொல்கிறான். அங்கே மது வெறியை யொழித்து நிவர்த்திக்கும் சிகிச்சை சாலை யொன்றிருக்கின்றதென்கின்றான். அந் நடிகன் அங்கே போகவேண்டும் ஓர் புது வாழ்வை அங்கே மேற்கொள்ள வேண்டும்!

'புதிய வாழ்க்கை' என்ற இவ்வார்த்தை அவன் காதுகளைத் துளைக்கின்றது; தன் துன்மார்க்க வாழ்வை எண்ணி வெதும்புகின்றான்.

அவன் நினைவிலே சடேரென்று ஓர் யோஜனை பிறந்தது. அந்நகரம் எங்கே இருக்கின்றது? லூகாவுக்கு தெரியுமா? அவனும் சொல்ல முடியாது. மறந்து போயிருப்பான். ஆனால் நிச்சயம் அவன் நினைவு படுத்தி விடுவான்.

இவனோடு அந்த தத்தாரி பேசுகிறான். இவனுக்கு நல் விஷயங்களை யெடுத் தோதுகின்றான். அவன் மூளையில் ஓர் புது யோஜனை முளைக்கின்றது. ஷேக்ஸ்பியர், லியர், இவர்களிலிருந்து மேற்கோள் எடுக்கின்றான்; சொல்கின்றான்; உளறுகின்றான். மீண்டும் நினைத்துப் பார்க்கின்றான்.

அந்த வார்த்தை! அந்த வார்த்தை!! அது என்ன?

ஆட்டிக்கொண்டு விரைந்து செல்கின்றான். அங்கே சாந்தி உலகிற்கு; சாராயக்கடைக்கு; அந்த மாதின் சவத்தைச் சுற்றி எல்லோரும் அழுது மடிந்து நாவெழாமல் உட்கார்ந்து கிடக்கும் போது, இந்த நடிகன் அங்கே வருகின்றான்; மேஜையை தூக்கி போடுகின்றான்; பேச ஆரம்பித்து விடுகிறான். அவனுக்கு ஞாபகம் வந்து விட்டது!

லூகா அந்த சீமானுடன் சம்பாஷிக்கின்றான்; அவ் விபரீத பிரகிருதி அவ்விளம்மாதைச் சுரண்டி சாப்பிடுபவன். 'வோட்கா' கிடைக்காவிட்டால், வேறு ஏதாகிலும் போதை சாப்பிடுவான்; அதுவும் கிடைக்காவிட்டால் பல்லை இளித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான்; அல்லது அட்டாணிக்கால் போட்டுக்கொண்டு மணிக்கணக்காய் கதைக் கேட்டுக் கொண்டிருப்பான். அவனுக்கு ஏதாகிலும் சொல்லித் தொலைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

இப்படி இருக்கும் போதே அவனை 'சப்போர்ட்' செய்துவரும் அந்த பெண்ணையே கேலி செய்கிறான். அவள் ஒரு தினுசான மனோபாவங் கொண்டவள். அவள் ஒவ்வோர் நாளும் அப்பிரபுவுக்கு கதை சொல்கிறாள். 'பிரபு வமிசத்தைச் சேர்ந்த ஓர் மாணவனைப் பற்றிய கதையை சொல்கிறாள். அந்த மாணவன் ஒரு சமயம் அவள்மீது கொண்டுள்ள காதலால் அவன் தன்னைச் சுட்டுக்கொண்டு உயிரையே மாய்த்துக்கொள்ளப் போவதாக பயமுறுத்தினான் என்ற சம்பவங்களை எல்லாம்; ஆனால் அதற்கு அந்த பிரபு விகண்டையாய் பதில் கொடுக்கிறான். அக் கற்பனை நாயகனின் பெயர் 'காஸ்டன்' என்று ஒரு நாள் சொல்கிறான்; ராவொல் என்று மற்றொரு நாள் சொல்கிறான். அந்த ஸ்திரீயை கேவலமாய் நிந்தித்து அவளை ஹிம்ஸிக்கின்றான்.

அங்கே லூகா அவனுடன் தர்க்கம் செய்கின்றான்; அப்பொழுது அவன் உணர்ச்சி தூண்டப் பெருகிறது. இன்ப கரமான, கௌரவமான, அந்த கடந்த காலத்திய நினைவுகள் இவ்விளம் மனிதனின் சிந்தனையிலே பளீரிடுகின்றன. அவன் செல்வந்தன், கௌரவமான பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். அதிகாலையிலே, அவன் படுக்கைக்கே அவனுக்கு 'காப்பி' வந்து விடும். அது உண்மை. அவனுக்கு நிறைய வேலை யாட்களிருந்தனர். இன்னும் மனைவி, குதிரைகள் முதலிய பரிவாரங்கள் எல்லாம். அவன் எல்லாம் நினைத்த பொழுது அவனுக்கே ஒன்றும் புரிய வில்லை. அவன் என் பிறந்தான்! என் விவாகம்செய்து கொண்டான்? என் இன்னும் வாழவேண்டும்? அவன் என் சாக வேண்டும்? இது ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அவனுக்கு எவ்வித லக்ஷியமுமில்லை.

பின்னர் அந்த ஸ்திரீயின் 'சான்ஸ்' வருகிறது. அவள் அப்பிரபுவின் புளுகுகளை உடைத்தெறிகிறாள். காலைக்காப்பி படுக்கைக்கு வருமென்கின்றான்! அவனுக் கல்ல. சுத்தப் பொய்யன். தன் பிறப்பைப் பற்றி ஜம்பம் பேசுகிறான். புளுகன். பிச்சைக்காரன்!

அவன் குட்டு வெளிப்படுகிறது. பிரபு உள்ளிட்டு அழுகின்றான். ஆனால் அதே ஸ்வரம் அவனை அப்போதே சினத்துக்குள்ளாக்கு கின்றது. ஓர் 'கிளாஸை' எடுத்து அவள் கையில் ஓங்கி அடிக்க நினைக்கின்றான். அடித்துமிருப்பான்; ஆனால் குழப்பம் அவனைத் தணிக்கின்றது. உடனே எல்லோருமாய் குடித்து கும்மாளம் அடிக்கின்றார்கள்.

* * *

மூன்றாவது அங்கத்தில் கதை உச்சத நிலமையை அடைகின்றது. அந்த விடுதியை நடத்தியவன், அந்த ஹோட்

டல் காரன் கொல்லப் படுகிறான். யார் கொன்றது? அவன் மனைவி வாஸ்ஜக்கா என்று ஊர்த்திச் சொல்கின்றாள். அவன் தான் அவள் புருஷனைக் கொன்றவன். அத்திருடன் அந்நல் மனிதனை அடிக்கடி பயமுறுத்தி யிருக்கின்றான். இந்நிலைமையில் போலீஸ் வந்து விடுகிறது. உஸ்! வாஸ்ஜக்கா விலங்கிடப் படுகிறான். அந்த ஸ்திரீயும் விலங்கிடப்படுகிறாள். நடேஷா சாக்ஷி சொல்ல வேண்டும். அவள் தன் சகோதரி சொன்னதை கேட்டிருக்கின்றாள்; அவள் வாஸ்ஜக்காவுடன் சேர்ந்து கொண்டு அவள் கணவனைக் கொல்ல சதி செய்ததைக் கேட்டிருக்கின்றாள்; அவள் நடேஷா மீது - தன் சகோதரியின் மீது- அவள் காதலால் கொண்டுள்ள பகைமையால்-அவள் வாக்கு மூலம் அவ்விருவரையும் சிறைக்குள் தள்ளுகிறது. காதலுக்கு பலி!

* * *

இத்தர்ம சங்கடமான நிலமையில் நாடகம் நம்மை நாலாம் அங்கத்திற்கிழுக்கின்றது. அங்கே பார்ப்போம்:

இப்பொழுது அந்த லூகா ரொம்ப சங்கடம் பிடித்த ஆள் என்று தோன்றுகிறது. அவன் கை வைப்பது ஒன்றும் உருப்படுவதில்லை.

மிச்சம் உள்ள பேர் வழிகள் அந்த பழைய மேஜையண்டை உட்கார்ந்து கொண்டு, குடித்துக்கொண்டு விவாதம் செய்கின்றார்கள். போன சமாச்சாரங்களைப்பற்றியும், லூகாவைப்பற்றியும் முடிவில்லாதபடி விவாதிக்கின்றார்கள். லூகாவை நிந்திக்கின்றார்கள். அவன் புளுகன். கொலையில் மகிழ்பவன். அவன் நிஜம் சொன்னால் என்ன? பொய் சொன்னால் என்ன? அதில் வித்தியாசம் ஒன்றுமில்லை. அவன் உண்மை கொலைக்கு காரணமாகி விட்டது. அவன்

பொய் ஒன்றும் செய்து விடவில்லை. அது அவர்களுக்கு தமாஷாய் இருக்கின்றது. நல்ல உண்மை! உண்மை என்றால் என்ன? அவர்களுக்குள் பேசிக்கொள்கின்றார்கள். எல்லாம் சரிதான்! உண்மையாம் உண்மை! என்ன வேண்டி யிருக்கின்றது. நமக்குந்தான், உண்மையில் லூகா மீதே சந்தேகம் பிறக்கின்றது.

அங்கே, அந்த தார்த்தாரி தேசத்தான் மண்டியிட்டு தொழுகின்றான்; குரான் வாசிக்கின்றான்! சக்கிலியன் சச்சேரி வைத்து விடுகிறான்; அந்நடிகன் போய் அவனிடம் சொல்கின்றான்; அந்த தார்த்தாரியிடம் அவனுக்காகவும் பிரார்த்தனை செய்யச் சொல்லிய பின் அவன் மனம் வாழ்வுப் பாதையை விட்டு திரும்புகிறது. அங்கே தற்கொலை புரிந்துகொள்ளுகிறான்.

இந்தக்கதையை, இந்நாடகத்தை நம்மவர்கள் ரசிப்ப தென்பது ரொம்ப சிரம சாத்யமான விஷயந்தான். அதிலும் ஒன்னில் நாலு, போலிப்பாஞ்சாலி போன்றவற்றில் லயித்து போகுபவர்கள் இந்தப்போக்கை கிஞ்சிற்றும் கருதவே மாட்டார்கள். இது அவர்களுக்கு எட்டிக்காய் போலாகும்.

ஏனெனில் கதை வாழ்வின் அடித்தளத்திலே கிடக்கும் அம் மக்களது ஆத்ம உணர்ச்சியை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது. வறுமையில், எழ்மையில் மிதியுண்டு கிடப்பவர்கள். வாழ்வின் பார்வையிலே அகற்றப் பட்ட், அறிவிலா மாந்தர்கள். கார்க்கி அவர்களைத்தான் தன் நாடக பாத்திரங்களாக சிருஷ்டித்துக் கொண்டிருக்கின்றான். அதன் மூலம் நம் அன்பையும், ஆழ்ந்த அநுதாபத்தையும் அதற்கு அளிக்கச் செய்கின்றான்.

ஒவ்வோர் வரியிலும், ஒவ்வோர் சம்பாஷணையிலும் உண்மையின் சலனங்களை எடுத்தோதுகின்றான்; வாழ்வின் கொடும் சந்தங்களை விளக்கிக் காட்டுகிறான்.

உலகத்தில் தலை சிறந்த நாடகங்களிலே இது மிகச் சிறந்ததாக போற்றப்படுகிறது. பார்ப்பவர்களின் மனதை கொள்ளைகொண்ட நாடகம் இது ஒன்று என்று மேல் நாட்டார் ஒப்புக்கொள்கின்றார்கள். இந்த ஒரே நாடகம் பாரீஸ் நகரில் மட்டும் 500 நாட்கள் சேர்ந்தாற்போல் நடிக்கப்பட்டிருக்கின்றது. ஜெர்மனியில் நான்கு வருடங்கள்; இன்னும் அமெரிக்கா, இத்தாலி ஆகிய எல்லா நாடுகளிலும். ஆனால் நம் நாட்டிற்கு இது விஷயமே புதிது.

அமெரிக்க பிரபல விமர்சகனை †ஜேம்ஸ் ஹூனேக்கர் என்பவர் உலகத்தில் தலைசிறந்த நாடகாசிரியர்களின் நாடகங்களைப்பற்றிய விமர்சன நூல் ஒன்று எழுதியிருக்கின்றான். அதிலே தேசவாரியாக 11 நாடகாசிரியர்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான். அதிலே மாக்ஸிம் கார்க்கியின் இந்த நாடகத்திற்கு இடம் கொடுத்து இவ்வாசிரியனை அளவளாவி புகழ்கின்றான். அவனே சொல்கின்றான்:

"நாடக சுயபாவத்தின் கடைசிபதத்திற்காக நான் வருடக்கணக்காக தேடிக்கொண்டிருந்தேன். அது கார்க்கியின் இந் நாடகத்திலே இருப்பதைக்கண்டேன்."

"எமிலிஸூலா, இலக்கியத்தின் சுயபாவத்திலே தந்தையென விளங்கினான். ஆனால் அவன் நிழனிநோவ்கோட்

---

† Iconoclasts: By James Huneker

டிற்குச் சென்று, மாக்ஸிம் கார்க்கியினிடத்தில் போய் அவனிடம் தாழ்ந்து கலையின் அக்ஷரத்தைக் கற்றிருக்க வேண்டும்'' என்பதாக. ஸோலா உலகப் பேராசிரியன்களை எல்லாம் தோள் தட்டிச் செல்பவன். இந்த ஒரு உவமை கார்க்கியின் உயர்ந்த கலைப்பண்பிற்கு போதுமானது. இதைவிடச் சிறந்த உதாரணம் நாம் கூறுவதற்கு அருகதையே இல்லை.

அனுபந்தம் 2

"படை உலகம்"

சமீபத்தில், பெர்லின் ராணுவப் பயிற்சி முகாம் ஒன்றில், அதன் தலைவர், சாராய உற்பத்திச் சாலையின் முதலாளியான செல்ட்டி என்பவர் சொன்னார்:

> "ஸ்டாக்ஹோம் முன்னேறும் பொழுது அது ஜெர்மன் ராணுவ எழுச்சியின் புனர் ஜனனம் என்றுதான் பொருள். படை எண்ணங்களும், படை விஷயங்களும் மீண்டும் ஜெர்மானியில் போற்றப்படுகிறது" என.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு, யாரோ எனக்கு ஞாபகமில்லை. பிச்டி என்ற தத்துவஞானியின் சுய சரிதத்தை எழுதியிருந்தார். அதில் அவர் சொல்கிறார்:

> "ஜெர்மனி தத்துவ ஞானிகள் நிறைந்த நாடு. ஜெர்மன் நாட்டில் சிறந்த தத்துவ ஞானிகளால் அந்நாடு ஆளப்படுகிறது. பிரான்சிலோ, வழக்கறிஞர்களால் அரசியல் நடத்தப்படுகிறது.

ஆனால் இங்கே மதுபான முதலாளிகள் அரசியலில் இறங்க ஆரம்பித்து விட்டார்கள். வாஸ்தவத்தில் இது கெட்ட காரியமாயினும் இது நமக்கொன்றும் புதிதல்ல. முதலாளித்துவ நாடுகளில் முற்றிலும் இது இயற்கையாயிருக்கின்றது. இதில் இன்னும் பார்க்கப் போனால் ஓர் மதுபான முதலாளி ஓர் தத்துவ ஞானியாயிருப்பதுதான் வேடிக்கை. அது நமக்குத் தெரியும். ஓர் பூர்ஷ்வா சித்தாந்தி ஞானத்தில் பற்றுள்ளவர்; 'உலகத்தைப் பற்றி விளக்கிக் கூறுவதோ' அல்லது உலக சிந்தனைகளைப்பற்றி வியாக்யானம் செய்வதோ அவர்கள் வாதம். அவர்களைப் பற்றி நாம் சொல்ல வேண்டுமானால், உலகப் போக்கிலே மாறுதல் உண்டாக்கும் உண்மையான தொண்டில் ஈடுபட்டிருக்கும்

மக்களின் போக்கைக்கொண்டு இந்த பூர்ஷ்வா சித்தாந்தியை குற்றமில்லாதபடி, ஓர் 'சோம்பேரி' என்று சொல்லிவிடலாம். இந்த மதுபான முதலாளி ஓர் சித்தாந்தி யல்ல. படை விஷயங்களைக் கொண்ட - வினய பாவமுள்ள ஓர் மனிதன்.

ராணுவத்தின் பலாபலன்கள் என்ன என்பதை சித்தரித்துப் பார்ப்பது சுலபமானது தான். 1914–18ல் நடந்த கோரக் கொலைகளையும், இரத்தப் பிரவாகத்தையும் நாம் மறந்து விட வில்லை. அதே ‡ அம்ஸ்டெர்டாம் யுத்த எதிர்ப்பு மகாநாட்டிலும் பிரதிபலித்தது. அதன் மூலம் இன்னும் நமக்குத் தெளிவாக புரியலாயிற்று. தவிர சோவியத் யூனியனில் ஐரோப்பியர்கள் தலையிட்டதின் கோர விளைவுகளைத்தான் மறந்து விட்டோமா? சமீபத்தில் சேப்பெயில் ஜப்பானியர்கள் புரிந்த அட்டூழியங்கள் நமக்கு இன்னும் 'ராணுவத்தைப் பற்றிய' விளைவுகளை ஞாபகப் படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால் படை எண்ணங்கள் என்ன? நமக்குத்தெரிந்த வரையில் சரித்திர சித்தாந்தம் இதிலிருந்து வரும் விகல்பத்தைப் பற்றி யொன்றும் குறிப்பிட வில்லை. எப்படிப்

---

‡ 1932ல் அம்ஸ்டெர்டாம் காங்கிரஸ் நடந்தது. அதற்கு சோவியத்தின் ஏகப் பிரதிநிதியாக கார்க்கி அனுப்பப் பட்டார். கிளம்பி பெர்லினுக்கும் போய்விட்டார், ஆனால் ஜெர்மன், டச்சு சர்க்கார் அவருக்கு அனுமதியளிக்க மறுத்து விட்டது. எந்த ஒரு ரஷ்யப் பிரதிநிதியும் கலந்து கொள்ளாதபடிக்கே அம்மகாநாடு நடத்தப்பட்டது என்பதை இங்கு குறிப்பிடத்தக்கது.

அம்மகாநாட்டில் பேசிய ஹென்ரி பார்புஸ்ஸே என்பவர் ஜெர்மன், டச்சு அரசாங்கங்களின் அந்த தகாத செய்கையை கண்டித்து பேசினர்.

1932ல் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச யுத்த எதிர்ப்பு கமிட்டியிலும் சோவியத் ரஷ்யா உள்பட கார்க்கியை ஓர் முக்கிய அங்கத்தினராக தேர்ந்தெடுத்தார்கள். 1934ல் பின் அது பாஸிஸ்டு எதிர்ப்பு இயக்கமாக மாற்றப்பட்டது.

பார்த்தாலும், பொதுவாக, 'படைஎண்ணங்கள்' ஏதோ சாத்ய மற்றது என்று தான் சொல்ல இருக்கின்றது. ஏனெனில் சிப்பாய்கள் எங்கும் எப்பொழுதும் ஏன் என்று அதன் காரணத்தை சொல்லக் கூடாதென போதிக்கப் பட்டிருக் கின்றார்கள். மீறி அவர்கள் எப்பொழுதேனும் சொல்லக் கூடுமானல்; அதற்கு அவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.

ஜார் சேனையிலிருந்த சிப்பாய்களுக்கு பயிற்சி அளிப்பது பூராவும் ஜெர்மானியர்களைப் பார்த்து அப்படியே காப்பி அடித்ததாகும். சிப்பாய்கள் அவர்களின் தளபதி யிடம்கூட எனக்குத் தெரியாது என்று நேர்மையாக, பட்ட வர்த்தனமான முறையில் பதில் சொல்வதற்கும் உரிமை கிடையாது. எனக்குத் தெரியக்கூடாதென்ற பதில் சொல்லத்தான் அவனுக்குப் போதிக்கப் பட்டிருக்கின்றது. இந்த வார்த்தைகளினுல் சிப்பாய் தன் உரிமையையோ. திறமையையோ, வேறு எந்த ஒரு விஷயத்தையுமோ பற்றி தெரிந்த கொள்ளக்கூடாதவாறு பூர்ஷ்வ நாகரீகம் அவனை தடுத்து, நிபந்தனை போட்டு, மிகக்கேவலமான முறையில் அடக்கி ஒடுக்கி வைத்திருக்கின்றது.

ஓர் மனிதன் சிப்பாய் உடைக்குள் புகுந்துவிட்டால் போதும். அது அவனுக்கு வேறு எதனையும் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற வேலையே இல்லாதபடி ஆக்கி விடுகின்றது அவனை. ஆனுல் அந்த சுபாவத்தில், சிப்பாய் என்ற முறையில், அவனுல் ஒன்றும் தெரிந்து கொள்ளவும் முடியாது. அவன் உண்மையிலேயே ராணுவச் சட்டங் களுக்கு புறம்பாயுள்ள எதனையும் தெரிந்து கொள்ள முடியாத வனுயிருக்கின்ருன். பூர்ஷ்வா படையில் உள்ள சிப்பாயும் ஓர் மனிதனே. ஆனுல் பூர்ஷ்வா ஆட்சிக்கி, அதன் அடக்கு முறைக்கு, விவசாயி தொழிலாளி யாவரையும் பணிய வைக்க இவன் ஓர் கருவியாகிவிடுகிருன். இவனது வர்க்க விரோதி யாலேயே மயக்கப்பட்டு, உணர்ச்சி கெட்டு நிற்கின்ருன். ஐரோப்பிய படையில் உள்ள சிப்பாய் அடிமைத்தனத்தில் வாழ்பவன். விரோதிகளினுல் மயக்கப்பட்டு, அல்பகூலிக்கும் ஓர் மடிசல் ரொட்டித் துண்டிற்கும் அவர்கள் உத்தரவு,

களை நிறை வேற்று கின்றான். அதே மாத்திரத்தில் அந்த சிப்பாய்களும் மனிதர்கள். அவர்களுக்கும் தாய் மார்களும், தந்தையர்களும் உண்டு; சகோதரர் களும் சகோதரிகளும் உண்டு. அவர்கள் உழைத்து அவர்கள் குழந்தைகளுக்கும், சகோதரர்களுக்கும், தாய் மார்களுக்கும், தந்தையர்களுக்கும் உண்ணவும், உடுக்கவும் கொடுத்து அவர் களையும் போஷிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் தந்தை யர்களுக்கும், சகோதரர்களுக்கும் வாழ்வில் கஷ்டம் மிகுதி யாகும்போது, அவர்கள் தங்கள் விரோதிகளை எதிர்த்துப் போராடும் போது, இந்த சிப்பாய்கள் இவர்களது தந்தை மார்களும், சகோதரர்களுமான அக் கலகக்காரர்களை சுடும்படி உத்திரவிடப் படுகின்றார்கள். இவர்கள் சுட்டுத் தள்ளுகின் றார்கள். அந்த அளவிற்கு முதலாளிகள் இவர்களை பேதை களாக்கி விட்டிருக்கின்றனர்.

அரை நூற்றாண்டிற்கு மேலாக ஜினிவாவில் முதலாளி களின் குமாஸ்தாக்கள் ஆயுத பரிஹாரணத்தைப் பற்றி ரகளை செய்தார்கள். இதைப் பொருத்த வரையில், ஐரோப்பிய படைகளிலுள்ள சிப்பாய்கள் காது கேளாத வர்களைப்போல், ஊமையர்களைப் போல் இருந்து விட்டார்கள். அவர்கள் அதைப் பற்றி ஏதாகிலும் சொல்லியிருக்கலாம்: விஷம்போல் ஏறிக் கொண்டு போகும் படைச் செலவுகளைப் பற்றியும், அறிவில்லாது டாங்கிகளுக்கும், பீரங்கிகளுக்கும் அழிக்கப் படுவதைப் பற்றியும், கோடிக் கணக்கான மக்களை பிணங்க ளாயும், அங்க ஹீனர்களாயும், உதவாக் கரைகளாயும் ஆக்கி புது உலகை நாசம் செய்விக்க முதலாளிகள் ஏற்பாடு செய்து வருவதைப் பற்றியும் எல்லாம். ஆனால் சிப்பாய் தெரியாத, சொல்லக் கூடாத, மனிதனாக்கப் பட்டிருக்கின்றான். அந்த வகையில் சிப்பாய்களுக்கு ஒன்றும், ஒரு விதத்திலும் கவலை கிடையாது.

அதுதான் என்றால், மற்ற ஏகாதிபத்திய படைகளில் உள்ள பெரும்பாலான பாட்டாளிகள், முன் சொன்னவர்கள், சரித்திரப் பூர்வமாக, படைகளில் இருந்து கொண்டு மிக இழிவான தொழிலை செய்து வருகின்றனர்.

ஆனால் உலகில் ஒரே ஒரு சேனை உண்டு. சிந்தித்துப் பார்க்கும் உரிமையும், கடமையும் உள்ளவர்கள் அதன் சிப்பாய்கள். அது தான் நம் சேனை; செஞ் சேனை எனப் படுவது. இச் செஞ் சேனையில் உள்ள எவனும் 'எனக்குத் தெரியக் கூடா' தென்று ஒருக்காலும் சொல்ல மாட்டான். அவனுக்குத் தெரியும்: அவன் விரோதியார்? அவன் எங்கே இருக்கிறான்? எது அவசியம்? என்பதெல்லாம்- அந்த விரோதி பிறரின் உழைப்பைச் சுரண்டி வாழ்பவன். சிலந்தி போன்று தான் மட்டும் வாழவேண்டு மென்ற பேராசை கொண்டவன். செஞ்சேனையில் உள்ளவன் யாவும் உணர்ந்தவன். அவன் தன் நாட்டின் பிரஜை; நாட்டிற்கு உரியோன்; நாட்டின் காவலன்; எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டி.

படைக்கு எங்கிருந்து முக்கியமாக ஆள் திரட்டுகின்றார்கள் என்ற கேள்விக்கு கீழ்கண்ட பதில் எனக்குக் கிடைத்தது: "அவர்களில் முக்கியமாக 1914—18 யுத்தத்தில் கொல்லப் பட்டவர்களின் புதல்வர்கள்; பங்கப்பட்ட தந்தை நாட்டிற்கும், தந்தையர் கட்கும் பழிவாங்க நினைப்பவர்கள்" இவர்கள் தான். இத்தகைய சிறுவர்கள் பிரான்சில் ஏராளமாய் இருக்கின்றார்கள். உலகயுத்தத்தில் சம்மந்தப்பட்ட எல்லா நாடுகளும் இத்தகைய பழிகாரர்களை சேர்த்து வருகின்றது. இந்த யுத்த அனாதைகளை, மற்ற அனாதை களுக்கும், பண அடிமைகளுக்கும், கூலிக்கு மாரடிப்பவர்களுக்கும் வேஷதாரி களுக்கும் எதிராக தூண்டி விடப் பட்டு உண்மையை மறைக்கும் பொழுது இவர்களை தூண்டிய மிகக் கேடுகெட்ட அவனைப் போன்ற அத்தகைய பெருங் குற்றவாளியல்ல இவர்கள். யாரும் இப் பிரத்யக்ஷ உண்மையை மறுக்க முடியாது. தூண்டிவிட்டவன் முதலாளி; தனியுடைமைப்பதர்; பொறாமையும் துராசையும் பிடித்த பணப்பேய்; பணத்தையும் அதிகாரத்தையும் சேர்ப்பதிலேயே உழலும் ஓர் துராத்மா. மனிதனைப் போலவேயே இருக்கின்றான். ஆனால் மனிதத் தோற்றங் கூட அதிகம் அவனிடம் காணுதிருக்கின்றது.

அந்த தந்தையர்களின் பழிகாரர்களும், யுத்த அனாதைகளும் மிகக் கொடிய விஷம் நிறைந்த பயல்களின்

கையிலே சுப்பாய்களாய் இருக்கின்றார்கள். விளையாட்டில் சலித்துப்போன இவன் சிப்பாய்களின் தலைகளும், கால்களும் துண்டிக்கப் படுவதைக்கண்டு இன்புறுகிறான். ஓர் சிப்பாய்க்கும் பழிகாரனுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். ஓர் பழிகாரனின் தலை வெட்டப்பட்டால் அதில் விஷத்துச்சமே நிரம்பியிருக்கும். அவன் 'தந்தை நாடு' என்று சொல்வதில் ஏதோ இருக்கிறதென்று நம்ப வைக்கப் படுகிறான்; அந்த தந்தை நாட்டை அவன் பாதுகாக்க வேண்டுமென்றும் நம்ப வைக்கப்படுகிறான். இப்படி அவனை நம்பவைக்கச்செய்வது ஆதிக்கம் படைத்த, பொருப்பற்ற, மனிதத் தன்மையில்லா கொள்ளைக் காரர்களான பெரும் முதலாளிகளினால்.

ஐரோப்பிய தந்தை நாடுகளில் தொழிலாளரின் உழைப்பையெல்லாம் அநீதியாய் சுரண்டப் பட்டதன் விளைவாக பலன் மக்களுக்கு பட்டினியும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்பட்டது. தொழிலாளர்களை மட்டும் பாதித்து விடவில்லை; தேசத்தையே பாழ்படுத்தலாயிற்று.

இங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தின் விளைவைக் கொஞ்சம் சொல்கிறேன்:

ஒரு நாள். ஆகஸ்ட்டு 10 ல் பெர்லின் நகரில்மட்டும் 'கியாஸை' உபயோகித்து தற்கொலை புரிந்து கொள்ளும் ஜனங்களை தடுக்க வேண்டி 15 தடவை தீயணைக்கும் படையினர் கூப்பிடப் பட்டார்கள். இந்தப் புள்ளி விவரம் தண்ணீரில் மூழ்கியோ, சுருக்கு மாட்டிக் கொண்டோ, ரிவால்வரால் சுட்டுக் கொண்டோ, உயரயிருந்து கீழே குதித்தோ தற்கொலைசெய்து கொண்டவர்களை எல்லாம் சேர்க்காத படிக்கி. இத்தகைய தற்கொலைகளுக்கெல்லாம் பொதுவான காரணம் வேலையில்லா திண்டாட்டமாகும்.

எல்லாவற்றையும் விட பூர்ஷ்வா நாடுகளில் ஓர் சட்டம் இருக்கின்றது. அதன் சரியான வாசகம் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அதன் விஷயம் இதுதான். ஒருவன் குற்ற மிழைக்கும் போது அதனை பார்த்துக்கொண்டு ஒருவன்

இருந்து, அவனுக்கு உதவிபுரிய வராவிட்டால் அவனும் அக் குற்றத்திற்கு உடன்ருளியாகக் கருதப்படும் என்பது. நம் நாளில், முதலாளித்துவ சமூகத்தில் சட்டத்தைப் பற்றி பேசுவது குற்றமல்லவென்றறிகிறேன். அது எப்படியும் இம்சிக்கப்பட்டவன் ஓர் பூர்ஷ்வாவாக இருக்கக் கூடுமாயின், பின் அந்த பூர்ஷ்வா இந்த சட்டத்தைப் பற்றி நினைத்துப் பார்ப்பான்.

ஆனல் இது தொழிலாளர்களுக்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும் இழைக்கப்படும் குற்றங்களுக்கு இந்த சட்டத்தை என்றும் அனுசரித்ததில்லை என்பது பிரத்தியக்ஷமானது. எங்கு பார்க்கினும் சரி, இன்று தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ செய்கைகளினுல் தண்டிக்கப் பட்டவர்கள். தாங்களும் சட்டமியற்றி நீதியையும் நியாயத்தையும் பரிபாலிக்க உரிமையுள்ளவர்கள் என்பதை உணரத் தொடங்கி விட்டார்கள். உண்மையிலே அது உணர வேண்டிய விஷயந்தான். முதலாளிகளால் மக்களுக்கெதிராக செய்யப் பட்ட சட்டத்தின் பிரமாண்ட வித்யாசத்தை காண்பவர்கள் அதனை சிந்தித்துப் பார்ப்பார்கள். காலம் வரும். அப்பொழுது யாவற்றையும் எல்லாம் நினைத்துப் பார்ப்பார்கள். மக்கள் வேலையின்றி பசிதாளாது சாகும் போது கோதுமையையும், காப்பியையும் தாரோடு சேர்த்து அடுப்பெரிக்க உபயோகித்ததை; லண்டனில் இருந்த போல்வியன் பிரதிநிதி பட்டாளத்திற்கு, வாடகைக்கு, கொடுத்த ஆள் 10,000 பேர் என்கின்ருன். இப்படி பிரிட்டிஷ் பாவிஸ்டுகள் போல்வியாவுக்கும், பரோகுக்கும் பட்டாளத்திற்கு, பலியிடுவதற்கு, வாடகைக்கு ஆள் கொடுத்ததை; இதுவன்றி நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியான தொழிலாளி வர்ககம் இன்னும் அநேக விஷயங்களை நினைவுக்கு கொண்டுவரும்.

அவர்கள் அந்த மகா ஜனங்கள். அவர்கள் தங்களுக்குள் என்ன நினைக்கின்ருர்கள் என்பதற்கு ஓர் இங்கிலீஷ் நவீனத்தில் காணும் கீழ்கண்ட இந்த வர்ணனை பொருத்தமாகுமென்று நினைக்கின்றேன். அவன் கதா பாத்திரத்தின் வாயிலாய்ச் சொல்கிருன்;—

“கௌரவமாக வாழ்வதற்கு வாழ்க்கையில் அதிக கவனமும், அதிக ஆர்வமும் வேண்டுமெனத் தெரிகிறது. அப்படி வாழ்வது கஷ்டமானதுதான். நான் குறிப்பிடுவது உண்மையில் நாம் சொல்லும் அந்த நாகரீக வாழ்க்கைக்குத்தான். பீஜி தீவுகளில் உள்ளவர்களுடையதோ, அல்லது ஜூலுலாந்தில் உள்ளவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியோ அல்ல. நம் வாழ்விலே எல்லாம் கணக்கிடப் பட்டிருக்கின்றது; முன் விதிக்கப்பட்டிருக்கின்றது; ஒப்புக் கொள்ளப்பட்டும் இருக்கின்றது. இருந்தும் ஜாக்ரதையுடன் வாழவேண்டி இருக்கிறது. நாம் எப்பொழுதும் சும்மா வாழ்வதில்லை; அமைதியாயும் வாழ்வதில்லை. நமக்கு இல்லை என்னும் வாழ்வின் சந்துஷ்டியைப்பற்றி பேசாதிருப்பதும் இல்லை. நாம் நடப்பது கயிறு பாலத்தின்மேல். “ஆமாம், நமக்குப் பின்னால் இந்தப்பக்கம் பந்தோமஸ்தாய் இருக்கின்றது.” இப்படி நாம் சொல்லிக்கொண்டால் தான் நமக்கு சந்தோஷம் ஏற்படும். நீங்கள் எதையும் நினைக்கலாம்: இன்ப வேட்டையாடாமல் இருக்கக்கூடுமானால், உங்களுக்கு உடனேயே எல்லா வற்றிலும் தெவிட்டல் ஏற்பட்டுவிடும்; யாவற்றிலும் பிரியமற்றுப்போகும். அதற்கு மிகுந்த சிரமப் படத்தான் வேண்டும். வாழ்வின் இன்பத்திலே உங்களால் இருக்கமுடியாது. தண்ணீரின் வேகத் திலே நீந்துவீர்களேயானால், அபாயத்திற்கு ஆளாக வேண்டியதுதான். கப்பலில் ஏறி சுக்கானைப் பிடித்து ஒழுங்காக ஓட்டவேண்டுமானால், கஷ்டப் பட்டு உழைத்தாக வேண்டும். கஷ்டம் இதுதான். நீங்கள் வாழ்க்கையை நம்பக்கூடாது. எப்பொழு தும் அதில் கண்ணோட்டமாயிருக்க வேண்டும். அதனை திருத்தி ஒழுங்கு படுத்த வேண்டும். அப்பொழுதான் நமக்கு அந்த சந்தோஷங் கிட்டும். ரேடியோ அல்லது கிராமபோனில் கேட்டு இன்புறும் சில ஜனங்களைப்போல், நீங்கள் ரேடியோ விசைகளை

திருப்பிவிட்டு வைத்திருக்கிற வரையில் அதில் நீங்கள் ரேடியோ கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்வளவுதான். நீங்கள் சும்மா கையை கட்டிக் கொண்டிருந்து விட்டு சங்கீதத்தை கேட்டு ரசித்து விடமுடியாது."

இங்கேதான் உங்கள் வாழ்க்கையின் லக்ஷியம் இருக்கின்றது. வாழ்க்கையின் புயலும், சுழலும் வீசி அடிக்கும்பொழுது. அதை சட்டை செய்யாதபடி கையை கட்டிக்கொண்டு சும்மா இருப்பதற்கு. ஐரோப்பிய மேதாவிகள் எல்லோரும் வாஸ்தவத்தில் மனதார தங்கள் குறைபாட்டை ஒப்புக்கொள்ளும் அளவிற்கு வந்துவிடவில்லை. ஆனால் என்னவோ ஏகாதிபத்திய கவி கிப்ளிங்கின் இங்கிலாந்தில் இந்த தன்னை மறந்த அஞ்ஞானப்போக்கு நன்ருய் வெளிப்படலாயிற்று.

இதனைக்குறிப்பிட்டதோடு, அந்தப்போக்கு பூசணம் பிடிப்பது போல் ஐரோப்பா பூராவுக்கும் பிடித்துப்போய் விட்டது; மெல்ல அழைந்து விட்டதென்பதையும் சொல்லி விடுகிறேன்.

இனி நம் படை எண்ணங்களுக்கு வருவோம். மேலே சிப்பாய்களுக்கு படை எண்ணங்கள் கிடையாதென்று சொல்லப்பட்டது. நான் நினைக்கிறேன், அந்த எண்ணங்கள் ஐரோப்பிய படையில் உள்ளவர்கள் மண்டையில் ஆணி அறைந்தாற்போல் பதிந்திருக்கிறதென்று. அந்தக் காலம் மலையேறிப்போய் விட்டது. படை எண்ணங்கள் இன்னும் ஸ்திரமாய் நிலைபெற்றிருக்கின்றன. இன்று அவைகள் பாஸிஸ ரூபத்தில் தோன்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த எண்ணங்கள் புதிதல்ல. இவைகள் ஜெர்மன் ஆசிரியர்களால் எழுதப்பட்ட சில நூல்களில் பொதிந்து கிடப்பதைக் காணலாம். உதாரணமாக பிரபல சரித்திராசிரியனுன ஹெயின்ரிச் டிரெயிட்சேயின் நூலிலும், பிரபல சித்தாந்தியான பிரெடிரிச் நியேட்சேயின் நூலிலும் அழகுற எழுதப் பட்டிருக்கின்றன. பெனிட்டோ முஸோ

லினி இந்த சித்தாந்தங்களை எல்லாம் அமுல்நடத்தப் பார்ப்ப வன். இத்தாலிய பேரகராதி யொன்றிற்கு அவன் ஓர் கட்டுரை எழுதியிருக்கின்றான். அதிலே பைத்தியக்கார நியேட்சேயின் உபதேசங்களை பிரேமையமாக எடுத்தாள்கின்றான். சமூக சமத்துவம்; நாடுகளின் சகோதரப்பான்மை; இவற்றை எல்லாம் பற்றி இறுமாப்புடன் சொல்கின்றான்.

இந்த முஸோலினி லட்சக்கணக்கான மக்களின் அழிவின்மீது ஏகாதிபத்தியத்தை வாழவைப்பவன்; மனித னின் உயரிய பராக்ரமச்செயல் யுத்தம்தான் என்று யுத்தத்தை வானளாவி போற்றுகின்றான். இப்படித்தான், மரிநெட்டி என்ற எதிர்கால வாதியும் கத்தினன். இந்த பைத்தியக்காரக் கொள்கையைத் தான் எல்லா ராணுவ எழுத்தாளர்களும் சொல்லுகின்றார்கள்.

அவர்கள் அபிப்பிராயத்திலே, யுத்தம் மனிதர்களை மேன்மைப் படுத்துகிறதென்று நினைக்கின்றார்கள். ஆனால் யுத்தத்தில் தோல்வியுற்றவர்கள் இதனை எப்படியும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தோல்வியடைந்த எவனும் வெற்றபெற்றவனிடம் 'நீங்கள் எப்படி என்னை கொள்ளை யடித்து மூடமாக்கி விட்டீர்கள்' என்று சொன்னதை யாரும் கேட்டிருக்க முடியாது. 1914-15ல் ஜெர்மன் வெற்றியைப் பற்றி பெல்ஜியர்களும், பிரஞ்சுக்காரர்களும், அவர்களைப் பாராட்டி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக அந்த கொடுங்கோல் டியூன்களை எதிர்த்துக் கத்தினர் கள்; அவர்களை இரத்த வெறிபிடித்த மகா கொடும் பாதகர்க ளென்று தூஷித்தார்கள். வெற்றி பெற்ற கீர்த்தியைச் சொல்ல வில்லை. தோல்வியடைந்த, நசுக்கப்பட்ட ஜெர்மனி யுங்கூட. வெற்றி பெற்றவர்களைப் பற்றிய மேன்மையையும், வெற்றியையும், தீரத்தையும், புகழ்ந்து ஒன்றுமே சொல்ல வில்லை.

ரஷ்யாவில், மத்தியஸ்தர்களின் நடவடிக்கைகளை கண்யமாக விவரிப்பது ரொம்பவும் ஆதர்ஷிய முள்ளதாகும். பிரிட்டிஷ் துருப்புகள் 26 பாகு பிரதிநிதிகளைச் சுட்டது; செக்கோஸ் லேவேியர்கள் காஸானில் இருந்த தங்கத்தை

திருடிக்கொண்டு போனது; கொர்சனிலிருந்து பிரெஞ்சுக் காரர்களும், கிரேக்கர்களும் காலியான போது 2000 நகர மாந்தர்களை துறைமுக பண்டகசாலைகளில் போட்டுப் பூட்டி அவர்களை சுட்டெரித்தது; இன்னும் ஜெர்மனியர்கள் உக்ரேனில் அடித்த கொள்ளை, புரிந்த அட்டகாசங்கள்; இன்னும் எவ்வளவோ சொல்லலாம். அவைகள் ஐரோப்பிய கலாச்சார நாகரீகத்திற்கு மிக்க அவமானத்தை அளிக்கக் கூடியவை.

அல்லது இன்று வேலையின்றி பட்டினியால் பாதவிக்கும் வெற்றி பெற்ற தோல்வியுற்ற லட்சக்கணக்கான மக்கள் பாஸிஸ்டுகளின் போக்கை ஒத்துக் கொள்கின்றார்களா? இத்தாலிய பாஸிஸம் உலகத்தையே ரோம சாம்ராஜ்யமாக்க கனவு கண்டு கொண்டிருக்கின்றது; பாஸிஸம்தான் ஜெர்மன் மக்களை மனிதவர்க்கத்திலேயே உயர்ந்த நிலைக்கு கொண்டு வருமென்று ஹிட்லர் உபதேசிக்கின்றான்; ஜப்பானில் ஒருவன் வெள்ளையர்கள் எல்லாம் மஞ்சள் பூர்ஷ்வாக்களின் ஆட்சியின் கீழ் சீக்கிரத்தில் வந்து விடுவார்கள் என்கின்றான்; பிரெஞ்சு ஏகாதிபத்ய வாதிகள் ஐரோப்பா கண்டத்தையே சுருட்டி இவர்கள் சட்டைப்பைக்குள் போட்டுக் கொள்ள நினைக்கின்றார்கள். இத்தகைய, இன்னும், இவற்றை எல்லாம் விவரித்துச் சொல்வதற்கு வேறு வார்த்தைகள் கிடையா.

இங்கும், எங்கும் சரி. பூர்ஷ்வாக்கள், மண்டையில் களிமண்ணிறைந்த, முடிதரித்த மதி மூடர்களை சிம்மாதனத்தில் நிறுத்தி வைத்திருப்பதிலே இன்னும் வெற்றி பெற்றுதான் வருகின்றார்கள். ஆனல் இப்படியே இன்னும் ரொம்ப காலத்திற்கும் இருந்துவிட முடியாது. அது சாகப்போகும் ஓர் வர்க்கத்தின் கடைசி இழுப்பு; மிலெச்சத்தனமாகி விட்டது. கொடுநோயின் வேதனையும், வெஞ்சமுமாகும். இந்த சாகப் போவர்களை இலக்கியக் கலைஞர்கள் சித்தரிக்கின்றார்கள், அவர்களை மறவாதிருக்க அவர்கள் பால்யம், இளமை, ஆகிய பருவங்களை படங்களிலே வரைந்து வைத்திருக்கின்றார்கள்!

உலகத்தில் உள்ள பூர்ஷ்வாக்கள் எல்லோரும் அந்த ஒப்பற்ற கடந்த காலத்தைப் பற்றி, அதன் மாறுபாட்டை பார்க்கின்றார்கள்; பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலே,

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், இவற்றிற்காக போராடிய அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கின்றார்கள். அதோடு அந்த இளம் போராட்டத்தை வருந்தத் தக்க ஓர் கெடுதியாக எண்ணுகின்றார்கள். ஆமாம், ஆனால் அவற்றை பிரபுத்துவ ஆட்சிக்கு மாற்றக் கூடுமானால்! இதுதான் முக்கியமாக பாஸிஸ்டுகளின் படை எண்ணங்கள் அவர்களையே குறுக்கிச் செல்கின்றதென்பதற்கு.

ஹிட்லரின் 'வொயெல் இஸ் செர்பியோ பாச்டா' என்ற பத்திரிக்கையில் சமீபத்தில் ஆல்பிரெட் ரோசென்பர்க் என்பவன், பியூத்தனில் ஓர் கம்யூனிஸ்டை சித்திரவதை செய்து கொன்றதாக குற்றஞ்சாட்டி 5 பாஸிஸ்டுகளுக்கு தண்டனை விதித்தது சம்மந்தமாக ஓர் கட்டுரை எழுதியிருக்கின்றான். அது பூர்ஷ்வாக்களின் போக்கையும், மனோபாவத்தையும் பச்சையாய் காண்பிக்கின்றது. அதில் ரோசன்பர்க் சொல்கின்றான்:

"இந்தத் தீர்ப்பு சுதந்திரத்திற்கும், நம் எண்ணத்திற்கும் மிக்க அகாதத்தை ஏற்படுத்துகின்றது. ஆட்சியின் சுதந்திரச் சட்டம் ஒப்புக்கொள்ளுகிறது; மனிதன் மனிதனுக்கு சமம் என்று. இதுதான் அமெரிக்காவிலும் அமுலில் இருக்கின்றது. இருந்தும் அங்கே வெள்ளையர்களுக்கும், மற்ற நிறத்தவர்களுக்கும் இருக்கும் நிறத்துவேஷக் கொடுமை நினைக்கவே முடியாதது. கருப்பர்கள் வெள்ளைக்கார ஸ்திரீக்களை விவாகம் செய்துகொள்ளமட்டும் உரிமை இல்லை என்பதல்ல; அவன் வெள்ளையர்கள் போகும் காரில் கூட பிரயாணம் செய்வதற்கும் உரிமை இல்லை. ஒரு நீக்ரோ ஒரு வெள்ளை மாதை தொட்டுவிட்டால் போதும். அவனை சித்ரவதைசெய்து கொன்று விடுவார்கள். இதற்கு நியாயம் ஒன்றும் கிடையாது. இப்படி அவர்களை பாதுகாத்துக்கொள்ள அது அவசியமாகிறது. யுத்த ஆரம்பத்தில், பிரான்சில் ஜாரேஸ் என்பவன் சித்ரவதை செய்யப்பட்டான். கோர்ட்டு அவனை குற்றவாளியல்லவென்றது;

ஆனல் கிளிமென்ஸியோவின் உயிருக்கு போராடிய அந்த மனிதன் தூக்கிலடப்பட்டான். அந்த இரு வழக்குகளிலும் பிரான்சு தன்நலத்திற்கேற்றாற்போல் தான் நடந்துகொண்டது. ஒரு போலந்துக்காரனை, ஒரு போல்ஷ்விக்கை கொன்றதற்காக 5 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த தீர்ப்பு தன் ஒரு சொந்த நாட்டை பாதுகாக்க வேண்டுமென்பதையே புறக்கணிக்கின்றது. மார்க்கிஸ்டுகளை எதிர்ப்பது போன்று, உலக கவனத்தில் ஈடுபட்டுள்ள லிபரல்களை எதிர்ப்பது தான் எங்கள் குற்றம். எங்களில் ஓர் ஆத்மா மற்றொன்றைப் போலில்லை. ஓர் மனிதன் மற்றவனுக்கு சமதையுள்ளவனல்ல. எங்கள் லக்ஷியம் ஒரே பலமுள்ள ஜெர்மானியன்தான். ஒற்றுமைக் குலேவின் மூலமே ஜெர்மனிக்கு அரசியல் சுதந்திரம் அளிக்கமுடியும்.''

இதிலே பாஸிஸ்டுகளின் மனோபாவங்கள் பிரதிபலிக்கின்றது. பூர்ஷ்வாக்களின் போக்கு எப்போதையும்விட ரொம்ப மிலேச்சத்தனமாயும், தவருயும் ஆகிக்கொண்டு வருகிறது. அவர்களின் அரசியல் மிக்ககேவலமான மனித நாகரீகத்திற்கு ஒவ்வாத, தூர்ச்சாகரவழியிலே இயங்கி கொண்டு வருகின்றது.

கார்க்கி வாழ்க்கை குறிப்பு.

:o:

வருடம்	முக்கிய நிகழ்ச்சிகள்.
1868	மார்ச்சு மாதம் 17-ம் தேதியில் நிழனிநோவ் கோர்ட்டில் (Nizhni-Novgorod) பிறந்தான்.
1872	அவன் தகப்பனார் — மாக்ஸிம் செவிதிவிச் பெஷ்கோவ் — மரணமடைந்தார்.
1878	தாயாரின் மரணம்.
	செருப்புக் கடையில் வேலைக்கு அமர்ந்தான். பின்பினான் வரைகிற வனிடம் வேலை. பின் ரொட்டிக் கிடங்கில் சிற்றாள்வேலை.
1880	கப்பல் ஒன்றில் சமையலறை சிற்றாளாக வேலை பார்த்தான். அங்குதான் படிக்கக் கற்றுக் கொண்டது.
1881–82	லைப்ரரி குமாஸ்தாவாக வேலை பார்த்தான். பறவைகள் பிடித்து ஜீவனம் புரிந்தான்.
1883	ரொட்டிக் கிடங்கில் சிற்றாள் வேலை பார்த்தான்.
1884	உணவுக்கு வழியின்றி, வேலையின்றி காஸானுக்குப் போய்ச் சேர்ந்தான்.
1886	கூத்தாடிகளுடன் சேர்ந்து கூத்தாடிப் பிழைத்தான்.
1887	தெருக்களில் 'குவாஸ்' விற்றான். டிசம்பர் 12ல் தற்கொலை செய்து கொள்ள முயன்றான்.

1888 புரட்சிக்காரர்களுடன் தொடர் பேற்படுத்திக் கொண்டு விவசாயிகள், தொழிலாளர்களிடையே பிரசாரம் செய்தான். பின் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு காஸ்பியன் கடலில் மீன் பிடித்துக் கொண்டு சுற்றித் திரிந்து வயிறு வளர்த்தான்.

1888–9 ரெயில்வே தொழிலாளியாக வேலை பார்த்தான்.

1889 கைது செய்யப்பட்டு நிழனி நோவ் கோரட சிறையில் அடைக்கப் பட்டான். வெளி வந்ததும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு வால்கா, டான், கிரிமியா, காஸ் காஸ் முதலிய பிரதேசங்களெல்லாம் காலால் நடந்தே பிரயாணம் செய்தான்.

1890 ரஷ்யப் பிரபல கதாசிரியரான கொரொலெங்கோவுடன் நட்பு ஏற்படுதல்.

1891 காண்டிபோவ்காவில் அடி பட்டான்.

1892 செப்டம்பர் 'காவ்காஸ்' என்ற டிப்ளிஸ் பத்திரிக்கை 'மேக்கர் சோத்ரா' என்ற அவனது முதல் கதையை "மாக்ஸிம் கார்க்கி" என்ற புனைப்பெயருடன் வெளியிட்டது. அது முதல் அந்தப் பெயரே அவனை சிரஞ்சீவியாக்கிற்று.

1893 சமாராவில் "சமாரஸ்காயா கெஸெட்டா" என்ற பத்திரிக்காலயத்தில் எழுத்தாளனாக இருந்தான்.

1894–5 பல கதைகளும், வியாசங்களும் எழுதி வெளியிட்டான். செல்காஷ், 'பால்கன்கீதம்', போன்ற கதைகள் வெளிவந்தன.

1896 க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு சிகிச்சைபெற கிரிமியாவுக்குச் சென்ருன்.

1897 'மால்வா' 'பிராணிகள் ஒரு காலத்தில் மனிதர்களாயிருந்திருக்கின்றன,' போன்ற பல கதைகளை எழுதினுன்.

1898 சிறுகதைகள் புத்தக ரூபத்தில் இரண்டு பகுதிகளாக வெளிவந்தன.

புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டதற்காக கைது செய்யப்பட்டு டிப்ளிஸ் சிறையில் அடைக்கப் பட்டான். விடுதலையாகியும் அது முதல் சதா போலீஸ் கண்காணிப்பு.

1899 ரஷ்யப் பிரபல இலக்கிய மேதையான ஆண்டன் செக்காவை சந்தித்தான்.

1900 லியோ டால்ஸ்டாயுடன் மாஸ்கோவில் சந்திப்பு.

1901 இரகசிய வெளியீடுகளை எழுதி தொழிலாளர்களிடத்தில் பரப்பியதற்காக சிறைதண்டனை.

டால்ஸ்டாய் போன்ருேர்களின் முயற்சியின் காரணமாக விடுதலை செய்யப்பட்டான்.

1902 அர்ஸமாஸுக்கு நாடு கடத்தப்படுதல். 'அகாடமிக்கு'த் தேர்ந்தெடுக்கப்படுகிருன்.

1905 புரட்சியின் காரணமாக செயிண்ட். பீட்டர்ஸ்பர்க் சிறையில் அடைக்கப்படுதல். சிறையில்தான் "சூர்யபுத்ரர்கள்" என்ற உயர்தர கதையை சிருஷ்டித்தது.

உலகந்திரண்ட எதிர்ப்பைக் கண்டஞ்சிய ஜார் அரசாங்கம் விடுவித்துவிட்டது. பின் வெளிவந்ததும் லெனின் தலைமையின்கீழ் போல்ஷ்விக் கட்சியினரால் நடத்தப்பட்ட "நவஜீவன்" (New Life) என்ற தினசரி பத்திரிக்கையை திறம்பட நடத்தினான். டிசம்பரில் மாஸ்கோவில் நடந்த புரட்சியில் பங்கு கொண்டான்.

1906 புரட்சியின் காரணமாக சர்க்கார் அவனை 'அரெஸ்ட்' செய்ய தேடி அலைந்தது. நண்பர்களின் யோசனையின்பேரில் வெளிநாடுகளுக்குச் சென்று உலக சுற்றுப்பிரயாணம் செய்தான்.

ஐக்கிய அமெரிக்காவுக்குச்சென்று அங்கே ரஷ்யாவைப்பற்றி பிரசாரம் செய்தும், பல பத்திரிக்கைகளுக்கு எழுதியும் நிதி ஏராளமாக வசூலித்து போல்ஷ்விக் கட்சிக்கு அனுப்பினான். அங்குதான் 'தாய்' என்ற நவீனத்தை எழுதியது. அக்டோபரில் உடல் நலமில்லாது போகவே இத்தாலி சென்று காப்ரித்தீவில் தங்கி அங்கே கொஞ்ச காலம் வசிக்கலானான்.

காப்ரித்தீவில் தங்கியிருந்த காலத்தில் 'விரோதிகள்', 'ரஷ்ய ஜார்', 'தோழன்!' 'மஞ்சள் சைத்தான் நகரம்', போன்ற பல நூல்களை எழுதினான்.

1907 லண்டனில் நடந்த "ரஷ்ய சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சியின் (London congress of Russian Social Democratic Party) மகாநாட்டில் கலந்து கொண்டான். அங்கு விஜயம் செய்திருந்த லெனினுடன்

சந்தித்து முதன்முதலாக அவருடன் நெருங்கிப் பழகினான். அது முதற்கொண்டு (கார்க்கி—லெனின்) இவ்விருவரின் நட்பும் அதிகமாய் வளரத் தொடங்கியது. அடிக்கடி சந்தித்தும், அடிக்கடி இருவரும் கடிதப் போக்கு வரத்துக்கள் நடத்தியும் தீவிரமாய் அரசியலில் ஒன்று சேர்ந்து பாடுபடலாயினர்.

1908 லெனின் காப்ரித்தீவுக்கு வந்து கார்க்கியை சந்தித்தல்.

1909 to 1911 பல நூல்கள் எழுதினான்.

"ஸ்வேதா" (நக்ஷத்திரம்) என்ற போல்ஷ்விக் கட்சியினரின் பத்திரிக்கையை திறம்பட நடத்தினான்.

1913 தடை உத்தரவு அரசாங்கத்தாரால் ரத்து செய்யப்பட்டு டிசம்பர் 31ல் ரஷ்யாவுக்கு திரும்பிவந்தான்.

வந்தவுடன் போல்ஷ்விக் பத்திரிக்கையான 'Enlightenment'ன் இலக்கிய ஆசிரியனாக அமர்ந்து இலக்கிய தர்மத்தை நிலை நாட்டினான்.

1914 "என் குழந்தைப்பருவம்" என்ற நூலை எழுதி முடித்தான்.

1915 யுத்த காலத்தில் நடத்தப்பட்ட "Annals" (ரஷ்ய மொழியில் 'லெடோபிஸ்') என்ற பத்திரிக்கையின் தலைமை ஆசிரியன் பதவியைத்தாங்கி இலக்கியத் தொண்டாற்றினான்.

1916–20 பல நூல்களை எழுதி வெளியிட்டான்,

1919 விஞ்ஞானிகளின் பிரதிநிதியாக தூது செல்தல்.

1921 க்ஷயரோகத்தின் காரணமாக, லெனினது வற்புறுத்தலின் பேரில் சிகிச்சைக்காக இத்தாலி சென்று அங்கே சொரென்டோவில் தங்கினான். (1927 வரை அங்கேயே தங்கியிருந்தான்.

1922 "வி. ஜி. கொரொலெங்கோ", "லெயோனிம் ஆண்ட்ரியீவ்" என்ற நூல்களை எழுதினான்.

1923 "என் சர்வகலா சாலைகள்".

1924–27 "வி. இ லெனின்" "சொரென்டோ, இத்தாலி பிரயாணம்" போன்றவைகளும், பல அரிய கட்டுரைகளும் எழுதினான்.

1928 ரஷ்யாவுக்கு திரும்பி வருதல்.

ரஷ்யாவில் "கார்க்கியின் அறுபதாம் ஆண்டு பிறந்த தினவிழா" நாடெங்கும் மிக குதூகலத்துடன் கொண்டாடப் படுகிறது.

1929 சோவியத்தின் நிர்வாக அங்கத்தினராயும், எழுத்தாளர்களின் தலைவராகவும் இருந்து தொண்டாற்றுதல்.

1931 ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக்கமிட்டி "சோவியத்தின் புரட்சி சரிதத்தை" (History of the Civil war in the U. S. S. R.) கார்க்கியின் அபிப்ராயத்திற்கிணங்க வெளியிடத்தீர்மானிக்கிறது.

1932 'யேகர்பலுச்சோவ்' (Yegor Bulichoff) என்ற கார்க்கியின் கடைசி நாடகங்கள் வெளியிடப் படுதல் இதனை மொழி பெயர்த்து அமெரிக்காவிலும், லண்டனிலும் 1937ல் வெளியிட்டிருக்கின்றனர்.

1932 கார்க்கியின் இலக்கிய சேவையின் நாற்பதாம் ஆண்டு விழாவாக (Fortieth Anniversary of his Literary Career) ரஷ்யா பூராவும் கொண்டாடினார்கள். மாஸ்கோவின் ஓர் முக்கிய வீதிக்கு கார்க்கியின் நாமதேயத்தை வழங்கினார்கள். ரஷ்ய சர்க்கார் கார்க்கி பிறந்த ஊரான நிழனி-நோவ் கோரட்டையும் "கார்க்கி-நகரம்" என மாற்றி அமைத்து விட்டார்கள். மற்றும்பல இலக்கிய ஸ்தாபனங்களும் கார்க்கியின் பெயரால் நிறுவப்பட்டது.

1934 சோவியத்தில் நடந்த அகில ரஷ்ய நூலாசிரியர்கள் மகாநாட்டிற்கு தலைமை வகித்தல்.

"சோவியத் இலக்கியம்" என்ற நூலை எழுதினான்.

1936 ஜூன் 18 ஆம் தேதி- மாஸ்கோவில் மரணமடைந்தான். சோவியத் அரசாங்கம் 'அம் மகா மனிதனின்' சவச்சடங்கை நடத்தி வைத்தது. பல லட்சக் கணக்கான மக்கள் சவ ஊர்வலத்தை பின் தொடர்ந்து சென்று அவரை அடக்கம் செய்வித்தனர்.

1938 விசாரணையின் போதுதான் கார்க்கியின் மரணம் டிராஸ்க்கி, புகாரின் கோஷ்டியினரின் துரோகச் செய்கையினால் கார்க்கி கொல்லப்பட்டதென்பது ருஜுவானது.

கார்க்கியின் நாமதேயம் நீடூழி வாழட்டும்!

அவன் நூல்கள் உலகமெங்கும் பரவட்டும்!!

* * *

தொழிலாளர்கட்கு

தோழர்களே !

காலம் நமக்கு ஒப்பற்றது. நாம் ஓர் நிமிஷத்தையும் வீணாக்கல் கூடாது. நாம் சாதிக்க வேண்டிய காரியங்கள் அனந்தம். இதற்கு முன்னால் யாரும், உலகில் எந்த ஒரு நாடும், செய்திராத அளவு அந்த பிரச்சினைகளையும், கஷ்டமான லக்ஷியங்களையும் (சோவியத்) பொதுஜன ஆட்சியிலே செய்தாக வேண்டும்.

நாம் இந்த சாத்தியமான குறுகிய காலத்திலே, பழமை யாவற்றையும் அழித்து புதிய வாழ்க்கையாக எங்கும் இல்லாத முறையில் புதிதாய் சிருஷ்டிக்க வேண்டும். நம் நாட்டு விவசாயத்திற்கு கோடிக்கணக்கான விவசாயிகளின் கஷ்டமிகுந்த உழைப்பைக் குறைக்க அவர்களுக்கு யந்திர சாதனங்கள் அளித்து அதன் மூலம் நிலத்தை செழிக்கச் செய்ய வேண்டும். மற்றும் மழையின்மை, போன்ற இயற்கை விபரீதங்களால் ஏற்படும் விளைவை போக்குவதற்கு அவர்களுக்கு நாம் கற்பிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான மைல்கள் நல்ல ரஸ்தாக்களை அமைக்க வேண்டும்; கிராமங்களின் ஆபாசங்களை போக்கி அவற்றை அழகிய நகரங்களாக நிர்மாணிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களும், வைத்திய சாலைகளும், பொதுஸ்நான கட்டங்களும், சினிமா, நாடகக் கொட்டகைகளும், சலவைச் சாலைகளும், ரொட்டிக் கிடங்குகளும் அங்கே ஏற்படுத்த வேண்டும். இன்னும் சுருங்கக் கூற வேண்டுமானால் அவர்களது நீண்டகால கிராமியப் பழக்க வழக்கங்களை அறிவுள்ளதாக்கி கேவல நிலைமையிலிருந்து அவர்களை நல்ல உயர்ந்த உன்னத ஸ்திதிக்கு சகல துறைகளிலும் கொண்டுவர வேண்டும். நம் இந்த வேற்றுமை மனப்பான்மையை வேரோடொழிக்க வேண்டும். 'பழங்கால' கொடுமைகளிலிருந்து விடுபட வேண்டும். நாம் அவற்றை போதிக்க தகுந்த யோக்கியதையுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் யாவற்றையும் சுயநலப் பற்றற்ற முறையிலே, பொதுநோக்கத்துடன் சிந்திக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். நாம் மகத்தான பிரசினைகளை சாதிக்க வேண்டியிருக்கின்றது. அல்ப, சுய நோக்கங்களுக்கு செவிசாய்த்துக் கொண்டிருத்தல்

கூடாது. நமது பிரச்சனைகள் உலகத்திலே பாகுபாடற்ற சிறந்த, முதல்தர ஓர் சமுதாயத்தை சிருஷ்டிக்க வேண்டும் என்பதுதான். அதிலே ஏழைகளுமிரார்; பணக்காரருமிரார். அடிமைகளுமிரார்; ஆண்டைமார்களுமிரார். வறுமையும் துன்பமும் அடியோடு மறைந்தொழியும்; தனி மனிதன் சேமிப்பும் இல்லாதுபோகும். அதன் அடிப்படையில் எழும் பொறுமையும், வஞ்சகமும், பேராசையும இல்லாதொழியும். நாம் கட்டும் சமுதாயத்திலே ஒவ்வொருவரும் தன் சக்திக்கேற்ற வாறுழைத்து தன் தேவைக்கேற்றவாறு பெறுவர். அவர்கள் ஒவ்வொருவரும் தன் நாட்டின் செல்வத்திற்கு தானே எஜமானன் என்பதை உணர்வர். அறிவின் விசாலவழி எல்லோருக்கும் திறந்துவிடப்பட்டிருக்கும். நாம் ஓர் புதிய மனிதவர்க்கத்தை தோற்றுவிக்க விரும்புகின்றோம். அதற்காக முன்னிருந்தே அவற்றை நாம் செய்து வருகின்றோம்.

எனக்கு வரும் கடிதங்களைப் பார்க்கும்பொழுது ஒவ்வொருவரும் சுயநலம்தான் கேட்டின் பிதா என்பதை இன்னும் அறியாதிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் நம் பாட்டன் முப்பாட்டன்மார்கள் வாழ்ந்த அத்தகைய அர்த்த மற்ற, மடமையான வாழ்விலிருந்து திரும்பாதிருக்கின்றார்கள். உங்கள் மத்தியில் தோழர்களே, அநேகம்பேர் பழமை என்ற நஞ்சுண்டு போயிருக்கின்றார்கள். இது நாட்டுப்புறங்களிலே இன்னும் அதிகமாக தெரிகின்றது. ஆனால் உங்கள் உள்ளத்திலே நீங்கள் நல்லுணர்ச்சியுடன் இருக்கின்றீர்கள். உங்கள் சுற்றுச் சார்புகளிலுங்கூட அந்த ஊரிப்போன சுயநலம் என்பது மாறி வருகின்றது. நீங்கள் உங்கள் உழைப்பின் மூலம் படிப்படியாக அவர்களுக்கு சொல்லித்தர வேண்டும். "கல்லறைதான் கூனலை சொஸ்தப் படுத்தும் என்ற ரஷ்யப் பழமொழியை சொல்லிக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. தொழிலாளர் வர்க்கத்தில் சமதர்ம ஆட்சிதான் அவற்றை சொஸ்தப்படுத்தும்" என்று...

— மாக்ஸிம் கார்க்கி.

மாக்ஸிம் கார்க்கி 1931-ல் மாக்னிடோஸ்ட்ராயில் உள்ள தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஓர் பகுதி.

கார்க்கி எழுதிய நூல்கள்

—:(o):—

(அவற்றுள் சிறந்ததென மதிக்கப்படும் நூல்களின் பெயர்கள் இங்கே தரப்படுகிறது.)

1. "தாய்" (Mother):

தலை சிறந்த நவீனம். உலகின் பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இந்தியாவிலும் பல வருடங்களுக்கு முன் ஹிந்தியிலும், தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஆனால் இந்திய சர்க்கார் அவற்றை பறிமுதல் செய்து விட்டது. தற்போது தமிழில் 'அன்னை' என்ற மகுடத்துடன் வெளிவந்துள்ளது.

2. "என் குழந்தைப் பருவம்"
My Childhood

3. "என் சர்வகலா சாலைகள்"
My Universities:

4. "இருபத்தாறு ஆண்களும் ஒரு பெண்ணும்"
Twentysix men and a girl.

5. "போமா இக்நாட்விச்"
Foma Gordyeef.

(இது தமிழில் வெளி வரும்.)

6. "சாம்ஜின்"
In English Translation entitled: 'The Magnet.'

7. "அர்த்தமொனவ்ஸின் எழுச்சியும் வீழ்ச்சியும்'
Rise and fall of artamonovs.

(in English translation entitled 'Decadence.

8. "வி. இ. லெனின்"
Days with Lenin.
9. "என் துணைப் பிரயாணி"
My fellow traveller.
10. "பால்கன் கீதம்"
Song of the falcon.
11. "விரோதிகள்"
Enemies.
12. "உலகில்"
In the world.
13. "அவர்களில் மூவர்"
The three of them.
14. "செல்காஷ் முதலிய கதைகள்"
Chelkash and other stories.
15. "சூர்ய புத்ரர்கள்" ....நாடகம்
Children of the sun.
16. "பிலிஸ் டைன்ஸ்" ,,
17. "யேகர் பலுசோவ்" ,,
18. "ஆழத்திலே தாழ்வு" ,,
Lower Depths. ,,
19. "A Confession"
20. "The outcasts"
21. "Creatures that once were men"
22. "Gorki through Russia" ...சிறுகதைகள்.
23. "Tales from Gorki"
24. "Reminiscences of Tolstoy"
25. Fragments from my Diary',

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
v	1	காக்கியின்	கார்க்கியின்
„	29	பார்த்தார்,	பார்த்தார்.
x	14	பற்றிக்	பற்றிய
„	15	நற்குணய	நற்குணங்
xiii	4	பேரறிறிஞர்களின்	பேரறிஞர்களின்
„	25	வத்தை	சிறந்த தத்துவத்தை
xiv	1	முற்களும்	முட்களும்
5	15	வாழ்பின்	வாழ்வின்
10	6	அங்கணமே	அக்கணமே
„	20	சில்லறை	சில்லரை
11	2	நின்றுக்	நின்று
19	24	Loconotive	Locomotive.
23	2	காஸான	காஸான்
„	7	சாதாரன	சாதாரண
25	11	வேளையரளாய்	வேலையாளாய்
27	4	வாலரஞன்	வாலாஞன்
28	22	அறிய	அரிய

29	2	துரைமுகம்	துறைமுகம்
40	1	இயலாத்தன்மையினாலேயே	இயலாத்தன்மையிலேயே
71	15	எழுதய	எழுதிய
77	2	கிழனி-கோவ்	கிழனி-ரோவ்
78	5	சமாவிற்கு	சமாராவிற்கு
86	3	கதையை	கதைகளை
88	23	செல்வானாம்.	சொல்வானாம்.
89	2	சேர்தவர்கள்.	சேர்ந்தவர்கள்.
150	12	அதன்	அவன்

5656.